Registered as a Newspaper in Srilanka

வெள்ளிக்கிழமைகளில் உங்கள் கரங்களில்... வார இதழாக மக்கள் கருத்துக்களுடன்!

# முஸ்லிம் குரல்

Muslim Kural صوت المسلم මුස්ලිම් කුරල් தருகை - 20 ரூபா

31 ஒக்டோபர் 2003 - வெள்ளிக்கிழமை ☆ 05 ரமழான் - 1424 ☆ சவடு - 24



# கிண்ணியா – மூதூர் முஸ்லிம் தாயகம் நெருப்பெரியும் பூமியாகி விட்டது!



இன்றைய நிலையில் தினமொரு சம்பவமும் இழப்புமாக திருமலை மாவட்ட முஸ்லிம்கள் காலத்தை கடத்தி வருகின்றனர். புனித ரமழான் உதயமாகிய தினத்தில் கூட, கிண்ணியா மூதூர் முஸ்லிம்கள் மிக மோசமான அடக்குமுறைக்கும் அடாவடித்தனத்திற்குள்ளும் முற்றுகையிடப்பட்டிருந்தனர். தொடர்ந்தும் நிகழ்ந்து வரும் இம்மோசமான முற்றுகை நிலையைத் தகர்த்து - நமது மக்களின் சுதந்திர இயல்பு வாழ்வுக்கு உத்தரவாதம் தரும் எந்த நடவடிக்கையையும் காண முடியவில்லை. எரிவதும் அணைவதுமாக சம்பவங்கள் நடந்தேறிவருகின்றன. பூமிக்கடியில் கொதித்துக் கொண்டிருக்கும் எரிமலையின் கீழ் வாழ்ந்து வருகின்றனர் கிண்ணியா, மூதூர் முஸ்லிம்கள்.

இவ் உண்மைக்கு மாறாக பெருமளவிலான தமிழ் ஊடகங்களும் ஆதிக்க சக்திகளும் தமிழ் மக்களுக்கெதிராக இப்பிரதேசங்களில் முஸ்லிம்கள் திட்டமிட்டு வன்முறையில் ஈடுபட்டு வருவதாக தீவிர பிரசாரத்தில் ஈடுபட்டு வருகின்றன. இந்த பொய்ப்பிரசாரத்தை காணும் மூதூர், கிண்ணியா முஸ்லிம்கள் ஆதிக்க அடக்குமுறைக்கு மத்தியிலும் - தங்கள் மீது கட்டவிழ்த்துப் விடப்படும் தொடர் வன்முறையை - அதன் உண்மையை உலகிற்கு வெளிப்படுத்த வழி தெரியாமல் உள்ளனர். இதுதான் நமது இன்றைய நிலை.

திருமலை மாவட்ட முஸ்லிம்கள் மீது ஏன் இந்த தொடர் அடாவடித்தனங்கள் கட்டவிழ்த்து விடப்படுகின்றன என்ற கேள்வி இன்றைய நமது சமூக அரங்கில் மிகப் பிரதானமானதாகும். திருமலை என்பது மிக முக்கியமான ஒரு கேந்திர ஸ்தானமாகும். விடுதலைப் புலிகளின் அரசியல் ஸ்திரப்பாட்டிற்கு திருமலை மாவட்டத்தை தங்களது பூரண கட்டுப்பாட்டில் வைத்திருப்பது இன்றியமையாத ஒரு தேவையாகிவிட்டது. இதனை நடைமுறைப்படுத்துவதற்கு மறைமுக ஆதரவுச் சக்திகளை வைத்துக் கொண்டு செயற்பட்டு வருகின்றனர் புலிகள்.

திருமலை துறைமுகத்தை சூழவுள்ள பிரதேசங்கள் முஸ்லிம்களின் பாரம்பரியத் தாயகமாகும். முஸ்லிம்கள் பலம்பெற்று வாழும் பிரதேசங்களாகவும் இவை உள்ளன. ஆகவே இப்பிரதேசங்களிலிருந்து முஸ்லிம்களை அகற்றி விடுவதே புலிகளின் பிரதான நோக்கமாக உள்ளது. அதற்கான முன் முயற்சியில் புலிகள் தீவிரமாக இறங்கியுள்ளனர். இப்பிரதேச முஸ்லிம்களின் வாழ்வு மீதான நம்பிக்கையை படிப்படியாக, உளவியல் ரீதியாக சிதைப்பதே தொடரும் இவ் அடாவடித்தனங்களின் பிரதான அம்சமாக உள்ளது.

இவ் இராணுவ அரசியல் தந்திரோபாயம் எதிர்காலத்தில் முஸ்லிம் தாயகப் பிரதேசம் முழுவதும் முஸ்லிம்கள் மீது பாயக் காத்திருக்கிறது - இதனை உணர்வதும், எதிர்கொள்வதற்கு தயாராகுவதுமே முஸ்லிம்களினது உடனடிக் கடமையாகும்.

## நம்மை ஏமாற்றும் அரசியல் நாடகம் இப்போது வெளிநாட்டில் தயாராகிறது!

அரசியல் செய்தியாளர்

இலங்கை முஸ்லிம்களை உள்நாட்டுக்காரன் ஏமாற்றியது போக, இப்போது வெளிநாட்டுக்காரன் ஏமாற்றுவதற்கு தொடங்கிவிட்டான். நமக்கான இந்த ஏமாற்று நாடகம் இப்போது உள்ளூர் வெளிநாட்டு கூட்டுத் தயாரிப்பாக தயாரிக்கப்பட்டு வருகிறது. இடைக்காலசபை விவகாரத்தை பிரதானப்படுத்தி அரசியல் தீர்வு முயற்சியில் முஸ்லிம்களின் அரசியல் உறுதிக்கும், நிலைப்பாட்டிற்கும் காயடிக்கும் வகையில் மேற்கு இப்போது தனது காய்களை நகர்த்தத் தொடங்கி விட்டது.

உலக முஸ்லிம் சமூகத்தின் மீதான மேற்கின் ஆர்வத்தை: நாம் உலக அரசியல் அரங்கில் கண்டு வருகிறோம். பாலஸ்தீனம், ஆப்கானிஸ்தான், ஈராக், திமோர் என முஸ்லிம்கள் மீதான மேற்கின் ஆர்வம் நமது மக்களின் கண்ணீராகவும் இழப்புகளாகவும் அரங்கேறி வருகின்றன. இப்போது இலங்கை முஸ்லிம்கள்மீது அமெரிக்காவுக்கும் பிரித்தானியாவுக்கும் நோர்வேக்கும் திடீரென மட்டில்லாப் பாசம் பொங்கி வழிகிறது. அந்தப் பாசக் கடலில் மூழ்கி முத்தெடுக்க நமது அரசியல் பிரதிநிதிகள் லண்டன் பயணமாகி உள்ளனர்.

புலிகள் தங்களது இடைக்கால சபை தொடர்பான ஆவணத்தை அரசாங்கத்திற்கு கொடுக்கும் தினத்தில் இவர்கள் லண்டனில் நிற்பார்களாம். அதன் பிரதி ஒன்று லண்டனில் இவர்களுக்கு கையளிக்கப்படுமாம்! ஆஹா... அற்புதமான ஏற்பாடு என இதனை நம்மில் பலர் வியக்கலாம்! ஆனால், இதன் அரசியல் என்ன என்பதை நம்மில் பலர் அறிவோம்! இம் முக்கியமான நேரத்தில் லண்டனுக்கு இவர்களை அழைத்து இவர்களுக்கு மூளைச்சலவை செய்து தங்களுக்குச் சார்பானதும்: முஸ்லிம்களின் அரசியல் வாழ்வாதாரத்திற்கு பாதகமானதுமான முடிவினை ஏற்கச் செய்வதே மேற்கின் இன்றைய திட்டமாக உள்ளது.

கடந்த காலத்தில் நடைபெற்ற அனைத்து அரசியல் பேச்சுவார்த்தைகளிலும் முஸ்லிம்களை திட்டமிட்டு ஓரங்கட்டுவதற்கும், முஸ்லிம்களின் அரசியல் குரலை அடக்கி வாசிக்கவைப்பதற்குமான அனைத்து முயற்சிகளையும் நோர்வே செய்துவந்துள்ளது. நோர்வேயோ, கண்காணிப்புக் குழுவோ, சர்வதேச சமூகமோ இதுவரை முஸ்லிம்களின் நியாயமான கோரிக்கைகளுக்கு சாதகமான நிலைப்பாட்டினை வெளிப்படுத்தவே இல்லை. இப்போது தங்களுக்குச் சாதகமான அரசியல் நிலைமையை இலங்கைக்குள் ஏற்படுத்துவதற்கும் சம்பந்தப்பட்ட தரப்புகளை வளைத்துப் போடுவதற்கும் முஸ்லிம்களின் அரசியல் விடயத்தை பாவிக்க மேற்கு திட்டமிட்டு முனைந்துள்ளதை முஸ்லிம் பிரதிநிதிகளின் பிரித்தானிய விஜயம் நமக்கு உணர்த்துகின்றது.

பலஸ்தீன மண் இஸ்ரேலினால் ஆக்கிரமிக்கப்பட்ட கொடுமை மிகு துயர வரலாற்றை தீர்ப்பதாக நாடகமாடி, பலஸ்தீனத்திற்குள் நுழைந்த நோர்வே அமெரிக்காவுக்கும் இஸ்ரேலுக்கும் சேவகம் செய்து, பலஸ்தீன மக்களின் துயரை தீராத கண்ணீர்க் காவியமாக மாற்றிய கைங்கரியத்தை சமாதானத் தூதுவர் முகமூடிக்குள் நோர்வே ஒளிந்து கொண்டு கனகச்சிதமாகச் செய்துமுடித்தது. இதனை முழு முஸ்லிம் உலகமும் நன்கு அறியும். இன்று அந்த வரலாற்றை இலங்கை முஸ்லிம்கள் மீது நோர்வே எழுத முயல்வதை அண்மைய செயற்பாடுகள் நமக்கு திட்டவட்டமாக உறுதிப்படுத்துகின்றன.

இந்த விடயத்தில் முஸ்லிம்களாகிய நாம் உறுதியாகவும் தெளிவாகவும் இருக்க வேண்டியுள்ளது. நோர்வே, பிரித்தானியா, அமெரிக்க டொலரில் உலகம் சுற்றிப்பார்ப்பதையும், அந்த ஆதிக்க அரசுகளின் வலைக்குள் வீழ்ந்து விடுவதையும், இதற்குத் துணை போவதையும் நமது மக்களின் நியாயமான சுதந்திர அரசியல் உணர்விற்கு செய்யும் துரோகமாகவே வரலாறு கணிக்கும். இதில் எவ்வித சந்தேகமுமில்லை.

ரணில் + மேற்கு நாடுகளின் திட்டமிட்ட கூட்டு வேலைத்திட்டத்தில் விடுதலைப் புலிகளை தங்களது வழிக்கு கொண்டு வருவதற்கு முஸ்லிம்களின் அரசியலை மேற்கு தற்போது துரும்புச் சீட்டாக பாவிக்கத் தொடங்கி உள்ளதை நடைபெறும் நிகழ்ச்சிகள் நமக்கு உணர்த்துகின்றன. இந்தக் கறிவேப்பிலை அரசியலிலிருந்து முஸ்லிம்கள் விடுபட்டு சுதந்திர உணர்வு மிக்க மக்களாகவும்; நியாயமான அரசியல் கோரிக்கைக்கு உரித்துடைய தேசிய இனமாகவும், தேசமாகவும் தலை நிமிர்ந்து நிற்க வேண்டிய காலமிது என்பதை சம்பந்தப்பட்டவர்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

பிறருடைய நலன்களை உறுதிப்படுத்தும் அரசியலில் நாம் பலியாக முடியாது. அதேநேரம் முஸ்லிம்களின் நலன்களையும் உரிமைகளையும் உறுதிப்படுத்தும் போராட்டத்தில் தியாக உணர்வுடன் முன்செல்லவும் தயங்கக் கூடாது. நடைபெறும் நிகழ்வுகள் வெறும் சம்பவங்களுமல்ல; நாம் எதிர் கொள்ளவுள்ள எதிர்காலம் பஞ்சுமெத்தையுமல்ல.

## தனித்தரப்பு விவகாரத்தில் ஹக்கீம் சுயநலமாக நடந்து கொண்டார்!

– ஹிஸ்புல்லாஹ் எம்.பி.

தனித்தரப்பு விவகாரத்தில் உறுதியாக நின்றவர்கள் ... தனித்தரப்பு விவகாரத்தில் அக்கறை காட்டியவர் அல்ல. இது எல்லோருக்கும் தெரிந்த விடயம். வடக்கு கிழக்கு பாராளுமன்ற ஒன்றியத்தை உருவாக்கி அனைத்து எம்பிக்களையும் ஒன்றிணைத்து முஸ்லிம்களின் நியாயமான உரிமைகளுக்காகப் போராடுவதற்கு செயற்பாடுகளை முன்னெடுத்தபோது- தனித்தரப்பு விவகாரம் இன்றியமையாத நிலைப்பாடாக எம்மால் முன்வைக்கப்பட்டது.

இதனை பாராளுமன்றத்தில் ஒரு பிரேரணையாகக் கொண்டு வருவதற்கு அனைத்து முயற்சிகளும் எம்மால் மேற்கொள்ளப்பட்டன; பௌஸி எம்.பி. அவர்களின் வீட்டில் கடந்த செப்டம்பர் 24ம் திகதி எடுக்கப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் இம் முடிவு எடுக்கப்பட்டது. இத் தனித்தரப்பு விவாதத்திற்கு அனைத்துக் கட்சிகளினதும் ஆதரவைக் கோருவது எனவும் தீர்மானிக்கப்பட்டது. ஜனாதிபதி, எதிர்க்கட்சி தலைவர், லக்ஷ்மன் கதிர்காமர், ஜே.வி.பி., ஈ.பி.டி.பி., புளொட், ஏனைய தமிழ்க்கட்சிகள், போன்றவற்றை நாம் வடக்கு கிழக்கு பாராளுமன்ற ஒன்றியம் சார்பாக சந்தித்து அவர்களது ஆதரவைத் திரட்டினோம்!



முஸ்லிம் எம்.பிக்கள் அனைவரிடமும் இது பற்றிப் பேசினோம்! பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ள பிரேரணையில் அனைத்து முஸ்லிம் எம்பிக்களினதும் ஒப்பத்தைப் பெற்றே சமர்ப்பிப்பது எனவும் முடிவெடுத்தோம். ஒக்டோபர் 07ம் திகதி பிரேரணை சமர்ப்பிக்கப் படுவதாக இருந்தது- அன்று பாராளுமன்றத்தில் காலை 10.00 மணியளவில் பௌஸி எம்.பி உட்பட நாம் அனைவரும் பிரேரணையில் கையொப்பமிடக் காத்துக் கொண்டிருந்தோம். எங்கள் அனைவரையும் ஏமாற்றிவிட்டு ஹக்கீம் தான் தனியே ஒப்பமிட்டு பிரேரணையை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து விட்டார்! இது மிக மோசமான நம்பிக்கை துரோகமாகும். நாங்கள் அதனைக்கூட பொறுத்துக்கொண்டு நமது சமூக நலன்கருதி தனித்தரப்பு வெற்றிபெற உழைத்தோம்! இப்போது வடக்கு கிழக்கு முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர் ஒன்றியத்தை அழித்துவிட ஹக்கீம், பஷீர் சேகுதாவுதை வைத்து முயற்சிகள் எடுத்து வருகிறார். எம்முடன் பக்கபலமாக ஹரீஸ், அன்வர் இஸ்மாயில், எம்.பீக்கள் உள்ளனர். முஸ்லிம் எம்பிக்களின் ஒற்றுமையைச் சிதைக்கும் ஹக்கீமின் போக்கு சமூகத்திற்கு மிகவும் ஆபத்தாக் மாறிவருவதை உணர்ந்து கொள்வது அவசியம் என முஸ்லிம் குரலுக்கு ஹிஸ்புல்லாஹ் எம்.பி தெரிவித்தார்.



## புத்திர சிகாமணியின் முன்மாதிரி வாய் வார்த்தை மன்னர்களான நமது அரசியல்வாதிகளுக்கு முகத்தில் கரி?

கடந்த தீபாவளி தினத்தன்று தான் அங்கம் வகிக்கும் பொது முன்னணிக் கட்சி ஒரு பேரணியை நடத்துவதைக்கூட தாங்கிக் கொள்ள முடியாது; அச் செயலானது இந்துக்களின் மன உணர்வுகளை பாதிக்கின்றது எனக்காரணம் காட்டி பொது முன்னணியைச் சேர்ந்த புத்திரசிகாமணி எம்.பி. தமிழ் கூட்டமைப்பு எம்பிக்கள் வரிசையில் பாராளுமன்றத்தில் போய் அமர்ந்தது சந்திரிக்காவுக்கு பலத்த தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

யாருமே எதிர்பாராத வகையில்- தனது மக்களின் உணர்வுகளை மதித்து தனது பதவியை துச்சமெனக்கருதி புத்திரசிகாமணி எம்.பி. எடுத்த முடிவு - ஒரு தீபாவளித்திருநாள் சம்பந்தப்பட்ட விடயம்தான். ஆனால் நமது மக்கள் கொல்லப்படும்போதும் நமது மக்கள் அழிக்கப்படும்போதும்; நமது மக்களுக்கு பாதுகாப்பு இல்லாத போதும் நமது எம்.பிக்கள், அமைச்சர்கள் ஆளும் கட்சியானாலும் சரி, எதிர்க்கட்சியானாலும் சரி பதவிகளில் தொங்கிக் கொண்டிருப்பதன் மர்மம் என்ன?

**அன்பார்ந்த முஸ்லிம் குரல் வாசகர்களே! எதிர்வரும் இரண்டு வாரங்களுக்கு 'முஸ்லிம் குரல்' இதழ்கள் வெளிவராது என்பதை மிக்க வேதனையுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்!**

### ரமழான் சிந்தனை அல்குர்ஆனிலிருந்து

இப்பொழுது நிச்சயமாக உங்களில் பலவீனம் இருக்கின்றது என்பதை அல்லாஹ் நன்கறிந்து கொண்டு, (அதனை) உங்களுக்கு இலேசாக்கி விட்டான்; ஆகவே உங்களில் (சகிப்புத் தன்மையும், உறுதியும் கொண்ட) பொறுமையுடைய நூறு பேர்களிருந்தால், (மற்ற) இருநூறு பேர்களை அவர்கள் வெற்றி கொண்டு விடுவார்கள்; (இத்தகைய) ஆயிரம் பேர் உங்களில் இருந்தால் அல்லாஹ்வின் உத்தரவு கொண்டு (மற்ற) இரண்டாயிரம் பேர்களை அவர்கள் வெற்றி கொண்டு விடுவார்கள்; அல்லாஹ்வோ பொறுமையாளர்களுடன் இருக்கின்றான்.

*அல்குர்ஆன் 8:66*


### ரமழான் வேண்டுகோள் 2003

உதவும் கரங்களுக்கு **உதவி** வழங்குங்கள்



எமது நிலையத்தில் அங்கவீனர்களுக்கான விசேட கல்வி முறை, தொழிற் பயிற்சி, உணவு, தங்குமிட வசதி மருத்துவ வசதி அனைத்தும்

இலவசமாகவே வழங்கப்படுகின்றன

தற்போது 250 மாணவர்களோடு 35 ஆசிரிய, ஆசிரியைகள் கடமையாற்றுகின்றனர். எமது ஒரு நாளைய உணவுக்கான செலவு 15,000/= ரூபாய். புனித ரமழான் மாதத்தில் உங்களிடமிருந்து ஸக்காத், ஸதகா நன்கொடைகள் வரவேற்கப்படுகின்றன. காசோலைகளில் The Treasurer, ICPH என எழுதியனுப்புங்கள்

The Treasurer,
ICPH
Doolmala, Thihariya, Sri Lanka.
Tel: 0094 332287840, 2287988
Email: icph@sltnet.lk
Website:www.disabledinsrilanka.org

Advt.

இஸ்லாமிய அங்கவீனர் நிலையம் - திஹாரிய

அங்கவீனம் என்பது இயலாமையல்ல


**இலங்கை முஸ்லிம்களின் சொந்தக்குரல்! சுதந்திரக்குரல்!! ஆதரவு தாருங்கள், வாங்கிப் படியுங்கள், எழுதுங்கள்!**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## நடுத்தீவு இணைப்பு வீதியில் மின்சார வசதியின்றி மக்கள் அவதி

மூதூர் நடுத்தீவையும் அக்கரைச்சேனையையும் இணைக்கும் பிரதான பாலத்தடியில் அதாவது மூதூர் நகர மத்தியிலிருந்து சுமார் 300 மீற்றர் தூரம் வரையிலான வீதி மின்சார இணைப்பின்றி இருளில் மூழ்கிப் போயுள்ளது. இதனால் நடுத்தீவு மக்கள் பல அசௌகரியங்களை எதிர் நோக்கி வருகின்றனர். எனவே இப்பிரதேச மக்களின் நலன் கருதி இப்பாலத்தடி வீதிக்கு மின்சார வசதியைப் பெற்றுத் தருமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளை சமூக நல அமைப்புக்களையும் இப்பிரதேச மக்கள் கேட்டுக் கொள்கின்றனர்.

-எகுநார் நளீம், நடுத்தீவு, மூதூர்.

## மின்சாரவசதி கிடைக்குமா?

பொத்துவிலை அண்மித்த குடாக்கள்ளி, கொட்டுக்கில், செங்காமம் அஸீஸ் நகர், றஹ்மத் நகர், அல் அக்சா பள்ளிவாயில் வீதி ஆகிய பகுதிகளுக்கு இதுவரை மின்சாரம் வழங்கப்படவில்லை. இதனால் இப்பகுதி வாழ் பொது மக்களும், பாடசாலை மாணவர்களும் பெரிதும் இன்னல்களை எதிர்நோக்குகின்றனர்.

பொத்துவில் பிரதேசசபை, பொத்துவில் பிரதேச செயலகம், பாராளுமன்ற உறுப்பினர்கள், சம்பந்தப்பட்ட அமைச்சர்கள் இப்பகுதி மக்களுக்கு மின்சாரம் கிடைக்க ஆவன செய்து இம்மக்களின் வாழ்வுக்கு ஒளியூட்டுவார்களா?

-எம்.எஸ்.எம்.அப்துல் மலிக், பொத்துவில்.

## கற்பிட்டி புத்தளம் பாதை திருத்தப்படுமா?

கற்பிட்டியில் இருந்து பாலாவி வரை செல்லும் பிரதான பாதை மிகவும் மோசமாக பாதிக்கப்பட்டு குன்றும் குழியுமாக காணப்படுவதுடன், மழைக்காலங்களில் பாதை எங்கும் நீர் நிரம்பி காணப்படுவதால் 45 நிமிடத்தில் மேற்கொள்ள வேண்டிய பயணம் சுமார் 2 மணித்தியாலங்கள் செல்வதாகவும் சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கும், அமைச்சர்களுக்கும் இப்பாதை சீர் கேடு பற்றி பல முறை சுட்டிக்காட்டப்பட்டும் இதுவரை எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை என கற்பிட்டி வாழ் பொது மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

-எம்.எச்.எம். சிராஜ், கற்பிட்டி

## திரைப்படங்களும் மாணவ சீரழிவும்

தற்போதைய தொலைக்காட்சிகளில் திரைப்படங்கள் அதிகரிக்கப்பட்டதனால் மாணவர்களுக்கு படிக்க நேரம் ஒதுக்க முடியாது தொலைக்காட்சிகளில் மூழ்கடிக்க கூடிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது. என்றும் இல்லாதவாறு புகைபிடித்தல், கொலை, கொள்ளை, பாலியல் போன்ற இன்னோரன்ன தீய செயலை செய்ய தூண்டுவதோடு இதற்கான வழி காட்டியாகவும் இத்திரைப்படங்களே வழிகோலுகிறது. எனவேதான் இளைஞர்களது விலை மதிக்க முடியாத எதிர்காலம் பாழாகிறது. கல்விப்பீடங்கள் காடையர்கள் தஞ்சம் புகும் இடங்களாக மாறக்கூடிய அபாய நிலை ஏற்பட்டுள்ளது. எனவே மாணவர்களது எதிர்காலத்தை வளப்படுத்த திரைப்படங்களை குறைத்து மாணவ நிகழ்ச்சிகளை சேர்க்க உரியவர்கள் ஆவன செய்யுமாறு வேண்டுகிறேன்!

கே.எல். ஹில்மி, சாய்ந்தமருது - 13

## புத்தளம் நகர மண்டபத்தை அண்டிய கட்டிடத்தைப் பாருங்கள்!



07.10.1988 ஆம் ஆண்டு கட்டப்பட்ட இக்கட்டடம் 5 வருடங்களின் முன் கூரை இடிந்து வீழ்ந்து கட்டிடம் சிதைந்து நிற்கும் அவலத்தைப் பாருங்கள். இக்கட்டிடத்தை கட்டியவர் யார் என்று புத்தளத்து மக்களுக்குத் தெரியும். இப்படியும் கொள்ளை அடிக்கலாமா இந்த அரசியல் வாதி? யாரிடம் சென்று மக்கள் முறையிடுவர்?

எம்.சி.இப்னு மசூத், புத்தளம் நகர சபை வட்டாரம் 06

# வாரமொரு உரைகல் - மருதூர் மெய்யொளி

## பெரும் பேறினைத் தரும் நோன்பினை நோற்போம்

அருள் மாரிகள் வந்திறங்கும் புண்ணியத்திங்களில் நாம் வீற்றிருக்கின்றோம். நன்மைகளை அள்ளித்தரும் உபவாசத்தைப் பூண்டிருக்கின்றோம். நோன்பு நோற்பதன் மூலம் அளவிலாப் பேறுகளை அடைந்து கொள்ளத்தக்கதாக இருக்கின்றது. இதனாற்தான் மனித சமுதாயம் தோன்றிய காலந்தொட்டு இந்த வணக்க வழிபாட்டை இணக்கம் நிறைந்ததாக அறிமுகஞ் செய்து வைத்துள்ளான் வல்ல அல்லாஹ் என்பதை அல்குர்ஆன் இப்படிச் சொல்லுகின்றது.

*"விசுவாசிகளே! உங்களுக்கு முன் இருந்தவர்கள் மீது விதியாக்கப்பட்டிருந்தது போல், உங்கள் மீதும் நோன்பு விதியாக்கப்பட்டுள்ளது; (அதன் மூலம்) நீங்கள் பயபக்தி (தக்வா) உடையவர்களாகலாம்." (குர்ஆன் 2:183)*

இந்த மறைவசனத்தின் மூலம் நோன்பு எனும் வணக்கத்தின் தொன்மையை நாமறிந்து கொள்ளும் அதே வேளை விரதத்தைப் பூண்டு கொள்வதன் மூலம் பயபக்தி நம்மை வந்தடைவதில்லை; மாறாக அப்பக்குவத்தை நமது முயற்சிகள் மூலம் உருவாக்கிக் கொள்வதில்தான் இதன் வெற்றி தங்கி இருக்கின்றது எனும் செய்தியையும் சொல்லுகின்றது.

இறையச்சவுணர்வு என்பது எவ்வளவு தூரம் நம்மோடு ஒட்டி உறவாடுகின்றதோ அவ்வளவு தூரம் நமது வாழ்வில் தூய்மையும், நேர்மையும், உண்மையும் இணைந்திருக்கும். இதனால் நேர்வழி வாழ்வு முறைமைகளும், நல்லவர்கள் என்ற சான்றுரைகளும் உறுதியாகச் சூழ்ந்து கொண்டிருக்கும். ஆகவே, மனிதனின் அகம், புறம் எனும் இரு பக்கங்களும் ஆத்மீக வெளிச்சத்தைக் கொண்டு இலங்கும். உளப்பரிசுத்தம், உடல் ஆரோக்கியம், பொருள் சுத்தம் என இதன் பயன்கள் பரந்தளவில் நம்மை வந்தடைகின்றன.

நாவடக்கம், இச்சையடக்கம், போன்ற பண்பில் ஒரு நோன்பாளி தன்னை உட்படுத்திக் கொள்கின்றார். பொறுமை எனும் பொக்கிஷத்தை உறுதியாக கடைப்பிடித்துக் கொள்கின்றார். பசி, தாகம் போன்ற தேவைகளைச் சிறிது நேரம் புறக்கணித்து, இறை திருப்தியை மட்டுமே ஆதரவு வைக்கின்றார். அதுமட்டுமன்றி, அடுத்தவர்களின் பசி, தாகம், இச்சை போன்றவற்றின் தாற்பரியங்களையும், அதன் மூலம் எதிர்கொள்கின்ற உணர்வலைகளையும் அனுபவரீதியாகவே புரிந்து, தெரிந்து கொள்ளவும் நோன்பு வாய்ப்பளிக்கின்றது.

இதனால் அடுத்தவர் தேவைகளை பூர்த்தி செய்து கொள்ள நம்மால் இயன்ற உதவிகளை நல்குவதற்கு எம்மைத் தயார் செய்து கொள்கின்ற பக்குவத்தையும், சினத்தை ஓரங்கட்டும் தன்மையையும் எம்மில் குடி கொள்கின்றோம். இதனால் நாம் மட்டுமன்றி, நமது சகோதரத்துவத்திற்குரிய அணைப்பையும், இணைப்பையும் ஈகையையும், தியாகத்தையும் வேரூன்றி எம்மில் வளர்த்துக் கொள்கின்றோம்.

உடல் ஆரோக்கியங்கள் பலவற்றுக்குரிய ஒன்றாக நோன்பு தொழிற்படுகின்றது. இதனை வைத்திய துறையினர் சான்றுகளுடன் ஆய்வு செய்து யதார்த்த பூர்வமான விடயம் என்பதை ஒப்புவித்திருக்கின்றனர். நம்மை வந்தடைந்திருக்கின்ற சில நோய்களை தீர்ப்பதற்கான ஓர் அருமருந்தாகவும், இன்னும் சில நோய்கள் எம்மை அண்டிக் கொள்ளாது தடுத்து விடுகின்ற ஒரு கேடயமாகவும் உபவாசம் இருக்கின்றது.

அல்-குர்ஆன் வந்திறங்கியமாதம், பொறுமையை பரிசாகக் கொள்ளும் மாதம், பாவங்களை சுட்டெரித்து புனிதமாக்கிக் கொள்ளும் மாதம், அருட்களையும், நரக விடுதலையையும் பெற்றுக் கொள்ளக்கூடிய மாதம், நமது பொருட்களையும், உடலையும், உள்ளத்தையும் தூய்மையாக்கிக் கொள்ளும் மாதம், அடுத்தவர்களுக்கு ஈந்தும்; அதிக வணக்கங்களில் ஈடுபட்டு நன்மைகளை அதிகம் கொள்ளை கொள்ளும் மாதம், ஆயிரம்மாதங்களை விடவும் கண்ணியமான ஒரு நாளையும் இம் மாதம் கொண்டிருக்கின்றது. இப்படி இத் திங்களின் மாண்புகள் உயர்ந்து கொண்டே செல்கின்றன. அதன் அருள் பேற்றினுள் நம்மையும் இணைத்து நற்பேறு பெறுவோமாக!

## பேரியல், ஹக்கீம், அதாவுல்லா




அஷ்ரஃப்பின் படம் மூன்றாக சிதைந்து உள்ளதை வைத்து கட்சி/அஷ்ரஃப்பின் கொள்கைகள் சிதறடிக்கப்பட்டு விட்டதைக் காட்டுகின்றன. கண்களிலிருந்து கண்ணீர். அது உச்சியில் வடிந்தாலும் அதைப்பற்றிய அக்கறையே இல்லாத நிலை. பேரியல் பொ.ஐ.மு., கட்டுப்பாட்டுக்குள்ளேயே இயங்குவது தெரிகிறது. ஹக்கீம் நடைமுறையில் வித்தியாசமாக உள்ளதைக் காட்ட காலை மாற்றி கீறியுள்ளேன். அவராகவே போட்டுக் கொண்ட கால் கட்டு. அது அதாவுல்லாஹ் பிளவுபட்டு நிற்கிறார். சமூகத் தீர்வுக்கான உருப்படியான திட்டம் அதாவுல்லாவிடம் உள்ளதா? அதனாலேதான் கட்டப்பட்ட மூட்டை. ஆனால், வாக்காளர்கள் நிலைமையோ மிக மோசம். பலவகையிலும் பாதிக்கப்பட்டுள்ளதை காயங்களும், கிழிந்த உடைகளும் காட்டுகின்றன. போதாமைக்கு கைத்தடி வேறு தேவைப்படுகிறது. என்றாலும் கவலையெல்லாம் இவர்களது பிரிவைப் பற்றியே உள்ளது.




## உரிமைக்குரல்!

முஸ்லிம் குரல், முஸ்லிம் மக்களின் உரிமைக்குரல்! இது முஸ்லிம் மக்களின் உள்ளக் குமுறல்களையும், அவர்களது அவலங்கள், அபிலாசைகளையும், தெட்டத் தெளிவாக நாடறியச் செய்யும் குரல் ஒவ்வொரு முஸ்லிமும் அவசியம் படிக்க வேண்டிய பத்திரிகை "முஸ்லிம் குரல்". இப்பத்திரிகை நாடளாவிய ரீதியில், முஸ்லிம்கள் வாழும் எல்லாப் பகுதிகளுக்கும் சென்றடைய வேண்டும்.

முஸ்லிம் மக்களுக்கு இழைக்கப்பட்ட, இழைக்கப்படும் அநீதிகளையும், அதோடு இன்றைய அரசியல் நிலைமைகளையும், முஸ்லிம் அரசியல் வாதிகளின் அசட்டையீனமான போக்குகளையும் சுட்டிக் காட்டத் தயங்காத "முஸ்லிம் குரல்" என்றும் ஓயாது ஒலிக்க வேண்டும் என்பது என் பிரார்த்தனை.

ரி.ஆரிப் சராவுடீன், மட்/கோட்டைமுனை.

## குறையுடன் நிறையையும் கூறுங்கள்!

முஸ்லிம்களுக்கென்றே வரும் "முஸ்லிம் குரல்" பாராட்டத்தக்கது. அது தொடர்ந்து வெற்றியடைய வேண்டுமானால் வாசகர்களின் விருப்பு, வெறுப்பு அறிந்து செயலாற்ற வேண்டும். முக்கியமாக சுட்டிக்காட்டப்பட வேண்டிய விடயம் முஸ்லிம் குரலில் பலர் தொடர்ந்தும் முஸ்லிம் காங்கிரஸையும், அமைச்சர் ஹக்கீமையும் சாடி வருகின்றனர். மருதமுனை எம்.எல்.எம். முஸ்தபா சென்ற வாரம் முஸ்லிம் காங்கிரஸ் சாதித்தது என்ன?" என்று எழுதியது கண்டிக்கத்தக்கது.

அவர் மு.கா. பற்றி அறியவில்லை போலும். நாள்தோறும் கிழக்கு அபிவிருத்தி என்று பத்திரிகைகளில் வந்த வண்ணமிருப்பதை கவனிக்கவில்லையா? "வாழைச்சேனை நஷ்டயீடு, கல்முனை அபிவிருத்தி, ஒலுவில் துறைமுகம், கிண்ணியா பிரச்சினை இவைகளை கவனித்து தீர்த்தது யார்? பொ.ஐ.மு.யா? அல்லது ஐ.தே.க.யா? அல்லது அதாவுல்லாவா? நு.ஆ.வா? ஆகவே மு.காதான் என்றும் வடக்கு கிழக்கிற்கு சேவை செய்த வண்ணமிருக்கிறது. எனவே, இனிமேலும் பத்திரிகை சுதந்திரம் என்று கூறி கண்டவாறு எழுதுபவர்களை கண்டித்தால்தான் முஸ்லிம் குரல் வளர்ச்சியடையும் என்று கூறிக் கொள்கிறேன்.

பதுளை, ஹாலி்ஹுகொட்டுவ,
ஆஷிக் அனீஸ்தீன்.

## சுயநிர்ணய உரிமையைப் பெறுவதற்கு உறுதுணையாக இருக்கிறது!

இலங்கை முஸ்லிம்களின் தனித்துவத்தையும், தன்மானத்தையும் பாதுகாப்பதற்காகவும், முஸ்லிம்களின் சுயநிர்ணய உரிமையையும், சுதந்திரத்தையும் மீளப் பெற்றுக் கொள்வதற்காகவும் இவ் அவனியிலே அலங்காரத்துடன் உலாவரும் எனது உடன் பிறந்த சகோதரன் முஸ்லிம்களின் நண்பன் "முஸ்லிம் குரலே" உனது சேவை தொடர்ந்து கொண்டே இருக்க வேண்டும். முஸ்லிம் தளத்திலே எத்தனையோ பத்திரிகைகள் வலம் வந்தாலும் உனக்கென ஓர் இடத்தை நீ தக்க வைத்து விட்டாய். அதற்குக் காரணம் உனது தனிப் பாணியே!.

உன்னை அந்த எல்லோருக்கும் பொதுவான வல்ல அல்லாஹ் பொருந்தி விட்டான் போலும். உனது தூய எண்ணத்தை இறைவன் நிச்சயமாக பொருந்தி விடுவான். பல வகையான இன்னல்களுக்கு மத்தியில் 23 பிரசவ வேதனையை இனி அனுபவித்த உனக்கு வருவதெல்லாம் வேதனையல்ல. அதன் சாயலே உனது பரந்த உள்ளத்தில் எம்மைப் போன்ற பச்சிளம் பாலகர்களையும் பாலூட்டி வளர்த்து விடு. ஊடக அமைச்சராக இருந்தும் கூட புறக்கணிக்கும் போது நீ மட்டும் ஏன் தூங்க வேண்டும். நீ ஆயிரம் ஆயிரம் ஊடகவியலாளர்களை உருவாக்கிவிடு.

-ஏ.எஸ்.எம். தாணீஸ், தோப்பூர்.

## குறைகளையே குறைகளாகச் சுட்டிக்காட்டுகிறது!

முஸ்லிம்களுக்குள் கட்சி வேறுபாடுகள் இன்றி குறைகளை குறைகளாகவே சுட்டிக் காட்டும் ஒரே பத்திரிகை முஸ்லிம் குரல் என்பதை கண்டு பெருமை பட்டவனாகவும் நன்றி கூறியவனாகவும் உன் பணி இனிதே தொடர வேண்டுமெனவும் பிரார்த்திக்கின்றேன்.

ஏ.பி.எம்.அஷ்ரஃப், ஏறாவூர்.

## மனிதத்தை வளர்க்கிறது!

காலத்தின் சுழற்சியும் வேகமும் மனிதனை நாகரிகனாகக் காட்டினாலும் கூட மனிதத்தை மனிதன் அடையவில்லை என்ற ஆதங்கத்தின் காரணமாகவே எமது எழுதுகோலை எம் துணிவான மனங்கள் மேல் நிறுத்தியவர்களாக சமூகம் மீதான இரக்க சிந்தனைகளை கூட்டு முயற்சியின் உச்சங்களோடு முஸ்லிம் குரலின் ஊடாக வெளிப்படுத்தி வருகிறோம்.

தொடர்ச்சியான வெளியீட்டிற்கு நீங்கள் எதிர்கொள்ளும் சவால்களை யான் அறிந்தேன். தெளிவும், துணிவும் பத்திரிகையைத் தொடர்ந்தும் வளர்த்துச் செல்லும் என்ற நம்பிக்கையோடு விடை தருகிறேன்.

சித்தி றபீக்கா, சம்மாந்துறை.

## உண்மையான உணர்வுகள்

அஸ்ஸலாமு அலைக்கும்.

முஸ்லிம் குரல் வாசகர்களுள் நானும் ஒருவன். எனது உண்மையான உணர்வுகளில் இதுவும் ஒன்று. முஸ்லிம்களுடைய இன்றைய நிலைமைகள், அரசியல்வாதிகளின் கையாலாகாத் தன்மைகளை வெளிக் கொண்டு வருவதில் முஸ்லிம் குரலுக்கு எனது மனமார்ந்த நன்றிகள். முஸ்லிம் குரல் வெற்றி நடைபோட எனது பிரார்த்தனைகள்

ஏ.எஸ்.எம்.சிபான், மெத்தைப்பள்ளி லேன், காத்தான்குடி 03.

## மறுமையில் இறைவனிடம் பதில் சொல்ல வேண்டும்!

முஸ்லிம்களுக்காக முழுமூச்சுடன் தேசிய ரீதியில் அஞ்சா நெஞ்சோடு வெளிவரும் பத்திரிகை முஸ்லிம் குரல்தான். எமது முஸ்லிம் சமூகத்தின் இன்னல்களை தேசிய ரீதியில் வெளிக்கொண்டு வர உழைக்கின்ற பத்திரிகைகளை தொடர்ச்சியாகச் சுடர் விடச் செய்வதற்கு போதிய நிதி வசதியில்லை என்பதை சொல்லித்தான் தெரியக் கூடிய விடயமில்லை.

எமது சமூகத்தின் சுதந்திரம், உரிமைகள் போன்றதனை பெற்றுக் கொள்வதற்காக ஊடகத்துறைகள் அத்தியாவசியமாகவுள்ளது. இந்நிலையை ஒருவாறு இறைவனுடைய உதவியினால் சில தனி மனிதர்கள் செய்து வருகின்றார்கள். குறிப்பாக முஸ்லிம் குரல் அமைப்பைக் கூறலாம்.

வாரப்பத்திரிகையாக வருகின்ற முஸ்லிம் குரலை வாசகர்கள் தினசரிப் பத்திரிகையாக்குங்கள் என்று பல முறை தத்தமது கருத்துக்களை கூறுகின்றதை அவதானிக்கும் போது தேசிய ரீதியில் எமது முஸ்லிம் குரலுக்கான ஆதரவை நாம் கண்டு கொள்கின்றோம். இவ்வாறான சந்தர்ப்ப சூழ்நிலையில் முஸ்லிம் குரலானது சில வாரங்கள் ஓய்வெடுக்கின்றது..... இன்னும் ஓய்வெடுக்கலாமென்ற சந்தேகம் எம்மில் தோன்றாமலில்லை. காரணம் நிதிவசதியின்மை. இக்காரணத்தை நாம் முதலில் நிவர்த்தி செய்ய வேண்டும். அப்போதுதான் முஸ்லிம் குரல் பத்திரிகைக் குழுவினர் மனம்குளிரும். அவர்கள் மிகவும் உற்சாகத்தோடு அவர்களது பணியை முன்னெடுத்துச் செல்வார்கள்.

இலங்கையிலுள்ள முஸ்லிம் அரச உத்தியோகத்தர்கள், ஆசிரியர்கள், அதிபர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள், புத்திஜீவிகள், தனவந்தர்கள் அனைவரும் இப்பத்திரிகையினை வாங்க வேண்டும். இதற்கான நிதியுதவியினை வழங்க வேண்டும். வர்த்தகர்கள் விளம்பரங்களை வழங்க வேண்டும். இப்படியான விடயங்களை எமது சமூகம் இன்றிலிருந்து செயற்படத் தவறுமேயானால் நிச்சயமாக முஸ்லிம் குரல் பத்திரிகை செயலிழந்து போகும் என்பதில் சந்தேகமில்லை.

எம்மில் பலர் இதன் நிலையை உணர்ந்தால் 16 பக்கங்கள் என்ன?... 160 பக்கங்கள் கொண்ட பத்திரிகையை வாரத்திலென்ன தினமும் வெளிக்கொணர முடியும். ஏன் எமக்கு இந்தச் சாதனை..... சரி..... சரி.... சிந்தனையாளர்களே! சிந்தியுங்கள், செயற்படுங்கள், வாரப்பத்திரிகையான முஸ்லிம் குரலை இன்றிலிருந்தாவது இரண்டு வருட காலத்திற்கு அப்பத்திரிகை இடைநடுவில் நின்று விடாமல் துடிப்புடன் எம் சமூகத்திற்காகத் இறைவன் துணையாலும், முயற்சியாலும் வெளிவரட்டும்.

உயிரின் மீது சத்தியமாக முஸ்லிம் குரல் பத்திரிகை வெளிவராமல் போனால்... இதனை வழி நடாத்த, உதவி செய்யக் கூடிய தரங்கொண்ட சக்தி படைத்த அத்தனைபேரும் மறுமையில் இறைவனிடம் பதில் சொல்ல வேண்டும். நமது நசுக்கப்பட்ட குரல்களின் குரல்தான் இது!

அ.கா.மு. றிஸ்வின், மூதூர் - 01

**ஒருவர் ஒரு கருத்தை சொல்லிவிட்டார் என்பதற்காக உங்கள் கருத்தை நீங்கள் சொல்லாமல் இருக்கலாமா?**

நாம் எழுதுவதற்கும், நமது மக்களுக்குள் கருத்துக்களை பரிமாறிக் கொள்வதற்கும் விவாதங்களைத் தொடங்கவும், தொடரவும் தயாராகவுள்ளோம்! உங்கள் கருத்துக்களை சுருக்கமாக எமக்கு எழுதி அனுப்புங்கள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுதலைப் புலிகளுடன் முஸ்லிம் சிவில் சமூகத்தின் சந்திப்புகள் எதனை நோக்கிய நகர்வுகள்?

பாதுஷா

கடந்த இரண்டு மாதகாலமாக முஸ்லிம் அரசியல் அரங்கில் பல்வேறு மாற்றங்கள் நடைபெற்றுள்ளன. அதில் குறிப்பிட்டு சொல்லவேண்டிய மாற்றங்களுள் முதன்மையானது விடுதலைப் புலிகளுக்கும்- முஸ்லிம் சிவில் சமூகப் பிரதி நிதிகளுக்குமிடையிலான சந்திப்புக்களும். இணக்கங்களும் அது தொடர்பான பிரசாரங்களுமாகும். மிக மோசமான முரண்பாட்டுப் புள்ளியில் உள்ள இருதரப்பினரிடையேயும் "பேச்சுவார்த்தைச் சூழல்" கனிந்திருப்பது ஒரு ஆரோக்கியமான விடயம்தான். ஆனாலும் இந்தப் பேச்சுவார்த்தையின் உள்நோக்கமும் விடுதலைப் புலிகளின் அரசியலும் இச்சந்திப்புகள் தொடர்பான மிகப்பெரும் ஐயங்களை முஸ்லிம்கள் மத்தியில் ஏற்படுத்தி வருகிறது.

இந்த நியாயமான சந்தேகங்களை தீர்க்காத வரையில் இப்பேச்சுவார்த்தைகளுக்கு எவ்விதமான அரசியல் அர்த்தங்கள் இருக்கும்என்பதை நம்ப முடியாதிருப்பதை விடுதலைப் புலிகள் முதலில் உணர்தல் வேண்டும். புலிகளுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபடும் முஸ்லிம் சிவில் சமூகப் பிரதிநிதிகள் புலிகளுடன் முதலில் இது தொடர்பான ஒரு இணக்கப்பாட்டிற்கு வருவதும் அவசியமாகும். இவைபற்றிய ஒரு பார்வையை ஏற்படுத்துவதும். இது தொடர்பாக அலசுவதுமே இக்கட்டுரையின் பிரதான நோக்கமாகும்.

இலங்கை முஸ்லிம்களின் அரசியல் தலைமைகளில் ஒன்றான முஸ்லிம் காங்கிரசுடன் ஒரு கூட்டு உடன்பாட்டை புலிகளின் தலைவர் பிரபாகரன் நேரடியாகச் செய்து. அவ்வுடன்பாட்டை செயற்படுத்தாது நிராகரித்துவிட்டு. திடீரென புலிகளின் பிராந்திய மட்டங்களுடன் முஸ்லிம்களின் பிரச்சினைகளை பேசி தீர்வு காண்பதற்கான அதிக அக்கறையை வெளிப்படுத்தி வருவதற்கான காரணத்தை புலிகள் தரப்பு மிகத் தெளிவாக முன்வைக்க வேண்டியுள்ளது. இந்த நிலையில் புலிகளுடன் பேசுவதற்கு முயலும் முஸ்லிம் பிரதிநிதிகள் ஏன் தாங்கள் செல்கிறோம் என்பதையும் தெளிவாக முன்வைக்க வேண்டும்.

முதலில் இவ்விரண்டு தரப்பும் முன்வைக்கும் நியாயமான காரணங்களின் அடிப்படையில் தொடரப்போகும் பேச்சுக்கள் எவ்வளவு நியாயத் தன்மை உடையனவாகவும்; பிரயோசனமானதாகவும் இருக்கும் என்ற முடிவுக்கு நமது மக்கள் வரமுடியும். இவைபோன்ற அம்சங்கள் இல்லாது திடீரென திரையில் ஒரு புதிய படம் ஓடத் தொடங்குவது நமது மக்களை மிகக் குழப்பத்தில் ஆழ்த்தி உள்ளது.

- முஸ்லிம்களின் விவகாரம் தொடர்பாக அண்மைக்காலங்களில் விடுதலைப் புலிகளுக்கு ஏற்பட்டு வரும் சர்வதேச அழுத்தமும். முஸ்லிம்களை தமது கையாள்கைக்குள் வைத்திருக்கின்றோம் என்று விடுதலைப் புலிகள் வெளியில். சர்வதேச சமூகத்திடம் காட்ட முனைவதற்குமான அரங்கு தான் இச்சந்திப்புகளாகும்.
- அணுகுமுறையை புலிகள் மாற்றிக் கொண்டுள்ளார்கள். ஆனால் அடிப்படை மனோபாவமும் நோக்கமும் அப்படியே உள்ளது. நீண்டகாலத்தில் முஸ்லிம்களின் தேசியத் தன்மை. அரசியல் தனித்துவம் என்பவற்றை இல்லாதொழித்தல் அல்லது கருவறுத்தல் என்பது இன்னும் விடுதலைப்புலிகளின் முக்கிய கொள்கையாகவே உள்ளது. முதற் கட்டமாக. முஸ்லிம்களை தமது நிர்வாக அமைப்புக்குள் இடைக்காலசபை நடைமுறைப்படுத்தப்படும் வரை கொண்டு வரும் முயற்சிகள்தான் புலிகளின் தற்போதைய அணுகு முறை மாற்றத்திற்குக் காரணமாகும். இதனைத் தொடர்ந்து தமது அரசியல் அதிகாரத்திற்குள் முஸ்லிம்களைக் கொண்டு வரும் திட்டம் இதன் பின்னே மறைந்து உள்ளது.
- முஸ்லிம் அரசியல்வாதிகளை நம்பி வாழ்வது இனியும் அவசியமில்லை என்ற முடிவிற்கு முஸ்லிம்கள் வருவதிலுள்ள ஆபத்துக்கள் பற்றிய தெளிவு நமது மக்களுக்கு அவசியமானதாகும். இவ்வாறான நிலைமை ஏற்பட வழிசமைத்தவர்கள் நமது அரசியல்வாதிகள்தான். அவர்கள் தமது அரசியல் தலைமைத் துவத்தை இழந்து விட்டார்கள். முஸ்லிம்களும் கள நிலை அழுத்தம் காரணமாக தமது அன்றாடப் பிரச்சனைகளை தீர்த்துக் கொள்வதற்காக விடுதலைப் புலிகளை நேரடியாக நாட வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள். இந்த நிலைமையை புலிகள் தங்களுக்கு சார்பாக வழிநடாத்தப் பார்க்கிறார்கள்.
- உள்ளூர் விவகாரங்களுக்காக முஸ்லிம்கள் கண்காணிப்புக் குழுவிடம் செல்லத் தேவையில்லை. சர்வதேச அளவிற்கு முக்கியத்துவம் மிக்கதாக அவற்றை மாற்றத் தேவையில்லை என்பது விடுதலைப் புலிகளதும் தமிழ் ஆதிக்கசக்திகளதும் உள்நோக்கமாகும். இங்குதான் ஆபத்து உள்ளது. இதனைப் புரிந்து கொண்டதாக புலிகளுடன் பேசும் சிவில் சமூக சக்திகள் இதுவரை இல்லை.
- விடுதலைப் புலிகளின் மறைமுக கட்டுப்பாட்டுக்குள் முஸ்லிம் பிரதேசங்கள் கொண்டு வரப்படல்.
- தமிழ்க்குடிப்பரம்பல் செறிவாக உள்ள விவசாயப் பிரதேசங்களில் உள்ள முஸ்லிம்களின் விவசாயக் காணிகள் மேய்ச்சல் நிலங்களின் கட்டுப்பாட்டை புலிகள் தமக்குக் கீழ் வைத்திருத்தல்
- மீன்பிடி வளங்களைப் பறித்தல். காட்டு வளங்களை பயன்படுத்துவதில் கடுமையான கப்பம் பெறும் வழிமுறைகளில் அதிகாரம் கொண்டிருத்தல் போன்றவற்றிற்கு நமது தரப்பில் முழு அங்கீகாரம் கொடுக்கும் நிலையை நோக்கி விடயங்கள் நகர்த்தப்படுகின்றன. இவைகள் நமது சிவில் சமூகப் பிரதிநிதிகளின் ஒத்துழைப்புடன் இப்போது அரங்கேறுகின்றன

கவனத்திற்கொள்ள வேண்டியவை

1. காணிப்பிரச்சனை, வியாபாரப் பிரச்சனைகள் போன்றவற்றுக்குத் தீர்வு காண்பது என்பதற்குப் பின்னாலுள்ள ஆதிக்க அரசியலைக் கவனிக்காது விட்டுவிடுவதிலுள்ள ஆபத்துக்கள்.
2. தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சனைகளையும் புலிகள் அரசியல் பிரச்சனையாக மாற்றுகின்றார்கள் முஸ்லிம் அரசியல் தலைவர்கள் சிவில் சமூகப் பிரதிநிதிகள் முஸ்லிம்களின் அன்றாடப்பிரச்சனைகளை மாத்திரமல்ல. அடிப்படை அரசியல் பிரச்சனைகளையும் கோட்டை விட்டுவிடுகின்றார்கள்.
3. முஸ்லிம் மக்களின் அன்றாடப் பிரச்சனைகள் குறித்து காத்திரமான அரசியல் அணுகுமுறை முஸ்லிம் அரசியல் தலைவர்களிடம் சிவில் சமூகப் பிரதிநிதிகள் இல்லாமையால் சாதாரண முஸ்லிம் மக்கள் தமது அரசியல்வாதிகளின் எதுவும் செய்யப்படாமை குறித்து விரக்தியுற்று விடுதலைப்புலிகளின் கடுமையான நிபந்தனைகள் அடக்குமுறை அணுகுமுறைகளையும் ஏற்றுக் கொண்டு இணங்கிப் போக வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.
4. இப்படிப்பட்ட வெற்றிடத்தை நிரப்பும் முயற்சிகளுக்குத் தலைமையேற்றுச் செல்பவர்களாக சிவில் சமூகத்தின் சில பிரமுகர்கள் முன்வருகின்றனர். இவர்கள் உண்மையில் சிவில் சமூகச் சக்திகள் அல்ல. அனேகமானவர்கள் அரசியல் ரீதியில் தோல்வி கண்ட முன்னாள் அரசியல்வாதிகளாக உள்ளனர். இவர்கள் குறுக்கு வழியில் புலிகளின் வாலைப் பிடித்து அதிகாரங்களுக்கு வந்துவிடலாம் என்று கற்பனையில் உள்ளனர். இப்படியானவர்களைத் தேர்ந்தெடுத்து விடுதலைப்புலிகள் இவர்களை அணுகுகின்றார்கள். இம் முஸ்லிம் பிரமுகர்கள் விடுதலைப் புலிகளைப் போற்றிப் புகழ்ந்தும் கைகோர்த்தும் உச்சி முகர்ந்தும் கொள்கின்றனர்.
5. முஸ்லிம்கள் மீது புலிகளால் அழிவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் போது அவற்றைத் திரித்துச் செய்தி வெளியிடுகின்ற தமிழ் செய்தி ஊடகங்கள். மேற்படி சமரச முயற்சிகளுக்கு கொடுக்கும் முக்கியத்துவமும் வேகமும் உள்நோக்கம் கொண்டதாகும்.
6. ஹக்கீம் தலைமையை விடுதலைப் புலிகளின் தலைமை பேச்சுவார்த்தைக்கு அழைத்து. உடன்படிக்கை செய்து கொள்ள முயன்றதற்குக் காரணம் அன்றைய சூழலில் அதாவது புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதில் இருந்து. முஸ்லிம் சிவில்சமூகத்தினுள் அரசியல் விழிப்புணர்ச்சியும் அரசியல் செயற்பாடுகளும் முன்னேறிய வடிவத்தில் வெளிப்பட்டு வந்தது. இதனைச் திசை திருப்பவும். நீண்டகாலத்தில் முஸ்லிம் காங்கிரசைத் தனிமைப்படுத்தவும் புலிகள் செய்த முயற்சிதான் அது. ஏனெனில் உடன்படிக்கையிலுள்ள எந்தவொரு அம்சமும் நடைமுறைப்படுத்தப்படாமை இதனை உறுதிப் படுத்துகின்றது.



7. அடுத்து சிவில் சமூகத்திலுள்ள புகழுக்கும் பதவிக்கும் ஆசைப்படுகின்ற சில பிரமுகர்களை சிவில் சமூக சக்திகளாகப் பயன்படுத்தி முஸ்லிம் அரசியல் தலைமையை ஓரங்கட்டும் முயற்சி இப்போது மேற்கொள்ளப்படுகின்றது. இது எந்த சந்தர்ப்பத்தில் என்றால். வடக்கு கிழக்கு முஸ்லிம் எம்பிக்கள் ஒன்றியமாக தம்மை அணிதிரட்டி, தனித்தரப்பு, தனியலகுக் கோரிக்கை நோக்கி முன்னேறிச் செல்லும் ஒரு கட்டத்தில் மேற்படி ஓரங்கட்டும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றது. எப்படியென்றால். முஸ்லிம்களின் இரண்டு அடிப்படைக் கோரிக்கைகளையும் (சமத்துவத்தரப்பு. தனித்துவமான அரசியல் தீர்வு) விடுதலைப்புலிகள் பகிரங்கமாக நிராகரித்து விட்டு. உள்ளூர் அளவில் பிரச்சினைகளின் ஒருபகுதியை தீர்ப்பதுபோலக் காட்டிக் கொள்கின்றனர்.
8. முஸ்லிம்களின் அரசியல் அடிப்படை அம்சங்களை பகிரங்கமாக ஏற்றுக் கொள்ளாத தரப்புகளுடன் மேற்கொள்ளும் எவ்வித இணக்கப்பாடுகளும் உடன்படிக்கைகளும் அர்த்தமற்றவை என்பதுடன். அடக்குமுறைச் செயற்பாடுகளுக்கு அங்கீகாரம் கொடுப்பதாகின்றது. முழுமையைக் கோட்டை விட்டு. பகுதி விடயங்களில் அரைகுறைத் தீர்வு காண்பதில் நிலையான பயன்பாடு எதுவும் கிடைக்காது. இப்படியான அணுகு முறைகளால் நீண்டகாலத்தில் கடுமையான பாதிப்புக்கள் ஏற்படும். புலிகளின் நிர்வாக முறைமைக்குள் படிப்படியே நம்மை ஈர்த்து இறுதியாக அவர்களின் அரசியலுக்குள் நமது அரசியலையும் தனித்துவத்தையும் கரைக்கும் முயற்சிதான் இது. இப்போது பேச்சுவார்த்தைக்குச் செல்பவர்கள் முன்பும் பலமுறை ஏமாற்றப்பட்டவர்களே. இம்முறை மிகமோசமான முறையில் பயன்படுத்தப்பட்டு ஏமாற்றப்படப் போகின்றார்கள்.
9. முன்னர் புலிகளால் இழைக்கப்பட்ட நம்பிக்கைத் துரோகங்களைப் பற்றி இவர்கள் மூச்சுக்கூடக் காட்டவில்லை.

மேற்கூறப்பட்ட விடயங்களை சம்பந்தப்பட்ட தரப்புகள் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும். மக்கள் நடைபெறும் நிகழ்வுகளை விளங்கிக் கொள்ளல் வேண்டும்.

எந்தத் தீர்மானத்திற்கு வருவதற்கு முன்னும் நமது மக்களின் அங்கீகாரம் முக்கியமானதென்பதை கருத்திற் கொள்ள வேண்டும். புலிகள் தரப்பினருடன் பேச்சுவார்த்தையில் ஈடுபடும் இச்சிவில் சமூகப் பிரதிநிதிகள் பேச்சுவார்த்தைக்கு முன்பும், பின்பும் நமது சமூகத்தலைவர்களுடன், உலமாக்களுடன். இளைஞர் பிரிவினருடன் உரையாடுதல் வேண்டும்.

# சாயம் வெளுத்த பிரதிநிதித்துவமும் மரணம் சுமக்கும் கிண்ணியா முஸ்லிம்களும்

இலங்கை அரசுக்கும். தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையே செய்து கொள்ளப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையின் பின்னர் ஆரம்பிக்கப்பட்ட சமாதான முன்னெடுப்பானது கிழக்கில் வாழும் முஸ்லிம்களை சொல்லொண்ணாக் கொடுமைகளுக்கு சொந்தக்காரர்களாக மாற்றிவிட்டிருக்கிறது.

இந்த தொடர்கதையின் ஓரங்கமாக கிண்ணியா மண்ணின் ஓர் பகுதியான மஜீத் புரம் கிராமத்தை கைப்பற்றி அங்கு தமது முகாமை புதிதாக நிறுவி குரங்குபாஞ்சான் என பெயர் சூட்டி இம்மண்ணை தம்முடையதே என்று மார் நிமிர்த்தி புலிகள் நிற்கின்றனர். இத்தோடு அண்மையில் கிண்ணியா பைசல் நகர் அல்-இர்பான் வித்தியாலயம் அமைந்துள்ள காணியில் ஆலங்கேணித்தமிழர்கள் அத்துமீறிக் குடியேற்றியதும் அதன் பின்னர் கிண்ணியா முஸ்லிம்களுக்கும். தமிழர்களுக்குமிடையே ஏற்பட்ட முரண்பாடுகளும் புலிகளின் அக்கிரமப் போக்கை புடம் போடுவதாக உள்ளது. இவை தவிர கிண்ணியா முஸ்லிம்களை கடத்திச் செல்லல், வண்டில் மாடுகளை கடத்திச் செல்வது. கப்பம் கோருவது என்பன முற்றுப்பெறாத தொடர்கதையாக கிண்ணியா மண்ணில் நடந்து கொண்டிருக்கின்றன. இவ்வளவு நடந்தும். நடந்து கொண்டிருக்கும்போதும். கிண்ணியா முஸ்லிம்கள் கலவரத்தினூடே தமது காலத்தை கடத்திக் கொண்டிருக்கும்போதும். தமது பூர்வீக நிலங்கள் புலிகளால் தான்றோன்றித்தனமாக சூறையாடப்படுவதனை கண்டு கொதித்து நிற்கின்ற போதும் கிண்ணியா முஸ்லிம்களின் பிரதிநிதிகள் என பெருமையாகப் பறைசாற்றிக் கொள்ளும் எம்.எஸ். தௌபீக். திடீர் தௌபீக் மற்றும் ஐக்கிய தேசிய முன்னணி எம்.பியான சின்ன மஹ்ரூப் ஆகிய மூவரும் இன்னும் இவை தொடர்பில் எவ்வித நிலைப்பாடுமின்றி பேசா மடந்தைகளாக இருப்பது குருதி கொப்பளிக்க வைப்பதாக உள்ளது. ரோம் நகர் எரிந்து கொண்டிருக்கையில் நீரோ மன்னன் பிடில் வாசித்துக் கொண்டிருந்தான் என்பதாகவே திருமலை பாராளுமன்ற உறுப்பினர்களின் நிலைப்பாடு உள்ளது. திருமலை முஸ்லிம்களின் பூர்வீக பூமி முழுமையாக சூறையாடப்பட்டு விடுமோ என்ற ஆபத்தான நிலையை அடைந்துள்ளது. பலஸ்தீன புனித பூமியை இஸ்ரேலிய யூதக் கூட்டம் கொஞ்சம் கொஞ்சமாக ஆக்கிரமித்துக் கொண்ட ஈன வரலாறு கிண்ணியா முஸ்லிம்களின் பூர்வீக பூமியிலும் புலிகளால் எழுதப்பட்டுவிடுமோ என்ற ஆதங்கமும் ஆத்திரமும் இப்போது தோன்றியுள்ளது.



குரங்குபாஞ்சான் பிரச்சினை இவ்வாறிருக்க அண்மையில் கிண்ணியா பைசல் நகர் பதற்றத்தை சந்தித்தது. கிண்ணியா பைசல் நகர் அல்-இர்பான் வித்தியாலயத்துக்கு சொந்தமான காணியில் தமிழ் மக்களைக் கொண்டுவந்து திடீரெனக் குடியேற்றியதால் முஸ்லிம்-தமிழ் மக்களிடையே பிரச்சினை ஏற்பட்டு அது கைகலப்பில் முடிந்தது. உண்மையில் 1991 முதல் இயங்கிவரும் இப்பாடசாலைக்கு மொத்தமாக 5 ஏக்கர் 25 பேச்சர்ஸ் காணி ஒதுக்கப்பட்டுள்ளது. நில அளவைத் திணைக்களத்தின் 1997ம் ஆண்டின் வரைபட இலக்கம் FTP6ன் தார் இலக்கம் 190 இதற்கு தெளிவான ஆதாரமாகும்.

கடந்த 2003.09.22ம் திகதி இப்பாடசாலையில் நடந்த விஷேட வைபவமொன்றில் மாகாணக்கல்விப் பணிப்பாளரின் விதப்புரைக்கிணங்க கிண்ணியாப் பிரதேச செயலாளர் எம்.சீ.எம். சரீபினால் ஆதாரங்கள் வைக்கப்பட்டு மாகாண காணி ஆணையாளர், மத்திய அரசுக்காணி ஆணையாளர் ஆகியோரின் எழுத்து மூல அனுமதியின் பேரில் காணி உறுதி தயாரிக்கப்பட்டு அவரால் மூதூர் வலய கல்விப்பணிப்பாளரிடம் அன்றைய வைபவத்தில் உறுதிகையளிக்கப்பட்டது.' இந்த வைபவத்தில் பா.உ.. திடீர் தௌபீக் பிரதம அதிதியாக கலந்து கொண்டிருந்தார். பல்லாயிரக்கணக்கான மக்களும் பங்குபற்றியிருந்தனர்.

இச் சம்பவத்தின் பின்னரே தமிழ் மக்கள் இக்காணியில் அத்துமீறிக் குடியேறியிருந்தனர். குமுறி எழுந்த முஸ்லிம்கள் இப்பிரச்சினையில் அன்றைய உறுதி கையளிக்கும் வைபவத்தில் பிரதம அதிதியாக கலந்து கொண்ட திடீர் தௌபீக் தலையிட்டு தீர்த்து வைப்பார் என எதிர்பார்த்தனர். ஆனால் அது நடக்கவில்லை.

உண்மையில் திடீர் தௌபீக் அந்தப் பிரச்சினையில் தலையிட்டு சுமுகமாக தீர்த்துவைத்திருக்கலாம்.. ஏனெனில் குறித்த அல் இர்பான் வித்தியாலயக்காணி உறுதி அவர் முன்னிலையிலேயே வழங்கப்பட்டது என்பதற்கு அவர் ஒரு கண் கண்ட சாட்சி. அவ்வாறிருந்தும். இர்பான் வித்தியாலய காணியில் தமிழர்கள் அத்துமீறிக் குடியேறியபோது திடீர் தௌபீக் எதுவித அக்கறையையும் எடுக்கவில்லை.

ஏனிந்த கோழைத்தனமும். ஈனத்தனமும். தனக்காக நம்பி வாக்குப்போட்ட மக்களை நட்டாற்றில் சிக்க வைக்கும் இந்த நாடகம் எத்தனை நாளைக்கு? திடீர் தௌபீக் மட்டுமல்ல ஏனைய எம்பிமாரும் இந்தப் பிரச்சினை தொடர்பில் எதுவித அக்கறையான நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை. சொன்னால்

⇨ 08

## பிரமுக 'வங்கியைத் திறக்க இலஞ்சம் கேட்ட அமைச்சர்

பெரும் நிதி மோசடியில் ஈடுபட்டதால்; மத்திய வங்கியால் மூடப்பட்ட பிரமுக வங்கியின் தலைவர் வெளிநாடொன்றுக்கு தப்பிச் சென்று வாழ்ந்து வருவது தெரிந்ததே. இவ்வங்கியை மூடிவிடுவதற்கான உத்தரவை தடை செய்வதற்கு தனக்கு 5 கோடி ரூபாய் தரவேண்டுமென அரசாங்கத்தின் முக்கிய அமைச்சர் ஒருவர் கேட்டதாக வெளிநாட்டில் வசித்து வரும் பிரமுக வங்கியின் தலைவர் அண்மையில் வெளியிட்ட செய்தி ஒன்றில் குறிப்பிட்டிருந்தார். அரசாங்கத்தரப்பில் பெரும் குசு குசுப்பை இச்செய்தி ஏற்படுத்தி உள்ளதாம். இப்பணத்தை தான் கொடுத்திருந்தால் தனது வங்கி மூடப்பட்டிருக்காது என பிரமுக வங்கித் தலைவர் அமைச்சரின் பெயரைச் சொல்லியே குறிப்பிட்டிருக்கிறார்.

## சந்திரிகா, ஜே.வி.பி. பேச்சுவார்த்தை மீண்டும் தொடங்கியது!





திடீரென முறிந்த சந்திரிகா ஜே.வி.பி. பேச்சுவார்த்தை மீண்டும் தொடங்கப்பட்டிருப்பது புதியதொரு தேர்தலை நோக்கித்தான் என்பது இப்போது அரசாங்கத்திற்கு உறுதியாக தெரிந்து விட்டதாம்! ஆளும் தரப்பிலிருந்து சிலரை சந்திரிகா தரப்பு வலைவீசித் திரிய; சந்திரிகா தரப்பிலிருந்து 10க்கும் மேற்பட்டோரை ஆளுந்தரப்பு வலைவீசிப் பிடித்துவிட்டதாம். இதனால் சந்திரிகாவின் ஆட்சி மாற்றம் கனவாகிப்போய்விட்டதாம்! இதனால் இரண்டிலொன்று பார்த்து விடுவதில் அம்மையார் தீவிரமாக இறங்கிவிட்டாராம்!

அடுத்த பொதுத் தேர்தல் வரப்போகிறது. பாவம் நமது முஸ்லிம் எம்.பிக்கள் பொறுத்திருந்துதான் பார்ப்போம் அவர்களின் நிலையை!

## ரணிலை சாடத் தொடங்கியிருக்கும் விடுதலைப் புலிகள்

ரணிலை நல்லவர். வல்லவரென உரைத்து வந்த புலிகளின் கருத்துக்கள் இப்போது ரணிலுக்கு எதிராக காட்டமாக வெளிவரத் தொடங்கியுள்ளதாம்! சர்வதேச நெருக்கடியை புலிகளை நோக்கி திருப்பி விடுவதில் ரணிலின் சாமர்த்தியம் ஓரளவு வெற்றி பெற்று வருவதும். அண்மைய இந்திய விஜயமும் புலிகளுக்கு பலத்த ஏமாற்றத்தையே தந்திருக்கிறதாம். எதிர்வரும் நவம்பர் 4ஆம் திகதிய ரணிலின் அமெரிக்க விஜயம் புலிகளைப் பொறுத்தவரையில் யுத்தத்தை தவிர்க்க முடியாத நிலைப்பாடாக மாற்றியுள்ளதாம்!

இந்தச் சமாதான காய் நகர்த்தலில்? ரணிலா பிரபாவா வெற்றி பெற்றார் என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிச்ச வாசல்

## மோனிக்காவின் கதை

ஆங்கிலத்தில்: ஜேர்ணி டு இஸ்லாம் தமிழில் : அபூ அஹ்ஸன்

தொழிநுட்பவியல் மேம்பாடடைந்த ஜப்பானியச் சூழலின் பின்னணியில் நான் பிறந்தேன். எந்தக் கவலைகளுமில்லாத எல்லா வசதிகளும் நிறைந்த குடும்பத்தில் அமைதியான சூழலில் வாழ்ந்தேன். படிப்பதற்கும் தொழில் செய்வதற்கும் எல்லா வகையான உந்து சக்தியும் குடும்பத்தில் எனக்குக் கிடைத்தது. மகிழ்ச் சிக்கும் சுதந்திரத்துக்கும் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்குமான எல்லா வாயில்களும் எனக்காக எப்போதும் திறந்தேயிருந்தன.

ஜப்பானின் ஏனைய குடும்பங்களைப் போலவே எனது குடும்பமும் புத்த மதத்தைப் பின்பற்றி வந்தது. ஆனாலும் சிறுவயதிலிருந்தே மதத்துடனான எனது தொடர்பு மிகக் குறைவானதாகவே இருந்தது. எனது பெற்றோரும் கூட இது குறித்துக் கவனம் செலுத்தவில்லை. எனது சிறுவயதிலிருந்து பிரபஞ்சம், உண்மை நிலை, வாழ்க்கை வட்டம் குறித்து சில வினாக்கள் எனக்குள் இருந்தன. எனது இருபது வயதில் எனது கல்லூரிப் படிப்பை முடித்தும் கூட அவ்வினாக்கள் என்னைத் தொடர்ந்தே வந்தன. ஜப்பானிய விமான சேவையில் தொழில் பெற்று விமானச் சிப்பந்தியாகக் (எயர் ஹொஸ்டஸ்) கடமை செய்யத் தொடங்கினேன். தொழிலின் மூலமாக அமைதியையும் வாழ்வின் அர்த்தத்தையும் கண்டு கொள்ளலாம் என்று நான் நம்பியிருந்தாலும் ஒரு மிகப் பெரும் வெறுமையை எனது வாழ்க்கையில் உணர்ந்தபடியேயிருந்தேன். எனது வாழ்க்கையில் ஏதோ ஒன்றைத் தவற விட்டு விட்டேன் என்ற ஒரு அநாதரவான நிலையில் அது என்ன என்று கண்டு பிடிக்க வேண்டும் என்று ஆவலுடனேயே இருந்தேன்.

எல்லாம் வல்ல அல்லாஹ் 1988ல் எகிப்தில் உள்ள ஒரு சுற்றுலாத்துறை நிறுவனத்தில் ஒரு வருடம் ஜப்பானியத் தூதுக் குழுவுக்கு மொழி பெயர்ப்பாள்ராகக் கடமையாற்றும் வாய்ப்பை எனக்கு ஏற்படுத்தினான். எனது புதிய தோழமைகளின் உதவியுடன் இஸ்லாம் பற்றிக் கற்பதற்கு வாய்ப்பு உண்டானது. எகிப்தில் எனது கடமை முடிந்து நான் ஜப்பான் திரும் பியதும் இஸ்லாத்தைப் பற்றி மேலும் கற்க வேண்டும் என்று தீர்மானத்துக்கு வந்தேன். அதில் வாழ்க்கை முழுவதும் என்னைத் தொடரும் கேள்விகளுக்கு பதில் இருக்கிறது என்று நம்பினேன்.



பாடசாலையிலும் தொலைக் காட்சி மூலமும் நான் அது வரை இஸ்லாத்தைப் பற்றித் தெரிந்து வைத்திருந்த அனைத்தும் எல்லைக்கு அப்பாற்பட்டவை என்பது மாத்திரமல்ல, மிக மோசமாகத் திரித்துக் கூறப்பட்டவையுமாகும் என்பதை அறிந்து கொண்டேன். அவை யாவும், இஸ்லாமிய உலகானது வன்முறை கொண்டது என்று அநேகமான ஜப்பானிய மக்கள் நம்பியிருப்பது போன்ற தகவல்களாகத்தான் இருந்தன.

ஜப்பான் திரும்பியதும் டோக்கியோவிலுள்ள இஸ்லாமிய நிலையத்துக்குச் சென்று அங்கிருந்து ஜப்பானிய மொழியிலான அல்குர்ஆன் பிரதியொன்றைப் பெற்றுக் கொண்டேன். மூன்று வருடங்களாக அந்நிலையத்துக்கு அடிக்கடி சென்று அங்குள்ள அறிஞர்களிடம் கற்றுக் கொண்டேன். இக்காலப் பிரிவில் இஸ்லாம் குறித்த அறிவும் விளக்கமும் குறிப்பிடத்தக்க அளவு முன்னேற்றம் கண்டது. நீண்ட காலங்களாக என்னில் இருந்து வந்த தத்துவார்த்த வினாக்களுக்கெல்லாம் இந்த அழகிய சமயத்தில் பதில் இருப்பதைக் கண்டு கொண்டேன்.

இஸ்லாத்தில் பெண்கள் நிலை குறித்துக் கருத்தூன்றினேன். நான் ஏற்கனவே தெரிந்திருந்ததை விடவும் முஸ்லிம் பெண்கள் கண்ணியம் வழங்கியும் பாதுகாக்கவும் படுகிறார்கள் என்பதையும் அவளது உணர்வுகளும் சிந்தனையும் கௌரவமும் மதிக்கப் படுகின்றன எனவும் தெரிந்து கொண்டேன். எனக்கு உண்மையின் பால் வழிகாட்டும் படியும் அது குறித்து மேலும் அறிவைத் தரும்படியும் நான் தனிமையில் அல்லாஹ்வை வேண்டினேன். ஒரு ஒழுங்கமைப்பு முறையில் இவ்வுலகை அமைத்து வைத்திருக்கும் அல்லாஹ்வைப் பற்றிச் ஆழ்ந்து சிந்திக்கத் தொடங்கினேன். மரங்களையும் பூக்களையும் பறவைகளையும் மிருகங்களையும் வடிவமைக்கப்பட்டிருக்கும் கலை நயங் குறித்தும் எல்லாவற்றையும் சமநிலைப்படுத்தி ஆளும் அவனது வல்லமை குறித்தும் சிந்தித்தேன். அல்லாஹ் இரண்டு நூல்களை நமக்குத் தந்திருப்பதாக நான் உணர்ந்தேன். ஒன்று, பேசுகின்ற நூலான குர்ஆனாகும். மற்றது, பேசாத நூலான பிரபஞ்சமும் அதன் எல்லாக் கற்பனைகளும் மாட்சிமைகளுமாகும்.

அல்லாஹ்வை அவனது படைப்புக்களில் நான் கண்டேன். எனது இதயத்தாலும் உணர்வுகளாலும் இஸ்லாத்தை நோக்கி நான் வழிகாட்டப்பட்டேன். என்னில் திருப்தி நிறையத் தொடங்கியது. எனது ஈமான் எனும் நம்பிக்கை வளர ஆரம்பித்தது. ஒவ்வொரு கணமும் அல்லாஹ் என்னுடன் இருக்கிறான் என்ற உணர்வு என்னில் மேலோங்கியது.

எல்லாம் வல்ல அல்லாஹ்வின் உதவியால் விமானச் சிப்பந்தியாக ஒரு வருடம் இந்தோனேஷியாவுக்குப் போவதும் வருவதுமான பயணத்தில் அமர்த்தப்பட்டேன். அப்போது இந்தோனேஷியர்களின் சுபாவங்களையும் அல்குர்ஆனை அவர்கள் தினமும் கடைப்பிடித்தொழுகும் நெறியையும் என்னால் காண முடிந்தது. அவ்வப்போது அவர்களிடம் பேசுவதில் எனக்கு மேலும் மேலும் நம்பிக்கையும் அறிவும் என் பாதையில் என்னை முன்னோக்கி இட்டுச் சென்றது.

எனது குடும்பத்தாருடன் பல சிக்கல்களை நான் எதிர் கொண்டேன். எனக்கு முன்னால் என்ன தடைகள் வந்தாலும் அதை எதிர் கொள்ள நான் ஒரு முஸ்லிம் என்ற வகையில் மிக உறுதியாக இருந்தேன்.சரியான நேரத்துக்கு ஐந்து வேளை தொழுவதற்கு ஆரம்பித்தேன். தொழுகையைச் சரியாக நிறைவேற்றிக் கொள்வதற்கு வசதியாக அல்குர்ஆன் வசனங்களை மனனம் செய்வதில் மிகக்கடுமையாகப் பயிற்சி மேற்கொண்டேன்.

1991ம் ஆண்டு எகிப்துக்குப் பயணம் மேற்கொண்டேன். புகழ்பெற்ற அல் அஸ்ஹர் சர்வகலாசாலையில் நான் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டதாக அறிவித்தேன். எகிப்திலேயே ஒரு தொழிலைத் தேடிக் கொண்டு ஒரு எகிப்திய முஸ்லிமைத் திருமணம் செய்து கொண்டேன். எங்களுக்கு அழகான ஒரு பெண்குழந்தையும் பிறந்தது. குர்ஆனில் குறிப்படும் ஒரே ஒரு பெண்ணின் பெயரான மர்யம் என்று அக்குழந்தைக்குப் பெயரிட்டோம்.

எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே. நான் இப்போது எனது புதிய மதத்தில் புதிய முஸ்லிம் குடும்பத்தில் மிகச் சந்தோஷமாக வாழந்து வருகிறேன். எனது அதிகமான நேரத்தை குர்ஆனை மனனம் செய்வதில் செலவிட்டு வருகிறேன். நேரம் கிடைக்கும் போதெல்லாம் நானும் எனது கணவரும் குர்ஆனையும் இஸ்லாமிய நூல்களையும் இணைந்து படிக்கிறோம்.

ஒரு நாள், அல்லாஹ் உதவியால் எனது குடும்பத்துக்கு வழிகாட்டும். ஜப்பானிய மக்கள் வளர்ச்சியடைந்த தொழில் நுட்பம், நாகரிகம் என்பவற்றுக்கு அப்பாலும் தங்களது வாழ்வில் முக்கியமான ஒன்றை இழந்திருக்கிறார்கள். சரியான விளக்கம் அவர்களுக்கு ஏற்படுமானால் மிகப் பெருந் தொகையில் அவர்கள் இஸ்லாத்தில் இணைந்து கொள்வார்கள். அவர்கள் எல்லோரும் என்னைப் போன்றே சில விடைகளைத் தேடிக் கொண்டிருக்கிறார்கள். அவ்விடைகள் அவர்களுக்கு மிக மிக அவசியமானவைதான் என்பதில் எந்தச் சந்தேகமும் கிடையாது.

# சினிமாவின் சீரழிவில் முஸ்லிம்களின் நிலை

இன்றைய நவீன காலகட்டத்தில் முஸ்லிம்களின் நிலை மிகவும் பரிதாபமான நிலையாக இருக்கின்றது. உலகெங்கும் அவலக்குரல் கேட்கின்றது. நான் யார் என்று தெரியாமல் தன்னையே வீழ்த்தி மிகவும் துன்பத்தில் ஆழ்த்திய வண்ணம் பல துன்பகரமான சூழ்நிலையில் முஸ்லிம்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். இதற்கு அடிப்படைக் காரணம் தன்னை படைத்த இறைவனுக்கும் முஸ்லிம்களுக்கும் உள்ள மிக தூர இடைவெளியாகும்.

ஏனெனில் இன்று எந்தவொரு வீடுகளிலும் சினிமா கொட்டில்களாக ஆக்கப்பட்டு அதில் வரும் மனிதனுக்கு தீங்கை ஏற்படுத்தும் ருசியை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அந்த மனிதர்களுக்கு புரிவதில்லை இது நல்லதா, கெட்டதா என்று. ஒரு வீட்டினுள் கணவன் மனைவி, மகன், மகள், குடும்பம், சமூகம் போன்றவைகளின் பிரச்சினைகள் உண்டுபண்ணுவதற்கு காரணம் இந்த சினிமாதான்.

சினிமாவை இஸ்லாமிய மார்க்கம் அன்றிலிருந்து இன்று வரை வெறுத்து ஒதுக்குகின்றது. பெரும் பெரும் கலிபாக்களின் காலத்தில் வாழ்ந்த மக்கள் இச்சினிமாவை ஒதுக்கி வாழ்ந்ததன் காரணமாக இவ்வுலகம் அவர்களின் காலடியில் வந்தது. அதன் காரணமாக அவர்கள் வெற்றி வாகை சூடினார்கள். ஆனால் இன்றைய முஸ்லிம்களின் நிலை அவல நிலையாக இருக்கின்றது. இறைவனால் உருவாக்கப்பட்ட குர்ஆன் ஷரீபை பொட்டகத்தினுள் பூட்டிவிட்டு புழுதி படும் வரை பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அதற்கென்று சிறிது நேரம் ஒதுக்குவதில்லை. ஆனால் தொலைக்காட்சியை ரேடியோவை எந்நேரமும் துடைத்துக் கொண்டு முஸல்லாவால் போர்த்தி விடுவார்கள் இது நியாயமா?

சினிமாவை ரசிப்பதன் காரணமாக சமூகத்தில் பல்வேறுபல பிரச்சினைகளை உண்டு பண்ணுகின்றது. குறிப்பாக மது அருந்துதல் பாலியல் வல்லுறவுகள், களவு, கொள்ளை, இன்னும் பல அனாச்சார சதிகேடுகள் சமூகத்தில் நடந்து கொண்டு சமுதாயத்தை மாசுபடச் செய்கின்றது. சமூகத்தில் வாழுகின்ற இளம் யுவதிகள் இளைஞர்கள், பாடசாலை மாணவ, மாணவிகள், பல்கலைக்கழக மாணவ மாணவியர்களின் பாதிப்புக்கு காரணம் சினிமாதான் என்றால் எவராலும் மறுக்க முடியாது.

இதன் காரணமாக மாணவ, மாணவியர்களின் கல்வி பாதிப்படைந்து எதிர்காலம் சீரழிவுக்கு இட்டுச் செல்லும். சமூகத்தில் ஒரு புறக்கணிப்பு ஒதுக்கி தள்ளுகின்ற நிலைமை, அவ மரியாதை, விட்டுக் கொடுப்பின்மை உறவுகளில் பிளவுகள் ஏற்படுவதற்குக் காரணமும் சினிமாவே.

இச்சினிமாவிற்கு ஒதுக்கும் நேரம்களை கல்விற்காக ஒதுக்குகின்றபோது கல்வியில் முன்னேறுகிறார்கள். அது போலவே ஒரு தொழிலாளி அந்நேரத்தை தொழிலுக்கு ஒதுக்குகின்றபோது தொழிலில் முன்னேறுகின்றான். தன் இறைவனை வணங்குவதற்கு நேரத்தை ஒதுக்குகின்ற போது தன் இறைவனின் திருப்தியை பெறக்கூடியவனாக ஆகுகின்றான். இதற்கு மாற்றமாக சினிமாவிற்கு ஒதுக்குகின்றபோது சினிமாவிற்கு அடிமையாகி சமூகத்தில் சீரழிவை எதிர்நோக்குகின்றான்.

இவ்வாறாக சினிமாவை தன்னகத்தையே கொண்டிருக்கும் தனிமனிதர்களையும் குடும்பங்களையும் நிறுவனங்களையும் சமூகத்தையும் பாதிப்படையச் செய்து இழிநிலைக்கு ஒதுக்கி இயலாமையை ஏற்படுத்துகின்றது. இதன்காரணமாக சினிமாவை ரசித்துக் கொண்டிருக்கும் ஒவ்வொரு முஸ்லிமான ஆண், பெண்ணும் அதனை கை விட்டு, வந்தடைந்திருக்கின்ற சங்கையான ரமழான் மாதத்தை பிரயோசனமான முறையில் கழித்து, இறைவனின் திருப்தியை பெற ஒவ்வொருவரும் முயற்சி செய்வோம். (இன்ஷா அலலாஹ்)

எம்.எச்.எம். அஸீன்
ஏறாவூர்

## சவர்க்காரம்

தலைக்குள்
பேன் கடிப்பதும் விளங்கவில்லை
எண்ணெய்வைத்தும் நாள்கணக்கு
சதாம் ஹுசைனும் புஷ்சும்
மல்லுக்
கட்டிக்கிப் புரள
சனங்கள் சாகின்ற கதைகள் கேட்டு
என் காதுகளும் அழுது
ஒரு குச்சி தேவை
குடைந்தெடுக்க

நாற்றம்
செடி நாற்றம்
எல்லா இடங்களிலும் சண்டை

இந்தக் கடைக்கு நேரே
குப்பை கொட்டும் அவளுக்கும்
கடைக்காரன் பொண்டிக்கும்
போர்
விடிந்து
முகம் கழுக முன்னர்

அவர் கறிவாங்கிப் போட்டாலும்
சாம்பலில்லை அறுக்க
கொள்ளிக்கி நெருப்பு மூட்டி
சுடுதண்ணீர் வைத்து
தேயிலையும் போடாமல் கை விறைத்து
மரத்துப் போனது
சனம் கதைக்கும் கதைகள் சில
வாயாலே சொல்லலாமா
குடும்பத்தோடு அழிந்ததாம்
ஒரு பிள்ளை தலை தெறித்து
முண்டமாய் கிடக்குதாம்
படத்தில் பார்த்தனராம்

மோதிரம் வெட்டுது
நான் குளிச்சி ஒரு கிழமை

அவர் அருகாலும்
வாறதில்லை வெடுக்கு
ஊத்தை
இஞ்சிக் கனத்தில்

என் கழுத்துக்குள் மூன்று கோடு
அரைக்கூட்டு நாடாபோல்

நேற்று அவர்
என்ன நினைத்தாரோ
வெளிக்கிட்டுப் போய்
வந்து
இஞ்ச
உன்னைத்தான்
சவர்க்காரம் பிடி என்றார்
என் சதிரமெல்லாம் கூசிச்சி

- சோலைக்கிளி -




## சில நாடுகளின் பாராளுமன்றங்கள்

01. இந்தியா பாராளுமன்றம் - லோக் சபை
02. அயர்லாந்து பாராளுமன்றம் - டயஸ்
03. ஆப்கானிஸ்தான் பாராளுமன்றம் - சூரா
04. ஈராக் பாராளுமன்றம் - மஜ்லிஸ்
05. அமெரிக்க பாராளுமன்றம் - காங்கிரஸ்
06. ரஷ்யப் பாராளுமன்றம் - சுப்ரிம்சோவியத்
07. பிரித்தானிய பாராளுமன்றம் - பாராளுமன்றம்
08. சீனப் பாரளுமன்றம் - தேசிய மக்கள் காங்கிரஸ்
09. ஜப்பான் பாராளுமன்றம் - டயற்
10. இஸ்ரேல் பாராளுமன்றம் - கினேசத்
11. பங்காள தேஷ் பாராளுமன்றம் - கியூரல்
12. ஸ்பெய்ன் பாராளுமன்றம் - கொட்ஸ்
13. நோர்வே பாராளுமன்றம் - ஸ்டோர்டிங்க
14. சுவீட்சர்லாந்து பாராளுமன்றம் - நெசனல் அசெம்பிளி
15. நேபாள பாராளுமன்றம் - நெசனல் பஞ்சாயத்து.
16. சுவீடன் பாராளுமன்றம் - ரிக்ஸ்டெக்
17. மொங்கோலியா பாராளுமன்றம் - பூரா
18. தாய்வான் பாராளுமன்றம் - யுவான்
19. அவுஸ்திரேலிய பாராளுமன்றம் - பெடரல்
20. போர்த்துக்கல் பாராளுமன்றம் - கோர்டஸ்

## உலகை ஆச்சரியத்தில் ஆழ்த்திய பாதுகாப்புக் கோட்டை

உலக அதிசயங்கள் ஏழு. அவற்றில் ஒன்றாக சீனப் பெருஞ்சுவர் கருதப்படுகிறது. இச்சுவர் எல்லைகளைப் பிரிக்கும் பாதுகாப்புக் கோட்டையாகவே நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

சீனாவில் வட-கிழக்கில் அமைந்துள்ள ஹொப்பீ என்ற பிரதேசத்திலிருந்து மேற்கில் அமைந்துள்ள கன்ஸூ வரை இச்சுவர் வியாபித்துள்ளது. இதன் நீளம் 1500 மைல்களாகும் இச்சுவரின் உயரம் 22 அடிகளாகும். அகலம் 20 அடிகளாகும். ஒவ் வொரு 100 யாருக்கும் 40 அடி உயரமான தூண் அமைக்கப்பட்டுள்ளது. கி.மு. 246-209 காலப் பகுதியிலேயே சீனப் பெருஞ் சுவர் கட்டப்பட்டது.

சீனாவை ஆட்சி செய்த 'ஷீ கங்கீ' என்ற சக்கரவர்த்திதான் இதனை முன்நின்று நிர்மாணித்துள்ளார். பின்னர் கி.பி. 1368-1644 காலப் பகுதியில் வாழ்ந்த 'மின்க் டிகாஸ்ட்' என்பவரால் இது புதுப்பிக்கப்பட்டுள்ளது.

## வெள்ளரிக்காய்



வட இந்தியாவை தாயகமாகக் கொண்ட வெள்ளரிக்காய் பண்டைய ரோம-கிரீக் இனத்தவரிடையேயும் அவர்களின் கற்பனைக் கதைகளிலும் அதிகம் பயன்படுத்தப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. 6ஆம் நூற்றாண்டில் இது சீனாவிலும் பயிரிடப்பட்டுள்ளது. எப்படியிருப்பினும், தற்போது இது உலகம் முழுவதிலும் வியாபித்துள்ள சுவையானதொரு கனியாகவும், மரக்கறியாகவும், அலங்காரப் பூச்சாகவும் பயன்படுத்தப்படுகிறது.

வெள்ளரிக்காயை பச்சையாக உண்ணும்படியே அறிவுறுத்தப்படுகிறது. ஏனென்றால், சமைக்கும்போது அதில் அடங்கியுள்ள வைட்டமின் 'C' யும், போஷாக்கான பதார்த்தங்களும் அழிந்து போகின்றன. அது பொட்டாஸியம், சோடியம், மக்னீஸியம், சல்பர், சிலிக்கன், க்ளோரீன் மற்றும் ப்ளுவோரின் அடங்கிய ஒரு ஊற்றாகும்.

வெள்ளரிக்காயானது மலச்சிக்கல், வாயுத்தொல்லை, குடல் அலட்சி, ரூமடிக் மற்றும் தோல் சம்பந்தப்பட்ட நோய்களுக்கும் நல்ல சுகத்தை தரக் கூடிய ஒரு கனி அல்லது காயாகும்.

## 'ருபையாத்' மூலம் உலகப் பிரசித்தி பெற்ற உமர் கையாம்.

1048 ஆம் ஆண்டு ஈரானிலுள்ள நிஷாபூரில் பிறந்த கவிஞர், உமர் கையாமின் முழுப்பெயர் இப்னு இப்ராஹீம் அல் கையாம் என்பதாகும். ஈரானியக் கவிஞராக உலகப் பிரசித்திபெற்ற கையாம் அவர்கள் ஒரு கணிதவியலாளராகவும், வானியல் விஞ்ஞானியாகவும் ஈரானில் புகழ் பெற்றிருந்தார்.



அவருக்கு கையாம் என்ற பெயர் வரக் காரணம் அவரது தந்தையின் தொழிலையொட்டியே என வரலாற்றாசிரியர்கள் கருதுகின்றனர். கையாம் என்பதன் பொருள் 'கூடாரம் செய்பவர்' என்பதே. அவரது 'ருபையாத்' என்ற காவியத்தின் மூலமே அவர் உலகப்பிரசித்திபெற்றார். முக்கியமாக எட்வர்ட் பிட்ஸ்பேலேட் என்பவரால் 'ருபையாத்' ஆங்கிலத்திற்கு மொழி மாற்றம் செய்யப்பட்டதாலேயே. வேறு சில மொழி மாற்றங்களுக்கும் அது உள்ளானது.

கையாம் அவர்கள் விஞ்ஞானம், தத்துவம் ஆகியவற்றைப் பற்றிய சிறந்த கல்வியை தனது பிறந்த ஊரான நிஷாபூரிலேயே பெற்றார். அதன் பின் பால்க் பிரதேசத்திற்குச் சென்று கணிதத்தில் சிறந்த அறிவைப் பெற்றார். அவரது இந்த திறமைகள் காரணமாக மலிக்ஷா என்ற சுல்தான், நாட்காட்டியை தயாரிப்பதற்கு இவரது உதவியை நாடியதாக கூறப்படுகிறது. அது மட்டுமல்ல, அவரது தலைமையில் இன்பான்' நகரத்தில் வானியல் ஆராய்ச்சிக் கூடமொன்றை அமைக்கவும் சுல்தான் அவர்கள் நடவடிக்கை மேற்கொண்டிருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முஸ்லிம் அரசியல் தலைவர்களே! மக்கள் என்ன விரும்புகிறார்கள்?

முஸ்லிம்களின் உரிமைகளையும், சுதந்திரத்தையும் முஸ்லிம் தேசியத்தின் அடையாளத்தையும் கட்டிக்காக்கவென கட்டியெழுப்பப்பட்ட ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இன்று பல துண்டுகளாக உடைக்கப்பட்டு சிதறிக்கிடக்கின்றது. இதனால் பலகுழுக்களாக மக்கள் பிரிந்து கொண்டு அசிங்கமான அரசியலை வடிவமைத்துக் கொண்டிருக்கின்றார்கள்.

"நீங்கள் உங்களுக்குள் முதலில் ஒற்றுமையை ஏற்படுத்திவிட்டு வாருங்கள் பிறகு பேசுவதைப்பற்றி யோசிக்கலாம்" என்று மாற்று சமூகத்தினர் கூறுமளவுக்கு மக்களைப் பிரித்து, கூறுபோட்டு விட்டீர்கள். நீங்கள் செய்தது மாபெரும் தவறு என்று உங்கள் சுய உணர்வு சொல்லவில்லையா? உங்களின் சுய நலத்திற்காக மக்களின் ஒற்றுமையும், கட்சியின் உடைவும்தான் கிடைத்ததா? நீங்கள் மக்களுக்கு அரசியல் செய்யாவிட்டாலும் அவர்களை பிளவுபடுத்தி மாற்றார்களின் கைகளில் தாரைவார்த்து விடாதீர்கள்.

மக்கள் உங்களை மலைபோல் நம்பி இருக்கிறார்கள். அவர்களின் இறைமையை உங்களிடம் கொடுத்துவிட்டு நிம்மதியானதும் சுதந்திரமானதுமான ஒரு வாழ்வைப் பெற்றுத்தருவீர்கள் என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களின் எதிர்பார்ப்பை சிதைத்துவிடாதீர்கள். நீங்கள் மக்களுக்கு துரோகம் செய்வீர்களானால் அவர்கள் உங்களை திருப்பி அழைக்கவும் தயங்கமாட்டார்கள்.

**ஆர். அலிக்கான்,**

வாழைச்சேனை.

இடைக்கால நிர்வாகத்தில் முஸ்லிம்களுக்கு எவ்வகையான நிர்வாகத்தைப் பெற்றுத்தரப் போகிறீர்கள்? அவர்கள் நிறையவே இழந்து விட்டார்கள். பாசிசவாதிகள் அவர்களை சூறையாடி எல்லாவற்றையுமே உருவிவிட்டார்கள். இதுவரை மக்களுக்காக அவர்களின் உரிமைகளுக்காக என்ன சாதித்திருக்கிறீர்கள்? உங்கள் வாய்ச்சொல் ஜாலங்களில் மயங்கும் சமூகம் மலையேறிவிட்டது! இனிமேலும் அவர்களை ஏமாற்ற முடியாது.

நீங்களும் உங்கள் மனைவியரும் பல வசதிகளை அனுபவித்து வருகிறீர்கள். நல்ல கல்வியும், வசதியான வீடும், நல்ல தொடர்புகளும், நீங்கள் தூதுவர்களாக அனுப்பப்படும் பல்வேறு பணிகளும் உங்களுக்கு புதிய உலகத்தைக் காட்டுகின்றன. ஆனால் உங்கள் செல்வம் முழுவதும் உறுதியான ஒரு கம்பிக்கூடாக மாறி உங்களைச் சூழ்ந்திருக்கும் வறுமையை உங்கள் பார்வையிலிருந்து மறைத்து விடுகிறது. எச்சரிக்கையாக இருங்கள். உங்களுக்கு கீழே இருப்பவர்களைப்பற்றி உங்கள் மனதில் கருணை இல்லையானால் இறைவனின் வீட்டில் உங்களுக்கு இடம் இல்லாமல் போய்விடும். நமது அரசியல் கட்சி இன்று வெறுங்கூடாக மட்டுமே காட்சியளிக்கின்றது. இதற்கு என்ன செய்யப் போகிறீர்கள்?

இன்றைய அரசியல் தலைவர்கள் எவரையுமே மக்களால் நம்பமுடியவில்லை. இவர்களின் கட்டுப்பாட்டின் கீழ் லஞ்ச ஊழலும், பொய் புரட்டுகளும், பதுக்கலும், கறுப்புச் சந்தையும் நிலைபெற்றுவிட்டன. இன்று மக்கள் ஆட்டு மந்தைகளைப் போல் நடத்தப்படுவதால் தலைவர்களின் முன்னிலையில் மக்கள் மௌனம் சாதிக்கிறார்கள். மக்களின் கருத்துக்கள் உங்களை நோக்கி சுதந்திரமாக கொண்டு செல்லப்பட வேண்டும் என்பதை அடிப்படை நோக்கமாகக் கொள்வதற்கு மாறாக ஒரு திரையை அமைத்து அத்தகைய கருத்துக்களை தடைசெய்கிறீர்கள்.

மக்களின் சேவகன் என்று வழக்கமாக அழைத்துக்கொள்ளும் நீங்கள் மக்களின் விருப்பத்தை முழுமையாக வெளிப்படுத்துவதற்காகப் பணி புரிவதாக கூறிக்கொள்ளும் நீங்கள், மக்களை பாசிசவாதிகளிடம் கைமாற்றிவிட்டு எந்தக் குகைக்குள் சென்று ஒழியப்போகிறீர்கள்? முஸ்லிம்களின் தேச ஒற்றுமையைப் பொறுத்த அளவில் கட்சி ரீதியில் பல துண்டுகளாக உடைந்து இருக்கும் நீங்கள் பல்வேறு தவறுகளை செய்து வருகிறீர்கள். முஸ்லிம்களின் தேசியக் கட்சி என அழைக்கப்படும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸை உங்களது சுய முன்னேற்றத்துக்காகவும், தலைமைத்துவத்தில் கொண்ட மோகத்துக்காகவும், பல துண்டுகளாக உடைத்து முஸ்லிம்களின் தேசிய ஒற்றுமையை சிதைக்கப்பார்க்கிறீர்கள். இந்தச் செயலுக்கெல்லாம் நீங்கள் பதில் சொல்லியாகியே வேண்டும். மக்களிடம் மட்டுமன்றி, இறைவனிடமும் என்பதை மறந்துவிடாதீர்கள்.

இன்று உங்கள் ஆட்சி முறை உங்களின் சொந்த குடும்ப ஆட்சி முறையாக மாறிக்கொண்டு வருகின்றது. மக்களின் சுய உணர்வுகளையும், அபிலாசைகளையும் புரிந்து கொள்ளும் ஆற்றல் உங்களிடம் மங்கிப்போய்விட்டது.

மக்களைக் காப்பாற்ற வேண்டியதும், பாதுகாக்க வேண்டியதுமான பாரிய பொறுப்பு உங்களிடம் ஒப்படைக்கப்பட்டிருப்பதை மக்கள் ஞாபகமூட்ட விரும்புகிறார்கள். உங்கள் சொந்த வீடுகளிலும், குடும்பங்களிலும் இருந்து கொண்டு மக்களுக்காகப் போராடுகிறோம் என அறிக்கை விட்டுக்கொண்டு இருப்பது மட்டும் போதாது. இதனால் மக்கள் உங்கள்மீது மேலும் வெறுப்படைந்து வருகிறார்கள். இன்று நமது மக்களிடம் இழப்பதற்கு உயிரைத்தவிர வேறெதுவுமில்லை. உங்களைத் தலைவர்களாக்கியதே நாங்கள் செய்த மாபெரும் பாவம் என மக்கள் வருத்தப்படுகிறார்கள்.

எப்போதும் போல் நீங்கள் பொறுப்பின்றியும், எச்சரிக்கையின்றியும், வெறுப்போடும் இருப்பீர்களேயானால் மக்கள் உங்களை நம்பிக்கை துரோகிகள் என்று முத்திரை குத்தி விடுவார்கள்.

கிராமப்புறங்களில் வாழும் பெரும்பாலான மக்கள் தங்களை வழிநடத்த யாருமின்றி, கல்வியறிய ஆதரவின்றி உழைத்துச் சலித்துப்போன நிலங்களைப் புறக்கணித்துவிட்டு வாழ்க்கையில் விரக்தி கொண்டு, நிம்மதியான ஒரு வாழ்க்கைக்காக ஏங்கிக் கொண்டிருக்கிறார்கள். இவர்களுக்காக நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்?

இப்போதிருக்கும் உயர் அரசியல் அதிகாரிகள் அவர்கள் முஸ்லிம்களாக இருந்தபோதும் மக்களுக்கு எந்த நம்பிக்கையையும் அளிக்கக் கூடியவர்களாக இல்லை. இவர்கள் மீது மக்கள் எரிச்சலடையத் தொடங்குகிறார்கள். தங்களுக்கு இடமளிக்காத இந்த ஆட்சியிலிருந்தும் அரசியல் கட்சியிலிருந்தும் வெளியேறுகிறார்கள். கட்சியின் மீதான ஆர்வத்தையும் தலைமைத்துவத்தின் மீதான நம்பிக்கையையும் இழக்கிறார்கள்.

மக்களின் விழிப்படைந்து வரும் உணர்வு நிலையின் மீது ஒரு தடுப்புச்சக்தியாக நீங்களேதான் செயற்படுகிறீர்கள். மக்களிடம் பேசும் ஒவ்வொரு முறையும் நீங்கள் தங்களது வீரவாழ்வையும் மக்களின் பெயரால் தாங்கள் அடைந்த வெற்றிகளையும் அடிக்கடி நினைவுக்கு கொண்டு வந்து அதன் மூலம் மக்கள் தங்களிடம் நம்பிக்கை வைக்க வேண்டும் என எதிர்பார்க்கிறீர்கள். உங்கள் முன்னோர்களின் எச்சரிக்கையான அரசியல் முன்னேற்றத்தின் மீது ஒரு தேசிய கண்ணோட்டம் அற்றவர்களாகவும், அனுபவமற்றவர்களாகவும் இருந்து கொண்டு சண்டையிட்டுக் கொள்கிறீர்கள்.

இன்று மக்களின் வேலை பணிவாக நடந்து கொள்வதுதான் என்றும், அவர்கள் தொடர்ந்து பணிவாகத்தான் நடந்து கொள்ள வேண்டும் என்றும், காலம் முழுவதும் அவர்கள் பணிந்தே கிடக்க வேண்டும் என்றும் அறிவிக்கிறீர்கள். மக்களைப் புறக்கணிப்பவர்களாக இருந்து கொண்டு மக்களை சுரண்டும் கும்பல்களுக்கு தலைமைப் பொறுப்பும் வகிக்கிறீர்கள்.

அரசின் கைக்ளில் இருக்கும் கருவியாக தலைமைத்துவம் இருக்கக்கூடாது. இதற்கு முற்றிலும் மாறாக மக்களின் கைகளில் இருக்கும் கருவியாக மட்டுமே தலைமைத்துவம் இருக்க வேண்டும். தலைமைத்துவம் நிறைவேற்றவேண்டிய கொள்கையை முடிவு செய்வது மக்களாகத்தான் இருக்க வேண்டும்.

பொதுக்கூட்டங்களும், மாபெரும் மக்கள் கூட்டங்களும் மக்கள் உங்களுக்குப் பின்னால் இருக்கிறார்கள் என்பதை உங்களுக்கும் மற்றவர்களுக்கும் வெளிக்காட்டும் திறமையை இவ்வகையான தந்திரங்களின் மூலமாக தெரிவிக்கிறீர்கள். இவற்றையெல்லாம் மக்கள் அறியாதவர்களல்ல.

முஸ்லிம்களுக்கு மத்தியில் ஒரு புதிய தேசிய நெருக்கடிக்கான தருணம் வெகு தொலைவில் இல்லை. அதை தவிர்ப்பதற்காக முற்றிலும் மாறுபட்டதொரு கொள்கை கடைப்பிடிக்கப்படல் வேண்டும் என்று மக்கள் நினைக்கிறார்கள். அதாவது முஸ்லிம்களின் உள்நாட்டுப் பகுதிகளிலும், முஸ்லிம்கள் குறைவாக வாழும் பகுதிகளிலும் நீங்கள் மிகவும் முன்னுரிமை கொடுக்க வேண்டும்.

வடக்கு கிழக்கு இடைக்கால நிருவாகத்தின் பின்னணி, இம்முஸ்லிம்களை வாழிடமற்றவர்களாக்க பேரினவாதிகளுக்கு துணை போகாது என்பதற்கு எந்த உத்தரவாதமுமில்லை. நீங்கள் சிந்திப்பதன் மூலம்தான் முஸ்லிம்களின் எதிர்காலம் வடிவமைக்கப்படும். மக்களின் தலைவர்களாகிய நீங்கள் குறிப்பாக கிராமமக்களோடு தொடர்பு கொள்வதற்கான எல்லா வாய்ப்புக்களையும் தேட வேண்டும். தேசிய கோட்பாடொன்றை உருவாக்க வேண்டும். அதாவது மக்களுக்கான கோட்பாடொன்றை உருவாக்க வேண்டும். மக்களது சுதந்திரத்திற்காகவும் அவர்களது வாழ்வு வளம்பெறவும் போராட வேண்டிய பொறுப்பு முதலாவது உங்கள் மீதும் அடுத்ததாக மக்கள் மீதும் காணப்படுவதாக மக்கள் இன்று உணர்ந்து இருக்கிறார்கள்.



உங்கள் போராட்டம் தனி நபருக்கானதாகவும், எல்லைக்குட்பட்டதாகவும், சுருங்கிப்போனதாகவும் இருந்துவிடாமல் முஸ்லிம் தேசத்தின் உண்மையாக, விரிந்து வெளிப்படக்கூடிய திறன்வாய்ந்ததாக இருக்க வேண்டும். முஸ்லிம்களுக்கான தீர்வு வலிந்து திணிக்கப்பட்ட அரைகுறையான தீர்வாக இருக்கக்கூடாது. தங்களை முஸ்லிம்களின் தேசியத் தலைவர்கள் என்று கூறிக்கொள்ளும் நீங்கள் ஒட்டுமொத்த முஸ்லிம் தேசத்திற்கும் பொறுப்பேற்றுக்கொள்ள வேண்டும்.

ஒரு வளர்ச்சி குன்றிய சமுதாயத்தில் இளைஞர்களே மிகவும் முக்கியமான சமூகப் பிரிவினராக இருக்கிறார்கள். இளைஞர்களின் விழிப்புணர்வின் தரம் உயர்த்தப்பட வேண்டும். அவர்களுக்கு விழிப்புணர்வும், பொறுப்புணர்வும் தேவை. இதற்காக நீங்கள் என்ன செய்யப்போகிறீர்கள்? இறுதியாக பட்டினிக்கெதிரான, அறியாமைக்கெதிரான, ஏழமைக்கெதிரான, விழிப்புணர்வின்மைக்கெதிரான போராட்டம் உங்கள் மீதுதான் இருப்பதாக மக்கள் கூறிக்கொள்கிறார்கள். உங்களின் அறிவு பூர்வமானதும், ஆழமானதுமான செயற்திட்டங்களே எங்களை வாழ வைக்கும்.

---

# ரமழானில் உம்ராவுக்கு செல்லும் உத்தமர்களே..!. இதோ உங்கள் சிந்தனைக்கு...!

புனித ரமழான் பூத்துவிட்டால், உம்ரா கடமையை நிறைவேற்றச் செல்லும் நம் சன்மார்க்க இதயங்களின் தொகை, வருடத்திற்கு வருடம் கூடிக்கொண்டே போகிறது. இது மகிழ்ச்சிக்குரிய சமய மறுமலர்ச்சிக்கான விடயம் என்ற வகையில் நாம் எல்லோருமே சந்தோஷிக்கலாம். அல்ஹம்துலில்லாஹ்...

புனித ஹஜ் கடமைக்கும், உம்ராவுக்கும் நாம் மக்காவுக்கே செல்கிறோம். ஆனால், ஹஜ் என்பது, ஒருவர் தன் வாழ்நாளில் ஒருமுறை நிறைவேற்றுவதே பர்ழான (கட்டாய) கடமையாகும். உம்ரா அப்படியல்ல, ஒருவர் எத்தனை முறை வேண்டுமானாலும் உம்ராவுக்குப் போகலாம்; கடமையை நிறைவேற்றலாம்.

நம் இலங்கையில் வசதி படைத்த சகோதரப் பணக்காரர்கள், ரமழானில் பெரிதும் விரும்பி உம்ராவுக்காக செல்வது, ஆண்டுதோறும் பெருகிக் கொண்டே போகிறது. சாதாரண நாட் களில் உம்ராவுக்காக செல்லாமல், ரமழானில் விரும்பி செல்வதற்கும் காரணம் இல்லாமலில்லை...

ரமழான் நோன்பில் இறுதி பத்தில் பள்ளிவாசலில் இராத் தங்குவது அதாவது 'இஃதிகாப்' இருப்பது விரும்பத்தக்கது மட்டுமல்ல.. இறைவன் விரும்பும் நற்காரியமும் ஆகும். வழமையான தத்தம் ஊர்ப் பள்ளிவாசல்களில் 'இஃதிகாப்' இருப்பதைவிட, இறைவனின் முதல் இல்லமாகிய புனித கஃபத்துல்லாஹ்விலேயே இருப்பது மேலல்லவா? இதனாலேயே நம் தனவந்தர்கள் ரமழானில் உம்ராவையும் நிறைவேற்றிவிட்டு, புனித ஹரம் ஷெரீப்ஃபிலும் தங்கிவிட்டே தாயகம் திரும்புகின்றனர்.

மேலும் ஹஜ் கடமைக்காக 'அல்லாஹ்வின் விருந்தாளி'களை அழைத்துச் செல்லும் முகவர்களும் ரமழானில் உம்ராவுக்காக மக்கா செல்வதையும் முல்லா இங்கு தொட்டுக்காட்ட வேண்டும். தங்களது முகவர் நிலையங்களால் ஹஜ்ஜுக்கென அழைத்துச் செல்லும் ஹஜ்ஜாஜிகளுக்கு, ஹரம் ஷெரீபுஃக்கு அருகாமையில், மதீனாவில் மஸ்ஜிதுன் நபவிக்கு சமீபமாக இடம் பிடிப்பதற்காகவே தங்குமிட வசதிகளை பதிவு செய்வதற்காகவே, உம்ராவை நிறைவேற்றிய கையோடு, காரியமாற்ற செல்கின்றனர் என்பது நம் கவனிப்புக்குரியது.

இந்த பயண முகவர்கள் வருடாந்தம் ரமழானில் செல்வதுபோலவே, நம்மில் சில தனவந்தர்களும் ஆண்டுதோறும் ரமழானில் உம்ராவுக்கு சென்றுவருவதை வழக்கமாகக் கொண்டுள்ளனர். சரீஆ தொடர் உம்ராவுக்கு தடை விதிக்கவில்லை என்ற போதும், நம்மிடம் வசதி வாய்ப்புகள் குவிந்து கிடக்கின்றன என்பதற்காக, ஆண்டுதோறும் உம்ரா செல்லத்தான் வேண்டுமா?




இப்படியொரு, கேள்வியை சம்பந்தப்பட்ட வருடாந்த உம்ரா உத்தமர்களின் முன் வைத்தால் "மை கார்; மை பெற்றோல்" என்ற பாணியில், "அது எங்கள் இஷ்டம்" என்று வாய்மூடிப்போகும் பதில் தருவாரும் உளர். சிலர் சில தேவைகளுக்காக வெளிச்சமிட்டுக் காட்ட முடியாத விஷயங்களை மனதில் மறைத்துவைத்து செல்வோரையும் முல்லா அறிந்து வைத்துள்ளேன்.

சன்மார்க்க உள்ளங்களே, முல்லா எப்போதுமே உம்ராவுக்கு எதிரியல்ல. வசதி படைத்தவர்கள் வருடாந்தம் உம்ராவுக்கு செல்வதும், அந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, ரமழான் கடைசி பத்தில் ஹரம் ஷெரீபிஃல் தங்குவதும் முல்லாவுக்கு உடன்பாடான விஷயமே தவிர, முரண்பாடல்ல.

முல்லா... இங்கு சொல்ல விரும்புவது அதுவல்ல. உம்ராவுக்கு ஆண்டுதோறும் செல்லும் தனவந்தர்கள் மட்டுமல்ல, கூட்டு மொத்த முஸ்லிம் செல்வந்தர்கள் எல்லோருக்குமே ஒரு சமுதாயக் கடமை செய்தாக வேண்டிய கடப்பாடு இருக்கிறதே என்பதை நினைவுறுத்தவே முல்லா விரும்புகிறேன். அது என்ன விருப்பமென தெரியுமா?

"செல்வர்க்கழகு செழுங்கிளை தாங்கல்" என்பார்களே... இதன்படி நம் சன்மார்க்க சமுதாயத்தைத் தாங்க வேண்டிய பொறுப்பு, நம் சமுதாய பணக்காரர்களுக்கு இருக்கிறதல்லவா?

நம் சமுதாயத்தை தாங்குதல் என்றால் என்ன? சமுதாயம் சரிவு திசையில் நிலை தடுமாறும்போது, தங்களுக்கு - செல்வந்தர்களுக்கெல்லாம் பெரும் செல்வந்தனாகிய அல்லாஹ் வாரி வழங்கியிருக்கும் செல்வத்தின் ஒரு பகுதியைப் பயன்படுத்தி, சரிவு நிலையை சரிசெய்து கைதூக்கி விட வேண்டும் என்பதுவே முல்லாவின் முழுமன ஆசை.

அது சரி நம் சமுதாயம் இப்போது சரிந்துள்ளதா? என்ற வினாவை நோக்குவோமே! சமுதாயம் ஒரு பக்கத்தில்ல... நாலாபுறங்களிலும் அடுத்தடுத்து சரிந்தே காணப்படுகிறது. இன்னுமே அகதிமுகாம்களில் வாழ்வைத் தொலைத்துவிட்டுத் தேடும் சகோதர இதயங்கள்; சீதனக்கொடுமையால் பருவத்தே பயிர் செய்ய வழியறியாது, ஜன்னல் ஓரங்களில் வரனின் வரவுக்காய் காத்திருக்கும் முதிர் கன்னிகள்; படிக்க ஆர்வமிருந்தும் உயர் கல்வியைத் தொடர வழிபுரியாமல், விழிபிதுங்கி, எதிர்காலத்தை கேள்விக் குறியாக்கி ஏங்கும் மாணவமணிகள்; தக்க தொழிலின்றி வீதியளந்து திரியும் வேந்தர்களின் வீண்வம்புகள், விபரீத சிந்தனைகள், வேடிக்கை வினோதங்கள், இதனால் சமூகம் எதிர்நோக்கும் சங்கடங்கள் அப்பப்பா.. ஒன்றா? இரண்டா?

எரியும் இந்தப் பிரச்சினைகளுக்கும், உம்ராவுக்கு சவூதி செல்லும் உத்தமர்களுக்கும் என்ன சம்பந்தம், சம்பந்தத்தை ஏற்படுத்தி, சமுதாய செல்வந்தர்களுக்கு அழகு செய்து பார்க்கவே முல்லா அவாவுறுகின்றேன்.

உம்ராவுக்கு வருஷம் தப்பாது செல்லும் உத்தமர்களே.. நீங்கள் உங்களது உம்ராவுக்கென ஒதுக்கியுள்ள செல்வத்தில் சிறுதொகையை, சமுதாயத்தின் எரியும் பிரச்சினைகளை சற்றே தணிக்க கொடுத்துதவுங்கள். இதற்காக நீங்கள் எங்கேயும் அலைந்து திரிந்து, தேடித் துழாவி கஷ்டப்பட வேண்டியதில்லை. சமுதாயப் பிரச்சினை உங்கள் அருகிலேயே உங்கள் முன்னிலையிலேயே உங்கள் வீட்டு தெருமுனையிலேயே இருக்கிறது. எங்கே..? எங்கே..?

பக்கத்து வீட்டு பல்கீஸ் மாமி, தன் மூத்த மகளை கரையேற்ற எவ்வளவு காலமாகக் கஷ்டப்படுகின்றார். எவருக்கும் தெரியாமல், பல்கீஸ் மாமி வீட்டின் வறுமையை எவருக்கும் 'பப்ளிஸிட்டி' பண்ணாமல், உங்களால் முடிந்த உதவியை, உம்ராவுக்கு விமானம் ஏறுமுன் கொடுத்துவிட்டுப் போங்களேன்! சமுதாயத்தின் ஒரு ஜீவனின் பிரச்சினை கொஞ்சம் தணிய நீங்கள் வழி செய்தது போலிருக்குமே!

எதிர்த்த வீட்டு எஹியா நானா, ஒவ்வொரு வருடமும் ஸக்காத் வாங்கும் வரிசையில்தானே நிற்கிறார். நீங்கள் உம்ராவுக்குப் போவதற்கு முதல்நாள், அந்த எஹியா நானாவை நேரில் கண்டு, அவர் சிறு தொழில் ஏதும் செய்ய, உங்களால் முடிந்த சிறுதொகையை முதலீடாகக் கொடுத்துவிட்டு பயணத்தை மேற்கொள்ளுங்களேன்! சிறு அளவிலேனும் சம்பாதிக்கத் துவங்கிவிட்டால், ஸக்காத் 'கியூ'வில் போய் நிற்க, உள்ளூர வெட்கப்படுவார். சமுதாயத்தின் ஒரு சகோதரருக்கு தொழில் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்த "தவாபு" உங்கள் உம்ரா நோக்கத்தை நிறைவேற்றி வைக்க உதவும்.

அடுத்த தெருவில் வாழும் அனிபா தம்பி, கணனி வகுப்பொன்றில் சேர்ந்து பயில கட்டணம் செலுத்த வசதியின்றி தவிப்பதாக, உங்களிடம் சொன்னாரே நினைவிருக்கிறதா? உம்ராவுக்கு உறவினர் வீடுகளுக்கு போய், பயணஞ் சொல்லிவர, ஒரு நடை போகிறீர்களே.. அந்த வழியே வரும்போது, உங்களால் முடிந்த தொகையை கல்விக்கு ஏங்கும் அம்மாணவனின் கையில் திணித்துவிட்டு வாருங்களேன்! ஒரு கணினித்துறை பட்டதாரி உருவாக முதலடி எடுத்து வைத்த பெருமை உங்களை வந்தடையுமே!

நோன்பு காலத்தில் உம்ராவுக்கு வருடந்தோறும் போய்வரும் உத்தம சீலர்களே... இவ்வாறு உங்களை அண்டிவாழும் நம் சமுதாய சோதரர்களின் முக்கிய தேவை ஒன்றினை நிறைவேற்ற உங்களது உம்ரா சந்தோஷமாக நீங்கள் விரும்பிய தொகையை கொடுத்து விட்டுப் போங்களேன். இப்படி ஒவ்வொரு ஊரிலும், உத்தம சீலர்கள் வலது கை கொடுப்பதை இடது கைகூட அறியாவண்ணம் கொடுத்துவிட்டுப் பயணமானால், சமுதாயத்தின் சங்கடம் ஒன்றின் சிறுபகுதியை நிறைவேற்றிய ஆத்மதிருப்தி உங்களது வணக்க வழிபாடுகளுக்கு வலுச்சேர்க்கும்.

இது கடமையோ, கட்டாயமோ, கட்டுப்பாடோ அல்ல, கனிவான ஒரு அன்பான அழைப்பே தவிர வேறில்லை. ஒருவர் நம்மில் வபாஃத்தானால், நாமெல்லாரும் தோள் கொடுத்து தூக்கிச் செல்கிறோமே இறந்த ஒருவருக்கே தோள் கொடுக்கும் நாம், நம் சமுதாயம் வாழ்வதற்கு கை கொடுப்போம் வாருங்கள் என அழைத்தால், வராமலா இருப்பீர்கள்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைச்சர் அதாவுல்லா தனித்தரப்பு விவாதத்தில் கலந்து கொண்டிருக்க வேண்டும்!

முஸ்லிம் அரசியல் தலைமைகளின் பொடுபோக்குத் தனம் குறைந்தபாடில்லை. முஸ்லிம்களின் அரசியல் உரிமைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் விடயத்தில் நமது தலைமைகளுக்கு என்னதான் குடிமூழ்கிய சிந்தனையோ தெரியாது!

முஸ்லிம்களின் உரிமைப் போராட்டத்தில், அரசியல் வரலாற்றில் முக்கியத்துவமிக்க ஒரு அரசியல் முன்னெடுப்புத்தான் பாராளுமன்றத்தில் நடைபெற்ற தனித்தரப்பு விவாதம். அந்த விவாதத்தில் அமைச்சர் அதாஉல்லா கலந்துகொண்டு உரையாற்றாதது அவரது அரசியல் பலவீனத்தையே காட்டிநிற்கிறது.

ஹக்கீம் மீதான அரசியல் குற்றச்சாட்டுக்களில் அதாஉல்லா தரப்பினரின் பிரதான வாதமாக இருந்தது பேச்சுவார்த்தையில் முஸ்லிம்களின் இடத்தை ஹக்கீம் உறுதிப்படுத்த தவறிவிட்டார் என்பதாகவே இருந்தது. இக்குற்றச்சாட்டையே அதாஉல்லா தரப்பு எல்லா இடங்களிலும் சொல்லி வந்தது, வருகிறது.

ஹக்கீம் தலைமையுடன் முரண்பட்டு, ரணில் விக்ரமசிங்கவுடன் பேச்சு நடத்தியபோதுகூட, அஸ்ரஃப் காங்கிரஸ் தரப்பு தனித்தரப்பு விடயத்தை ஒரு நிபந்தனையாக முன்வைத்ததாக சொல்லியது.

கட்சி, கருத்து வேறுபாடுகளை மறந்து பாராளுமன்றத்தில் தனித்தரப்பு விவாதம் கொண்டுவரப்பட்டபோது அதாஉல்லா தரப்பு அவ்விவாதத்தில் கலந்து கொள்ளவில்லை எனும்போது முஸ்லிம்களின் அரசியல் நிலைப்பாட்டில் அதாஉல்லா தரப்பினரின் நிலைப்பாட்டை மக்களாகிய நாம் கேள்விக்குட்படுத்த வேண்டியுள்ளது.

பாராளுமன்றத்தில் கொண்டுவரப்பட்ட 'பேச்சுவார்த்தை மேசையில் தனித்தரப்பு' விவாதத்திற்கான பிரேரணை ஹக்கீம் தலைமையிலான அணியினரால் மட்டும் சமர்ப்பிக்கப்பட்டதல்ல அது அனைத்து முஸ்லிம் தரப்பினராலும் (ஹக்கீம் தலைமை + நுஆ + ஐக்கிய தேசியக்கட்சி முஸ்லிம் எம்.பிக்கள் + ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி மு. எம்பிக்கள்) கூட்டினாலேயே கொண்டுவரப்பட்டது.

தனித்தரப்பு விவர்தமும் பாராளுமன்றத்தில் அதற்கான அங்கீகாரத்திற்குமான உழைப்புக்கு ஹக்கீம் தலைமை மட்டும் ஒரு போதுமே உரிமை கொண்டாட முடியாது. அதுமட்டுமன்று முஸ்லிம் எம்.பிக்கள் அனைவரும் அது எங்களால்தான் நடந்தது என உரிமை கொண்டாட முடியாது! ஏனெனில், கடந்த காலத்தில் இந்த எம்.பிக்கள் யாருமே பேச்சுவார்த்தை மேசையில் தனித்துவத்தரப்பு நிலைப்பாட்டை பேச்சுவார்த்தை தொடங்கியதிலிருந்து இலங்கை பாராளுமன்றத்தில் வலியுறுத்தவில்லை.



முஸ்லிம் மக்கள், சமூக சக்திகள், பத்திரிகைகள், போராட்டங்கள், தீர்மானங்கள் ஊடாகவே இந்த தனித்துவத்தரப்பு நிலைப்பாட்டை மக்கள் வலியுறுத்தி வந்தனர். அதன் பின்னேதான் பா.உ. கள் சிலர் இதுபற்றி பேசத் தொடங்கினர். மக்களின் இந்த விட்டுக்கொடாத நிர்ப்பந்தத்தினால் ஏற்பட்ட அரசியல் விளைவாக முஸ்லிம்களுக்கான தனித்துவத்தரப்பு ஏற்பை நாம் பார்க்க வேண்டியுள்ளது. இது முஸ்லிம்களின் அரசியல் வரலாற்றில் மிக முக்கியமான செயற்பாடாகும். அதாஉல்லா இந்த வாய்ப்பை இழந்துவிட்டது மட்டுமன்று இனி இந்த விடயத்தில் உரத்துப் பேசுவதற்குமான வாய்ப்பையும் இழந்துவிட்டார் என்றே சொல்ல வேண்டும்.




## காட்டூன் நூலகம்










# பள்ளிமுனைக் கிராமத்தின் கதை

15 குறுநாவல்

-என்.ஏ.தீரன்-

## அத்தியாயம் 7

தலைவர்! பெற்றிக் சாரம் அணிந்து அரைக்கை பனியனுடன் மிக இளமையாக இருந்தார்.
'செருப்பணியாத பாதங்கள் வெள்ளையாக பளீரெனத் தெரிந்தன. முகத்தில் அதே மந்தகாசப் புன்னகை. இவர்களைப் பார்த்தார்.

அத்தனை நேரமும் அடக்கி வைத்திருந்த ஆற்றாமை வெடிக்க முத்துமுகம்மது எழுந்தோடி தலைவரின் கால்களில் விழுந்தான் பெருங்குரலில் அழுதான்....
'சேர்.... சேர்....' வார்த்தை முட்டி கண்ணீர் ஊற்றுப் பெருக்கி தலைவரின் பாதங்களை நனைத்தது.

'ஹே.. ஏய்! ஏய்! எழும்பு! எழுந்திரு! நீ.. முத்து வாப்பா தானே....?'
'நான் முத்துமுகம்மது சேர் பள்ளிமுன...'
'ஙா.... அந்த புலிக்கடிதம்! ஓயெஸ்! நான் கோள் எ கதச்சது...?'
'என்னோடதான் சேர், நான்தான் சேர்! கட்சி எளஞர் அணி'
'சரி! உள்ள வா! சாப்பிட்டியா?'
'ல்ல சேர்! என்ட மை...ம்னாவ....'
'செரி கதைப்பம்! வா! முதல்ல சாப்பிடுவம்! பசிக்குது!!'

தலைவருடன் உடனடிச்சாப்பாடு. சாப்பிடும் போது தலைவர் பேசவில்லை. முத்துமுகம்மது தனது கனவுலகிலிருந்து மீளவில்லை. பசித்தாலும் சாப்பாடு இறங்கவில்லை. யாஸின் எல்லாக் கவலையும் மறந்து ஒரு பிடி பிடித்துக் கொண்டிருந்தான்.

தலைவர் சாப்பிட்டதும். சாய்மனையில் அமர்ந்தார். முத்துமுகம்மதின் கதையைக் கேட்க ஆயத்தமானார். இணைப்பதிகாரி ஹூஸைன் பாறுக் பக்கத்தே பவ்வியமாக நின்று கொண்டிருந்தார்.

முத்துமுகம்மது கோர்வையற்றுச் சொன்னான். விரைவாகச் சொன்னான். பதட்டமும் அழுகையுமாகச் சொன்னான். கேட்டுக் கொண்டிருந்த தலைவர் சிறிது பதட்டமானார்.
'ஸ்டொப் இற் முத்துமுகம்மது! மிஸ்டர் பாறுக்! வெயர் இஸ் யூக்கே லொட்ஜ்!'
'அற் மரதான! நியர் த பொலிஸ் ஸ்டேஷன். அக்கரைப்பற்று மௌலவிர லொட்ஜ்....'
'டெலிபோன்....'
'யெஸ் ஸோர்!'
'கெட் இட் இம்மிடியட்லி'

ஹூஸைன் பாறுக் உடனடியாகத் தொடர்பானார். விஸாரித்தார். முகம்மாறி தலைவரிடம்-
'சேர்! பள்ளிமுனைப் பெண்கள் இருவரும் ஏர்போட்டுக்கு சப்ஏஜன்ஸியுடன் காலை 10.30க்கெல்லாம் போய்ட்டாங்களாம். அந்த குமர்ப் பெண் அழுதபடி போனதைக் கண்டதாக லொட்ஜ் ஓனர் சொல்கிறான்'
'பத்தரைக்கா? ப்ப மணி என்ன.... ஐஸீ...'
'முத்துமுகம்மதை லிப்டன் சந்தியில் விட்டுவிட்டு சுல்தான் 'டக்'கென்று மறுபடி லொட்ஜுக்கு போயிருக்கிறான். எம்பிர சைன் வேணுமென்டதெல்லாம் சும்மா பொய்...'
'ஏன் முத்துமுகம்மதை அந்தரத்தில் விடனும்!'



'சேர்! ஐ திங்க் த ஏஜென்ஸி வுட்ஹேவ் ட்ரை ட்டு ரேப் ஹெர்'
'நோ... இம்பொஸிபிள்! பட் ஹெர் மதர் வித் தெம்.'
'சப்போஸ்.... ஹி வுட் ஹேவ் மிஸ் த மதர் ஓல்ஸோ ஸம்வெயா...'
'நோ! ஆனா மூவரும் ஒன்றாகத்தானே ஏர்போட்டுக்கு போயிருக்காங்க...'
'யெஸ்... ஸோர்.. அட் த ஏர்போர்ட்...?'
'ஓக்கே! சரி முத்துமுகம்மது. அங்க ஏர்போட்டுக்கு போயிட்டாங்க. ஒரு பிரச்சினையும் இல்ல. சிலநேரம் அவன் உன்னை வேதனைப்படுத்துவதற்காகவே இப்படி செய்திருக்கலாம். இனி நீ அவர்களைத் தேடமுடியாது அவள்.. யாரு.. ஙா .. மைமுனாச்சியை 'ப்ளைற்றில 'சென்ற் ஓப்' பண்ணிட்டு திரும்பி லொட்ஜுக்கு வரட்டும். அதுவரைக்கும் நீ இங்கேயே இரு. மிஸ்டர் ஹூஸைன்பாறுக்! ரிமைன்ட் மி அட் எபவுட் சிக்ஸ்தேர்ட்டி.. ஓகே?'
'சரி சேர்!'
'சே...ர்... நா.. நான் என்னய்ய சேர்?'
'வெய்ற்! எனக்கு மீற்றிங் இருக்கு. இங்கேயே இரு! சரியா?'
'செரி சேர்'
தலைவர் எழுந்து விட்டார். தொலைபேசி ஒலிக்கவே இணைப்பதிகாரி எடுத்து சிறிய பரபரப்புடன்.
'சேர்! ப்ரைம் மினிஸ்டர்ஸ் செக்ரட்டரி ஒன்லைன்' என்றார். தலைவர் பேச ஆரம்பிக்க இணைப்பதிகாரி முத்து முகம்மதையும் யாஸீனையும் முன் அறைக்குச் கூட்டிச் சென்றார்.
"எப்ப மச்சான். லாத்தாட்டப் போற?"
'பொறுடா! போவம். தலவரு எல்லாம் செய்வாக!'

முத்து முகம்மதும் யாஸீனும் வீட்டின் வாசலின் கொங்றீட் வாங்கில் அமர்ந்திருந்தனர். முத்துமுகம்மது பாதி நிம்மதியுடன் ஓரமாக ஒதுங்கி நீண்ட நேர பீடித் தாகத்தை தீர்த்துக் கொண்டு வாசலையே பார்த்துக் கொண்டிருந்தான்.

தலைவரை சந்திக்க வரும் கார்கள்... சிங்களப் பிரமுகர்கள்...அதிரடிப்படைகள்... ஆங்கில உரையாடல்கள்.... சிரிப்புகள்... சிங்களப் பேச்சுக்கள்...மைம்னா பௌட்டுல ஏறிருப்பாளோ... சுல்தான்...? மாமி...? சிங்கள நாகரிகப் பெண்மணிகள். கையடக்க செல்பேசியில் சத்தமாகச் சிரித்தனர். பஜரோ ஜீப்பிலிருந்து சங்கீதம்... திடீரென தமிழ் வானொலி நேரம் 6.30 என்றது. காலத்தால் அழியாதவை நிகழ்ச்சியில் முதலில் "அன்னை" படத்தில் பி.பானுமதி...

"ஏய்.. ஏய்... முத்துவாப்பா!" இணைப்பதிகாரி விரைந்து வந்தார்.

"... சேர்... சேர்... நான் முத்துமுகம்மது..."

"அவங்க லொட்ஜுக்கு வந்துட்டாங்க! போவம் ஏறு ஜீப்பில்"

பொலிஸ் ஜீப்பில் இணைப்பதிகாரியும், முத்துமுகம்மதும், யாஸீனும் இரண்டு பொலிசாரும் ஏற ஜீப் வேகமாய்ப் புறப்பட்டுப் பறந்தது.

டேய்! சப்புட அறாமி! நாயே... ஆரடா ஏமாத்தின... பார்ரா முத்துமம்மத... கொளும்புப் பொலிசோட வாறன்...தலவர என்னண்டு நெனச்ச... கொறுக்கா ண்டா அவளவு எளப்பமா.... மாஸிர மகனே.. பார்ரா... என்ன செய்றன் ண்டு பார்ரா...

மனம் வஞ்சினம் கொண்டு துடிக்க எண்ணம் மைமுனாவுடன் பறந்தது. கிளியே போய்ட்டியாடி கிளியாரே... மாநகரின் வர்ண வெளிச்ச சாலைகள்... விர் விர்ரென்று பின்னால் பறக்கும் உயர்ந்த கட்டிடங்கள்...சிவப்பு... பச்சை... செம்மஞ்சள் சமிக்ஞைகள்... வாகனங்கள்... நியோன் விளம்பரங்கள்... தியேட்டரில் மாபெரிய நடிகர்கள்.. சிங்கள நடிகையின் பிரமாண்ட மார்பு... அதில் சாணி சுவரெங்கும் ஆர். பிரேமதாஸ... திடீரென பாரிய சர்சர்சருக்கல் பிறேக்குடன் யூக்கே லொட்ஜ் வாசலில் நின்றது ஜீப்!

முத்துமுகம்மது முதலில் குதித்து பதட்டத்துடன் உள்ளே ஓடினான். மற்றவர்கள் தொடர்ந்தனர். வந்த ஒரு பொலிஸ்காரன் புயலாக லொட்ஜ் அதிபதியின் அறைக்குள் புகுந்து அவனைப் பிடித்து இழுத்து ஒரு கேள்வியுமின்றி பளாரென அறைந்தான்.

"அவன் ல்ல" மாத்தையா?"

"எங்கடா சப்புச் சுலுத்தான்?"

"மேலே 9 ஆம் அறை சேர்... அடியாதங்க சேர்!"
ஒன்பதாம் அறை பூட்டியிருந்தது. பொலிஸின் ஒரே உதையில் பிளைவுட் பலகை கற்புக்குலைந்து விரிந்தது. உள்ளே தலைவர் மட்டும் சிரித்துக் கொண்டிருந்தார். யாருமில்லை. ஆனால் எட்டாம் அறையிலிருந்து அடி உதைகளால் மிரண்டு போய் மாமி பயத்துடன் எட்டிப் பார்த்தாள்.

"டெ.. யாசின்.. என்ட மகனே.. வந்துட்டியா.. ராசா...?
"மாமி! மைம்னா எங்கே... சுல்தான் எங்க?"

(இன்னும் வரும்)

# வரலாறு தொல்பொருள் ஆய்வுகளை இஸ்லாம் மறுக்கின்றதா? 6

*"ஒவ்வொரு தூதரையும் அவருடைய சமூகத்தாருக்கு அவர் விளக்கிக் கூறுவதற்காக அவர்களுடைய மொழியிலேயே (போதிக்கும்படி) நாம் அனுப்பி வைத்தோம்" (குர்ஆன் 14:4)* எனவே அல்லாஹ்வின் நேரடி வழிகாட்டலில் பண்படுத்தப்பட்ட இறைதூதர்களினால் மக்களுக்குக்கிடைத்த அறிவில்தான் மெய்யான அறிவியல் பரம்பல் பாருலகிற்கு பரவமுடியும். ஏனெனில், அல்லாஹ்வினால் முன்வைக்கப்படும் வழிகாட்டல்களே விவேகமானதும், மிகச் சரியானதுமாகும்.

ஆயின், ரிஸாலத்தின் - நபித்துவத்தின் மூலமான அறிவு உயர்ந்தது. யதார்த்தபூர்வமானது என்பதில் ஐயமில்லை. அந்த வகையில் இஸ்லாத்தின் கண்ணோட்டத்தில் வரலாறு, தொல்பொருள் ஆய்வுத்துறையிலும் ரிஸாலத்தின் பங்களிப்பே மிகச்சரியானதுமாகும்.

ஜே. வி. என் சுவீடன் என்பவர் "நவீன அறிவியல் கண்டுபிடித்துள்ள பிரபஞ்ச உண்மைகள் சந்தேகங்கள் நிறைந்தனவாகவும், தெளிவற்றவனவாகவும் உள்ளன. இயற்கை பற்றி நாம் இன்று அடைந்துள்ள அறிவியல் முன்னேற்றம் கடந்த கால நிலைமைகளை விட மிகவும் உறுதியானதாகும். என்றாலும் கூட அதன் மூலம் கிடைக்கப்பெற்றுள்ள தகவல்கள் அனைத்தும் திருப்திகரமானவையாக இல்லை. எனவேதான் நாம் இன்று எல்லாத்துறைகளிலும் சிக்கலான தெளிவற்ற தன்மைகளையும் முரண்பாடான நிலைமைகளையும் எதிர்நோக்குகின்றோம்". என்கிறார்.

மனிதனுக்கு வழிகாட்டுவதற்கு அவனது நிலைமைகளை நன்கறிந்தும், மனிதனிடம் இருக்கும் அறிவை விடவும் மிகைத்த ஒன்றின் மூலம் காட்டப்படும் அறிவியல் பரப்பே உயர்ந்ததும், உண்மையானதுமாகும். அது மட்டுமன்றி "வஹி என்பது மனித சிந்தனையானதல்ல, அது வேதவாக்கான அல்லாஹ்வின் அறிவிப்பாகும்" இதனைப் பின்வரும் கூற்றுக்கள் நிரூபணம் செய்வதாகக் கொள்ளலாம்.

## வஹீயை மறுப்பது விவேகமல்ல

"அல்லாஹ்வின் தூதர்களுக்கு அல்லாஹ்வினால் வழங்கப்பட்ட வேத வெளிப்பாடானது மனிதனின் உள்ளத்தோடோ, அன்றி அவனது மூளையோடோ தொடர்புடைய அம்சமன்று. அல்லது சில தத்துவஞானிகள், விஞ்ஞானிகளின் உள்ளத்தில் திடீரெனத் தோன்றி, ஒரு புதுச் சிந்தனையைத் தோற்றுவிக்கும் இயல்பூக்கம் (Intution) அன்று; அது மெய்ஞ்ஞானியின் மெய்ஞ்ஞானப்பயிற்சியின் விளைவாக அடைந்த ஆன்மீக அனுபவத்தின் அடிப்படையில் பெற்ற அறிவுமன்று. (நன்றி : அல்குர்ஆனின் வரலாறும் வாழ்வு நெறியும் - கலாநிதி எம். ஏ. எம். சுக்ரி)

"வஹி என்பது வாக்காகும். மனித சிந்தனைக்கு அப்பாற்பட்ட நித்தியனாகிய அல்லாஹ்வின் பேச்சையே வஹி என்ற பதம் குறிக்கின்றது. இது அல்லாஹ்வின் வாக்கு, பேச்சு, வழிகாட்டல், ஒவ்வொரு சிருஷ்டிப் பொருளுக்கும் அதனதன் பண்பு, தொழிற்பாடு ஆகியவற்றுக்கேற்ப அருளப்படுகின்றது. ஆனால் அல்லாஹ்வின் தூதர்களைப் பொறுத்தளவிலோ அது மிக உயர்ந்த நிலையில் அல்லாஹ்வின் வேதவாக்காக அருளப்படுகின்றது"
(நன்றி : அல்குர்ஆனின் வரலாறும் வாழ்வுநெறியும் - கலாநிதி எம்.ஏ.எம். சுக்ரி)

"ரிஸாலத்தை, நபித்துவத்தை மறுத்துரைப்பதற்கு தகுதிவாய்ந்த அறிவியல் ஆதாரங்கள் ஏதுமில்லை. ரிஸாலத் மனித சிந்தனை ஊடறுத்துச் செல்லமுடியாத மறைவான உலகோடு தொடர்பானதாகையால் ஆன்மீக அறிவியல் பரிபக்குவம் அடைந்தவர்களுக்கே அது பற்றிய உண்மைகளை உணர முடியும்".
(நன்றி : இஸ்லாமிய சிந்தனை மலர் 12 : இதழ் 01 ஒக் - டிசம்பர் 1989 அஷ்செய்க். ஸீ. ஐயூப் அலி (எம்.ஏ) )

"வஹி எந்த உணர்வு முறைப்பாட்டுக்கு விடையாக அருளப்பட்டதோ, அந்த உணர்வு எதிர்பார்த்த திருப்தியைக் கொடுத்ததென்றால், இதனை நாம் அல்லாஹ்விடமிருந்தே பெற்றுக்கொண்டேன் எனக் கூறுபவரின் வார்த்தையை எவ்வாறு பொய்ப்பிக்க முடியும்?"

அல்லாஹ்விடமிருந்து செவியுறாது. அத்தகையதொரு மகத்தான உண்மையை பலவீனமான மனித சிந்தனை எவ்வாறு கற்பனை செய்து கூறமுடியும்? அவ்வாறு ஒருவன்தான் கற்பனை செய்த விடயத்தை அல்லது ஆராய்ந்து பெற்ற முடிவை அல்லாஹ் தனக்கு அறிவித்ததாகக் கூறினால், நிச்சயமாக அவன் மிகப் பெரிய அநியாயக்காரனாகவும் பொய்யனாகவுமே இருப்பான்.

**எம்.எம்.எம். நூறுல்ஹக் சாய்ந்தமருது 05.**

(நன்றி : இஸ்லாமிய சிந்தனை மலர் 12 : இதழ் 01 ஒக்டோபர் - டிசம்பர் 1989 அஷ்செய்க் ஸீ. ஐயூப் அலி (எம். ஏ)

எனவே அல்லாஹ்வின் அறிவுகள், வழிகாட்டல்கள் அவனது தூதர்கள் மூலமே வெளிக்காட்டப்படுகின்றன. நபித்துவம் அறிவியல் ரீதியாக மெய்ப்பிக்கப்பட்ட ஒன்றாகும். ஆயின் ரிஸாலத் மூலம் வெளிக் கொணரப்படும் அறிவில், வழிகாட்டலில் பொய்மை கிஞ்சிற்றும் கலந்து விடாதவை, நெருங்காதவை என்பது பட்டவர்த்தமானதாகும்.

ஆகவே ரிஸாலத் மூலம் வெளிப்படும் - வஹி மூலமான அறிவே தெளிவானதும் உண்மையானதுமாகும். எனில் வரலாறு, தொல்பொருள் ஆய்வுகளிலும் ரிஸாலத் மூலம் உறுதி செய்யப்படுகின்ற கருத்துக்களே சரியானதென ஒப்புக்கொள்ளப்படுவதையே இஸ்லாம் ஏற்றுக் கொள்வதினால், முஸ்லிம்களும் இவ்விடயத்தில் வேறு அபிப்பிராயம் கொள்ள இடமில்லை என்பது மிகத் தெளிவான உண்மையாகும்.

*அனைத்தையும் நன்கறிந்தவன் அல்லாஹ் ஒருவனே!*

*(முற்றும்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இல்லமே சுவனமாக...! இனிய யோசனைகள்...!

**சுவனம்**

அந்தப் பெயரில்தான் எத்தனை ஈர்ப்பு! கவலையே இல்லாத; முடிவே இல்லாத; காலவரையறையே இல்லாத; துயரமோ, துக்கமோ துளியும் இல்லாத; இடத்திற்குப் பெயர்தான் சுவனம்!

நிம்மதிக்கும், திருப்திக்கும் தேவையான அத்தனையும் அங்கு கிடைக்கும்...! கொஞ்சம் முயன்றால் நமது இல்லங்களையும் சுவனங்களாக்கி விடலாம். அந்த 'நிரந்தரமான சுவனத்தில்' இடம் பிடிக்க வழிவகை செய்யும் வகையில் இல்லச் சூழலை ஆக்கிவிடுவோம்.

இல்லத்தில் மகிழ்ச்சி பொங்கவும், துயரம் சிதைக்கவும்செய்வது கணவன்-மனைவி கைகளில்தான் இருக்கின்றது. கணவன் - மனைவிகளின் பரஸ்பரத் தொடர்பு சுமுகமானதாக, நல்லபடியாக இருந்தால் இல்லச் சூழலும் இனிமை பொங்கும் இதயச் சோலையாகத் திகழும். கணவன் மனைவிக்கான தொடர்புகள் பரஸ்பரம் நேசமும் பாசமும் அன்பும் பண்பும் நிறைந்ததாக இருக்கும்போது எவ்வித நவீன வசதியும் இல்லாத குடிசையும் மாடமாளிகைகளுக்குப் போட்டி போடும் வகையில் இனிமை பொங்கும் இடமாகத் திகழும். அதே சமயம் பரஸ்பரத் தொடர்புகள் சீர்குலைந்து போனால் மாடமாளிகைகள் கூட நாசமாகிவிடும். கணவன்-மனைவிக்கிடையேயான தொடர்புகள் மிகவும் உணர்வு பூர்வமானவை. ரொம்ப சென்ஸிடிவானவை. துளியுண்டு அலட்சியமாக இருந்துவிட்டாலும், கணப்பொழுது கவனஞ்செலுத்தத் தவறினாலும் கசந்துவிடும்.



கணவன்-மனைவி பின்பற்றுவதற்காக ஒரு செயல்திட்டம் இங்கே வழங்கப்படுகிறது. இதனைப் பின்பற்றி இல்லத்தையே சுவனமாக்கிவிட முடியும்.

**கணவனுக்கு சில யோசனைகள்**

**ஃபஹீமா மாலிக்**

- அவ்வப்போது உங்கள் மனைவிக்கு ஏதாவதொன்றை அன்பளிப்பாகக் கொடுத்து வாருங்கள். ஏனெனில் அதனால் அவள் மிகவும் பரவசமடைகிறாள்.
- மனைவிக்கு ஏதாவது வாக்குக் கொடுத்தால் அதனை நிறைவேற்றத் தவறாதீர்கள்.
- வீட்டில் கவலையுடன் முகத்தைத் தொங்கப் போட்டுக்கொண்டு இருக்காதீர்கள். ஏனெனில் மனைவி அதனை விரும்புவதில்லை. உங்கள் கவலையை அவளிடம் பகிர்ந்து கொள்ளுங்கள். உற்சாகமாக இருங்கள்.
- குழந்தைகளுடன் பேசுவதைப்போல மனைவியுடன் பேசாதீர்கள். ஏனெனில் அதனால்அவளது மன உறுதி பாதிக்கப்படுகிறது. நீங்கள் அவளை சரியான மக்கு-ஆக நினைப்பதாக அவள் புரிந்துகொள்வாள்.
- எப்போதுமே உங்கள் மனைவி மீதான அன்பை வெளிப்படுத்துங்கள். ஒரு பெண்ணுக்கு எல்லாமே அதில்தான் இருக்கிறது. ஒரு பெண் எவ்வளவுதான் முதியவளாக இருந்தாலும், கணவனின் அன்புமொழிகளைக் கேட்கும்போது புளகாங்கிதமடைவாள்.
- உங்கள் மனைவி அறிவாளியாக நன்கு படித்தவளாக இல்லையா. அவளை ஏளனம் செய்யாதீர்கள். ஏனெனில் வீட்டு நிர்வாகத்திற்கு அறிவு புலமையைவிட நிர்வாகத்திறன்தான் அதிகமாகத் தேவைப்படும்.
- வீட்டில் மனைவியுடன் அதிகமாகப் பேசாதவராக 'மூடி'யாக இருக்காதீர்கள். ஏனெனில் அதனால் உங்கள் மனைவியின் உள்ளத்தில் விதவிதமான சந்தேகங்கள் தலைதூக்கும்.
- சும்மா "சாப்பாடு சரியில்லை; உப்பில்லை; காரமில்லை" என்று சகட்டுமேனிக்கு விமர்சனம் செய்யாதீர்கள். பிறகு அவள் உங்களுக்கு எது பிடிக்கும், எது பிடிக்காது என்பதை பொருட்படுத்தவேமாட்டாள்.
- எப்போதுமே எனது பேச்சுதான் நடக்கணும் என்று பிடிவாதம் பிடிக்காதீர்கள். சில சமயம் உங்கள் மனைவியின் பிடிவாதத்தையும் ஏற்றுக் கொள்ளுங்கள்.
- எப்போதுமே, "இவள் எனது குழந்தைகளின் தாய்" என்ற கோணத்திலேயே மனைவியைப் பார்க்காதீர்கள். பிறகு அவள் உங்களை விட்டு விட்டு குழந்தைகள் குறித்து அதிகமாகக் கவலைப்பட ஆரம்பித்துவிடுவாள்.
- மற்றவர்கள் முன்னாள் உங்கள் மனைவியை எந்நிலையிலும் கண்டிக்காதீர்கள். ஏனெனில் அவள் அதனை வாழ்நாள் முழுவதும் மறக்கமாட்டாள்.
- ஒப்புக்கு பாராட்டாதீர்கள். சும்மா புகழ்மாலை சூட்டாதீர்கள். ஏனெனில் வெறும் புகழ்ச்சியால் அவள் மகிழ்ச்சி அடைவதில்லை. அதற்கு மாறாக வாய்மையாகப் பாராட்டுங்கள்.
- "என்னத்தையோ மறைக்கிறார்" என்ற எண்ணம் உங்கள் மனைவிக்குத் தோன்றிவிடும் வகையில் அவளிடம் பேசாதீர்கள். ஏனெனில் இது அவளை அதிகமாக எரிச்சலூட்டும்.
- மனைவி முன்பு மற்ற பெண்களின் சமையல், கூந்தல், நடத்தை, பழகும் சுபாவம் இன்னும் பிறவற்றைக் குறித்து புகழ்ந்து விடாதீர்கள். "இந்தத் தன்மைகள் தன்னிடம் இல்லை போலும்" என அவள் தீர்மானித்து விடுவாள்.
- கணக்குப் போட்டு செலவுக்குத் தேவையான பணத்தைக் கொடுப்பதில் கறாராக இருக்க வேண்டாம். இதனால் தன்னை சிறுமைப்படுத்துவதாக அவள் உணர்வாள்.
- உங்கள் சம்பாத்யம் குறித்து ரொம்பவும் பீற்றிக் கொள்ளாதீர்கள். உங்கள் அசல் வருமானம் குறித்து சரியாகச் சொல்லிவிடுங்கள். அதனால் வரவுக்கேற்ப செலவுசெய்யும் பழக்கம் ஏற்படும்.
- மனைவியின் பணத்தில் வியாபாரம் செய்யாதீர்கள். நீங்கள் எவ்வளவுதான் நல்லெண்ணம் கொண்டிருந்தாலும் அவள் சந்தேகப்படுவாள்.
- எப்போதுமே 'இப்படி இருக்கணும்' 'அப்படி நடக்கணும்' என அறிவுரையாகச் சொல்லிக் கொண்டிருக்காதீர்கள். அவள் உங்கள் மனைவி; மாணவி அல்ல!
- நீங்கள் எப்படி நடந்துகொள்ளனும் என்று உங்கள் மனைவி விரும்புகிறாளோ, அதன்படி நடக்கமாட்டேன் என ஓரேயடியாக நிராகரித்துவிடாதீர்கள். அவளை மகிழ்விக்க சில சமயம் அவள் சொல்கிறபடி நடந்துகொள்ளுங்கள்.
- வேலைக்காரி வராத சமயத்தில் வீட்டு வேலையில் மனைவியுடன் ஒத்தாசையாக இருக்கத் தவறாதீர்கள்.

*(இன்னும் வரும்)*

இல்லறத்தில் நுழையும் நம்மவர்கள் எல்லோரும் அது பற்றிய எல்லா வகையான அறிவுகளுடனும் இருப்பதில்லை. இதனால் சிற்சில இடறல்கள் தலைகாட்டவே செய்யும். அவ்வாறானவற்றைக் களைந்து நல்லறமாக மாற்றுவதற்கும் ஒருவரை ஒருவர் நன்கு புரிந்து இணைபிரியாத் தம்பதிகளாகத் திகழ்வதற்கும் ஆலோசனைகளை பன்னூல் ஆசிரியர் 'கையேடு கலைஞர்' டாக்டர் அப்துல் பாரி 'புதுமணத் தம்பதிகள் கையேடு' என்ற தலைப்பிலான நூலில் முன்வைத்துள்ளார். அவற்றிலிருந்து சில பகுதிகள் இங்கு இடம்பெறுகின்றன. நமது மக்களும் இவ்வாறான இடறல்களை சந்திக்கும் போது அவற்றிலிருந்து விடுதலை பெறுவதற்கு இத்தொடர் வழிகாட்டும் என்று நம்புகின்றோம்.

# குடும்பப் பழக்கம் 4

புதிதாக வரும் மருமகள் அந்தக் குடும்பத்தின் பழக்க வழக்கத்தைத் தெரிந்து கொள்ள வேண்டும். அதற்கு ஏற்ப நடந்து கொள்ள வேண்டும். நல்ல பழக்க வழக்கங்களை மதிக்கக் கற்றுக் கொள்ள வேண்டும்.



ஒவ்வொரு வீட்டிலும் ஒரு நடைமுறை இருக்கும். புதிதாக வீட்டுக்கு வரும் மருமகளுக்குத் தனது வீட்டின் பழக்க வழக்கங்களை மாமியார் சொல்லிக் கொடுக்க வேண்டும்.

வீட்டில் தாத்தா, பாட்டி, மச்சான், மச்சி, கொழுந்தன், கொழுந்தி என்று இருப்பார்கள். ஒவ்வொருவரின் குணம் என்ன? குறை என்ன? யார் யாருக்கு எது பிடிக்கும் எது பிடிக்காது, அவர்களிடம் எப்படிப் பழக வேண்டும் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதையும் புது மருமகளுக்கு மாமியார் சொல்லித் தரவேண்டும்.

புகுந்த வீட்டு உற்றார் உறவினர்களையும் புது மருமகள் தெரிந்து கொள்ள வேண்டும். கணவன் அல்லது மாமி அவர்களை அறிமுகம் செய்து வைக்க வேண்டும். மிகவும் நெருங்கிய உறவினர்கள் என்றால், கணவன் அவர்களின் வீட்டுக்கு மனைவியை அழைத்துப் போய்ப் பழக்கப்படுத்திவிட வேண்டும்.


**மூடப் பழக்க வழக்கங்கள்**

அதே நேரம், மூடப்பழக்க வழக்கங்களுக்கு அடிமையாகக் கூடாது. திருமணம் முடிந்ததும் இந்தப் பிரச்சினை ஓராண்டு ஆட்டிப் படைக்கும். சடங்கு சம்பிரதாயம் என்று அது வரைக்கும் அந்தக் குடும்பத்தின் நிம்மதியே குலைந்துவிடும். எனவே, காலத்துக்கு ஏற்ப அறிவு பூர்வமாக நம்மை மாற்றிக் கொள்ள வேண்டும். கல்யாண அழைப்பு, சம்பந்தி விருந்து என்று பல பெயர்களில் மாமியார்கள் மருமகள் வீட்டுக்கு செலவு வைப்பார்கள். செய்யாவிட்டால், மாமியார் வீட்டில் அந்தப் பெண்களைப் பாடாய்ப் படுத்துவார்கள். இந்த மாதிரி நேரங்களில், இளைஞர்கள் தலையிட்டு, பெரியவர்களை சமாதானப்படுத்தி, தேவையற்ற சடங்கு சம்பிரதாயங்களை நிறுத்த முயற்சிக்க வேண்டும்.

*(இன்னும் வரும்)*

# புதிய பெரும் விளையாட்டு

# ஆப்கான் பெண்ணைவைத்து அமெரிக்கா ஆடுகிறது!



உலக முஸ்லிம்களை கொச்சைப்படுத்தும் நோக்கில், முஸ்லிம்களின் கலாசார பண்பாட்டு விழுமியங்களை சிதைக்கும் பாதையில் உலக அரங்கில் அமெரிக்கா இப்போது பல்வேறு விசமத்தனமான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன.

அந்தவகையில் அண்மையில் மணிலாவில் நடைபெற்ற உலக ராணிப் போட்டியில் ஆப்கானிஸ்தானைச் சேர்ந்த ஒரு பெண்ணை அமெரிக்கா தயார்படுத்தி நீச்சல் உடையில் உலகு பார்க்கும் வண்ணம் உலாவவிட்டது.

ஆப்கானிஸ்தான் மீது படையெடுத்து அங்கிருந்த அரசாங்கத்தை மாற்றி தனது பொம்பை அரசாங்கத்தைக் கொண்டு வந்ததற்கான அர்த்தம் இதுதான் போலும்.

டா சமட்ஸாய் என்ற இந்தப்பெண் 25 வயது யுவதியாகும்! 1996ம் ஆண்டு ஆப்கானிஸ்தானிலிருந்து அமெரிக்காவுக்குச் சென்று குடியேறி வாழும் இப்பெண்ணைத்தான் அமெரிக்க அரசு திட்டமிட்டு ஆப்கானிஸ்தான் சார்பில் மணிலாவில் நடைபெற்ற போட்டிக்கு அனுப்பியிருந்தது இப்போது தெரியவந்துள்ளது.

# வடக்கு கிழக்கில்- மீள் குடியமர்விற்காகத் தெரிவு செய்யப்பட்ட எட்டுக் கிராமங்களில் முஸ்லிம் கிராமங்கள் எதுவுமில்லை!

*-மட்டக்களப்புச் செய்தியாளர்-*

யுத்தத்தினால் அகதிகளாக்கப்பட்ட மக்கள் மீளக் குடியமர்த்தப்படவிருக்கின்றார்கள். இப்பொழுது இந்த மீள் குடியமர்விற்காக வடக்கு-கிழக்கு மாகாணங்களில் எட்டுக் கிராமங்கள் மீள் குடியமர்விற்காகக் தெரிவு செய்யப்பட்டுள்ளன. ஆனால் அவற்றில் ஒரு முஸ்லிம் கிராமம் கூட உள்ளடக்கப்படவில்லை.

| | | |
|---|---|---|
| மட்டக்களப்பு | - | பெரியபுல்லுமலை |
| அம்பாறை | - | தங்க வேலாயுத புரம் |
| திருகோணமலை | - | மாங்காய் ஊற்று |
| முல்லைத்தீவு | - | உப்பு மா வெளி |
| வவுனியா | - | கல்மடு |
| மன்னார் | - | சொர்ணபுரி |
| கிளிநொச்சி | - | தம்ப காமம் |
| யாழ்ப்பாணம் | - | ஆழியுவளை |

ஆகிய எட்டுத் தமிழ்க்கிராமங்களே வடக்கு கிழக்கின் எட்டு மாவட்டங்களிலிருந்தும் தெரிவு செய்யப்பட்டுள்ளன. இந்தக் கிராமங்களில் தமிழ் மக்களைக் குடியேற்றுவதற்கான பொறுப்பு எல்.ரீ.ரீ.ஈ. இனரின் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்திடம் (TRO) ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மீள் குடியமர்விற்கான பொறுப்பு எல்.ரீ.ரீ.ஈ. இனரிடம் ஒப்படைத்ததன் மூலம் பாரம்பரிய பூர்வீகப் பூமியிலிருந்து விரட்டப்பட்ட முஸ்லிம்கள் தொடர்ந்தும் அகதிகளாகவே வாழவேண்டிய துர்ப்பாக்கியம் ஏற்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் மாத்திரம் முஸ்லிம்கள் தாம் பாரம்பரியமாக வாழ்ந்த 28 கிராமங்களிலிருந்து எல்.ரீ.ரீ.ஈ. இனரால் விரட்டப்பட்டார்கள். இதே போன்று வடபகுதியிலிருந்தும் இலட்சக்கணக்கான முஸ்லிம்கள் ஒரு சில மணிநேரத்தில் உடுத்த உடையோடு மாத்திரம் வெளியேற்றப்பட்டார்கள். ஆயினும் ஒரு கிராமம் கூட முஸ்லிம்களின் மீள் குடியமர்விற்காகத் தெரிவு செய்யப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதே வேளை மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழர் மீள் குடியமர்விற்காக பெரிய புல்லுமலையைத் தெரிவு செய்துள்ள புலிகள் அங்கு முஸ்லிம்கள் குடியிருந்த காணிகளிலேயே முதலில் தமிழர்களைக் குடியேற்றி வருவதாக நியாயமுள்ள தமிழ் மக்கள் தெரிவிக்கின்றார்கள்.

## இரத்தக் கண்ணீர்

உனது இரத்தமுறைந்த தெருக்களில்
நடப்பட்ட மின்கம்பங்களினிடையேயான
மின்சாரக் கம்பிகளில்
தூக்கிலிடப்பட்டு தொங்குகின்றன
வெளவால்கள்

இனியென்ன
இலக்குத்தெரியா,
குருட்டுத் தலைவர்களின் தோழில்
நடக்க வொண்ணா முடக்கால்களோடு
நாம் நர்த்தனமிடுகையில்

வயல் வெளிகளில்
ஆன்மாக்களை அறுத்தெறிந்து
சூடு குமித்தது பற்றி
மிம்பரை நோக்கிப் பேசிய
துப்பாக்கிகள் சுமந்த
இனந்தெரியாத பிணங்கள் பற்றியெல்லாம்
சொல்வதற்கு யாருமில்லை.

இரவுகளான போதுகளில்.....
மின்சாரக் கம்பிகளில்
தூக்கிலிடப்பட்டு தொங்குகின்றன-
இனந்தெரியா
பகற்குருட்டு வெளவால்கள்

எங்களில் வாக்கு வேட்டையாடுகின்ற
வேடர்கள்
கண்ணீர்ப்புகை புகாரினூடே
குதிரையாக பார்த்து நிற்பர்.

வெளவால்களைப்போலவே
அவர்களும் ஒருக்கால் உணர்வர்
துப்பாக்கியின் பயன்பாடு பற்றி
கடைசி மூச்சின் கனதி பற்றி,
நம்மிலொருவனின் குறி
அவர்களின் தலைக்குள் வெடிக்கையில்

காகமும் நரியும் கதையைச் சொன்ன,
உங்களின்
எல்லாக் கேள்விகளுக்கும் சரியாக
பதிலளித்ததாக, என்
தலையைத்தடவிய சேர்......

தினமும்
வீட்டுக்குமுன்- மின்சாரக்கம்பிகளில்
அழுகி நாறும் வெளவால்களை
கடந்து வரும்- என்னிட(மு)ம்,
இருப்பதென்னவோ
ஒரேயொரு கேள்விதான்

இந்த
இனந்தெரியாத நபர்கள் எல்லாம்
யார் சேர்??

**இளங்கவி நிப்றாஸ்**
தனித்தேசிய முஸ்லிம் அலகு

## இரண்டு ஹைக்கூக்கள்

காபிர்களும்
குர்ஆனை தொடுகிறார்கள்
எரிப்பதற்கு!

சின்னச் சின்ன
'பார்களா'ய்'
பீடா பெட்டிக்கடைகள்!

வெலிமடை ஜஹாங்கீர்
கொழும்பு - 11

## ரமழானே நீ வருவாய் என்று....

கவிதைகள்

புனித ரமழானே
புதுப்பொலிவு தரும் ரமழானே...
புது யுகம் படைத்திட
வருவாய் ரமழானே...

உன்-வருகையால்
ஒவ்வொரு ஆன்மாவிலும்
ஈமானிய வாடைவீச
தென்றலாய் வருவாய் ரமழானே...
ஒவ்வொரு உள்ளமும்
தக்வாவால் ததும்ப
வருவாய் ரமழானே...

இன்னிசைகளைக் கேட்டு
இரசித்த காதுகளிலே...
குர்ஆனிய வசனங்கள்
தறாவீஹ் தொழுகையிலே...
அலைமோத சீக்கிரமாய்
வருவாய் ரமழானே...

தஹஜ்ஜத்தை காணாத விழிகள்
ஸஹருடைய நேரத்திலே...
நீர் கசியப் போகின்றன
சாந்தியான ஸஹரின்
நேரம் நினைத்து...
இதயத்துடிப்பும்
இசையாய் ஒலிக்கிறது

ரமழானை எதிர்பார்த்து

இதயவறையில் பாவங்களைப் போக்கி...
மன்னிப்பாய் என்ற ஆதங்கத்தில்
மன்னவனின் மடியில் மன்றாடி...
கண்ணீர் வடிக்கும்
ஆயிரம் மாதத்திலும்
அருமையான இரவை...
அமைத்து வரும்
ரமழானின் வருகையை
ஏற்பதற்கு ஏங்குகிறோம்...

தூசுபடிந்த உள்ளங்களையும்
மூடப்பட்ட இயற்கைக் கதவுகளையும்
தட்டுவதற்கு வருவாய் ரமழானே...
எம்-இடுப்பொடித்த பாவமெல்லாம்
கூனிப்போகிறது ஆன்மாவுக்குள்...
ஒரு குரல் எடுத்து நிற்கிறது
சீக்கிரம் வருவாய் ரமழானே...

ஆன்மாவைச் சலவை செய்ய
காத்திருக்கிறோம்...
ஒரு மாத யுத்தத்திற்காய்
பூத்திருக்கிறோம்...
சீக்கிரம் வருவாய் ரமழானே என்று...

காத்தநகர்
எம்.ரி.எம். யூனுஸ்.

## ஆனாலும் ஒரு துயரம்

உரித்தெடுப்பதற்கினி
என்னவிருக்கிறதெம்மிடம்
உணர்வொன்றைத் தவிர!

எங்கள் உதிரங்களை நீ
உறிஞ்சுவதால்-
நாளையொரு தேசம்
புன்னகைக்குமென்றால்
இன்னும் எங்கள் நாடி நரம்புகளை
பொசுக்கு.
தொண்டைக்குள் இறங்கும்
சோற்றுக் கவளங்களும்
உன் தராசில் தான்-
நிறுக்கப்பட வேண்டும் என்று நீ
நீதி புகட்டினால்-
நாங்கள் நீட்டுகிற கலிமா
விரல்-
யாரைக் குற்றம் சுமத்துகிறது!
கூவ விடாமல் எங்கள்
சொண்டுகளை நீ
மண்ணுக்குள் புதைக்க முனைந்தாய்
அந்த 'ஆஸாக் கோல்' மீளவும்
இங்கொரு சரித்திரம் படைக்கலாம்!

ஆனாலும் ஒரு துயரம்
இனி வரலாறுகள் ஒரு போதும்
எழுதி விடக் கூடாது.
எங்கள் ஜனாசாக்களை அள்ளிக்
குமித்து-
கண்ணீரால் குளிப்பாட்டியதாய்!

-மருதமுனை பாத்திமா பிர்ஜா-

## வரலாற்றைப் பணித்து விடு



ரமழானே நீ வருக
ரஹமத்தை நீ தருக
எமது உளம் மகிழ்ந்திடவே!
இனிய நோன்பை யீந்திடுக!

பாவங்கள் போக்கிடவே
பதமான நோன்பிடுக
சுவனத்து வாசனையை
சுவைத்திடவே யருள்க!

முப்பது நாள் நோன்பதனை
முறியாது நோற்கச் செய்
எப்போதும் மக்களுக்காய்
இறையுதவி நாடச் செய்!

ஸதக்காவின் தத்துவத்தை
சக பேரும் உணரச் செய்
இதயத்தில் ஈகைதனை
எல்லோர்க்கும் விளங்கச் செய்!

நரகத்து வேதனையை
நயமாக உணர்த்தி விடு
இரங்குபவர் அனைவர்க்கும்
இருப்பதை நீ வழங்கச் செய்!

சொர்க்கத்திற் கொலுவிருக்க
சொல்லிடுவாய் புத்திதனை
வார்த்தெடுத்த நோன்புதனின்
வரலாற்றைப் பணித்து விடு!

மூதூர் 'கலைமேகம்'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வயலுக்குச் சென்ற முஸ்லிம்கள் மீதான தாக்குதல்

# நம்பிக்கையை சிதறடிக்கும் செயல்!

திருக்கோவில் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட வட்டமடு வயல் நிலங்களில், காணிகளுக்கான அனுமதிப்பத்திரங்களும், காணி உறுதியும் வைத்திருப்பவர்கள் அப்பிரதேசத்தில் விவசாயத்தை மேற்கொள்ளலாம் என கடந்த 10.7.2003ல் நடந்த காணிப்பிரச்சினைகள் சம்பந்தமாக ஆராயும் கூட்டத்தில் முடிவு காணப்பட்டது.

இருந்தபோதும் 2003.10.26ம் திகதி ஞாயிற்றுக்கிழமை, வட்டமடு வயல் நிலங்களுக்கு உழவு வேலைகளுக்காக சென்ற முஸ்லிம் விவசாயிகள் தாக்கப்பட்டுள்ளதோடு, உழவு இயந்திரமும் சேதத்திற்குள்ளாக்கப்பட்டுள்ளது. மேற்படி சம்பவத்தில் தாக்கப்பட்டவர்களின் விபரம்:

01. மீராசாஹிப் அப்துல் பரீட் (30 வயது)
564, எம்.எம்.வி. வீதி,
அக்கரைப்பற்று - 06.

02. சந்திரமோகன் (22 வயது)
வைத்தியசாலை வீதி,
பனங்காடு (கூடச்சென்ற உழவு இயந்திரச் சாரதி)

03. அலித்தம்பி மரைக்கார்
ஆதம்லெவ்வை (60 வயது)
401, ஜின்னா வீதி
அக்கரைப்பற்று - 05.

04. முகம்மது இப்றாலெவ்வை ஜாபிர்
(32 வயது)
138, ஜின்னா வீதி
அக்கரைப்பற்று - 05

05. இப்றாகிம் அப்துல் றஷீட் (51 வயது)
191, உடையார் வீதி
அக்கரைப்பற்று - 04.

உடலில் பல பாகங்களிலும் காயங்கள் ஏற்பட்டு, வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்து 27.10.2003ம் திகதி வீடு சென்று அவர்களிடம் இதுபற்றிக் கேட்டோம்.

*சம்பவம் எவ்வாறு நடந்தது?*

"நாங்கள் 07 மெசின்களில் உழவச் சென்றோம். அவ்வேளையில், எமக்கு ஏற்கனவே அரசாங்க அதிபரால் வழங்கப்பட்ட விவசாயம் செய்வதற்கான அனுமதிக்கடிதத்தையும் கொண்டு சென்றோம். அப்போது, வட்டமடுவிலுள்ள பரீட் டெயிலரின் வயலில் அரை ஏக்கர் அளவுக்கு மாட்டுக்காலை ஒன்று இடப்பட்டிருந்தது. எனவே காலைச் சொந்தக்காரர்களிடம் 'காலையை' அகற்றுமாறு கேட்டுக் கொண்டோம். அதற்கு அவர்கள்; எங்கள் நிர்வாகம் உத்தரவிட்டால் மட்டுமே வெளியேறுவோம் என்று கூறினர். அதைப் பொருட்படுத்தாத நாங்கள் காலையைச் சுற்றியுள்ள வயலை உழவ ஆரம்பித்தோம்.



அவ்வேளை, திடீரென பொல்லுகளோடும், தடிகளோடும் அங்கு வந்த 40ற்கும் அதிகமான தமிழர்கள் எங்களைத் தாறுமாறாக தாக்கினர். தமிழனா? முஸ்லிமா என்று கேட்டு கேட்டும் சிலர் தாக்கப்பட்டுள்ளனர்."

*இச்சம்பவத்திற்கு ஏதேனும் பின்னணி உண்டா?*

"சமாதான உடன்படிக்கை காலங்களில் நாங்கள் சின்னச் சின்ன வரிகளைச் செலுத்திவந்தோம். திடீரென மேற்படி சம்பவத்திற்கு முந்திய வாரம் எமது வயல்களுக்கு வந்த பெயர் குறிப்பிடத்தக்க புலி உறுப்பினர் 'பாவா'வின் உத்தரவின்றி வேளாண்மை செய்யக்கூடாது எனக்கூறி, வான் நோக்கிச் சுட்டுவிட்டுச் சென்றனர்.

இது குறித்து நாம் முறைப்பாடு செய்தபோது; புலிகள், பொலிஸ், சமாதானக் குழு என்பவர்களோடு எம்மையும் உள்ளடக்கிய கூட்டம் ஒன்று அம்பாறை அரச அதிபரின் தலைமையில் அம்பாறை கச்சேரியில் நடைபெற்றது.

அக்கூட்டத்தில், நாம் கொண்டு சென்ற அனுமதிப் பத்திரங்களின் (Permit) போட்டோ பிரதியை - அரச அதிபர் மூலப்பிரதியைப் பார்த்து (Original) அத்தாட்சிப்படுத்துமிடத்து தாமும் முஸ்லிம்கள் வேளாண்மை செய்ய அனுமதி வழங்குவோம் என்று புலிகள் கூறினர். இதற்கமைவாக, 226 காணி சொந்தக்காரர்களின் அனுமதிப்பத்திரங்களை அத்தாட்சிப்படுத்தி, அம்பாறை அரசாங்க அதிபர் எம்.எம். ஹேரத் அபேவீர சம்பந்தப்பட்டவர்களுக்கு அனுப்பிவைத்துள்ளார் இதனையே நாங்கள் கொண்டு சென்றோம்."

*சம்பவத்தை நிகழ்த்திய இனந்தெரியா நபர்கள் புலிகள் என நீங்கள் நினைக்கிறீர்களா?*

நேரடியாக புலிகள் பங்குபெறாவிட்டாலும், ஏற்கனவே நாங்கள் புலிகளினால் அச்சுறுத்தப்பட்டதால், இது புலிகளுக்கு தெரிந்தோ அல்லது அவர்களது மேற்பார்வையின் கீழேதான் நடைபெற்றிருக்க வேண்டும். அத்தோடு திருக்கோவில் பிரதேச செயலாளர் மீதும் சந்தேகப்படுகிறோம்"

*உங்கள் முறைப்பாடுகள் பயன் அளித்ததா?*

"பொலிஸ், சமாதானக் குழு, நாங்கள் எல்லோரும் சம்பவம் நடைபெற்ற வட்டமடுவுக்குச் சென்றபோது, எங்களைத் தாக்கியவர்களில் இருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். அவர்களோடு, ஸ்தலத்திற்குச் சென்றபோது அங்கிருந்த அனைவரும் ஓடிவிட்டனர்.

அதன்பின் 2003.10.27ம் திகதி திருக்கோவில் பிரதேச செயலகத்தில் நடைபெற்ற, குறித்த சம்பவம் சம்பந்தமாக ஆராயும் கூட்டத்தில்; அரசாங்க அதிபரால் செய்யப்பட்ட அத்தாட்சிகளினை நிராகரித்த புலியினர் அனுமதிப்பத்திர மூலப்பிரதிகளை நேரடியாக தம்மிடம் கொண்டுவந்து காட்டி உறுதிசெய்ததன் பின்னர்; விவசாயம் செய்யலாம் என்று கூறினர்."

இது சம்பந்தமாக புலிகள் உடனடியாக நடவடிக்கை எடுப்பதாக கூறியிருக்கின்றனர். "சம்பந்தப்பட்டவர்களை இனங்கான முடியாதுள்ளது" அல்லது, இதற்கும் எமக்கும் எவ்வித சம்பந்தமுமில்லை" என புலிகள் பல்லவி பாடுவார்களாயின்...

தமிழர்களை ஆழமுடியாத புலிகள் இடைக்கால சபையில் எப்படி முஸ்லிம்களை நிர்வகிக்கப்போகிறது? என்ற கேள்வியே பாதிக்கப்பட்டவர்களினதும், முஸ்லிம்களினதும் மனதில் எஞ்சி நிற்கும்.

- பாதிக்கப்பட்ட விவசாயிகளில் இருவர் (அலித்தம்பி மரைக்கார் ஆதம்லெவ்வை, முஹம்மது இப்றாஹிம் அப்துல் றஷீட்) காணி அனுமதிப்பத்திரங்களோடும், அரச அதிபரால் வழங்கப்பட்ட அத்தாட்சி ஆவணங்களோடும் இருப்பதை படத்தில் காணலாம்.

**- அக்கரைப்பற்று செய்தியாளர் -**

## சாயம் வெளுத்த...

நான் அது செய்தேன்; இது செய்தேன் என வரிந்து கட்டிக் கொண்டு வருவார்கள்.

இது மட்டுமல்ல, அல் இர்பான் பாடசாலைக் காணியில் தமிழர்கள் அத்துமீறிக் குடியேறியது. அதனைத் தொடர்ந்து முஸ்லிம்கள் கொந்தளித்தது. இரு சாராருக்கும் முறுகல் நிலை முற்றி அடிதடியில் இறங்குமளவுக்கு நிலைமை விபரீதமானது என்பதன் மறுவிளைவாக அல்லது பின்விளைவாக ஆலங்கேணிப்பிரதேசத்தை அண்டியுள்ள ஈச்சந்தீவில் சுமார் 25 முஸ்லிம்களின் வீடு வாசல்கள் முற்றாக சேதமாக்கப்பட்டுள்ளன என்பது இதுவரை ஊடகங்களுக்குள் வராத செய்தி. எந்த ஊடகமும் இந்த அனர்த்தத்தை வெளிக்கொண்டு வந்ததாக தெரியவில்லை.

ஈச்சந்தீவில் வசித்த முஸ்லிம் குடும்பங்கள் தமது வீடுகளை விட்டுவிட்டு சுமார் பதினேழு வருடங்களாக கிண்ணியாவின் பல பகுதிகளில் அகதிகளாக வாழ்ந்து வந்தனர். யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின் பின்னர் இவர்கள் மீண்டும் தமது சொந்த வசிப்பிடமான ஈச்சந் தீவுக்கு திரும்பினர். எனினும் அச்சம் காரணமாக பகல்வேளைகளில் ஈச்சந்தீவு சென்று தமது வீடு வாசல் தோட்டங்களை பராமரித்துவிட்டு இரவு வேளைகளில் கிண்ணியா திரும்பிவிடுவர். எனினும் சில குடும்பங்கள் ஈச்சந்தீவில் நிரந்தரமாகவே தமது இருப்பை தொடர்ந்திருந்தனர். இந்த வேளையில்தான் பைசல் நகர் அல் இர்பான் வித்தியாலயக் காணியில் தமிழர்கள் அத்துமீறிக் குடியேறினர். இதனையடுத்து நடந்த நிகழ்வுகளின் எதிரொலியாக ஈச்சந்தீவில் வசித்து வந்த சுமார் இருபத்தைந்து முஸ்லிம் குடும்பங்களின் வீடு வாசல்கள் முற்றாக சேதமாக்கப்பட்டு அவர்களது வளவினுள் நின்று கொண்டிருந்த மரங்கள் தாறுமாறாக வெட்டப்பட்டு முற்றிலும் சேதமிழைக்கப்பட்டிருந்தது. இதனால் மீண்டும் அக்குடும்பங்கள் கிண்ணியாவுக்கே பழையபடி அகதிகளாகத் திரும்ப வேண்டிய கட்டாயத்துக்கு ஆளாக்கப்பட்டனர். மொத்தமாக பதினாறு வருடங்களாக அகதிகளாக காலம் தள்ளும் இக்குடும்பங்களுக்கு அப்போதும் சரி இப்போதும் சரி எவ்விதமான நிவாரணமோ, உலர் உணவுகளோ வழங்கப்படவில்லை என்பதனையும் சொல்லியேயாக வேண்டும்.

மாண்புமிகு கிண்ணியா பா. உறுப்பினர்கள் இது தொடர்பிலும் கனத்த மௌனத்தையே கடைப்பிடித்து வருவது விசனத்தை விளைவிக்கின்றது. நாம் மேலே சொன்ன ஈச்சந்தீவில் நடந்த சம்பவத்தை இலங்கை யுத்த நிறுத்த கண்காணிப்புக்குழு (SLMM), செஞ்சிலுவைச்சங்கம் (ICRC) என்பன ஈச்சந்தீவுக்கு வந்து பார்வையிட்டன என்பது குறிப்பிடத்தக்கது. ஆனால் கிண்ணியாவின் பிதாமகன்கள் இன்னும் இறுகிய மௌனத்தையே இது தொடர்பில் கடைப்பிடிக்கின்றனர். பாதிக்கப்பட்ட இடத்தை பார்ப்பது, அது தொடர்பாக தமது கடமையை உணர்வது, பாதிக்கப்பட்ட முஸ்லிம்களுக்கு உடனடி உதவிகளுக்கு ஏற்பாடு செய்வது என்பனவற்றை மறந்து தம்பாட்டில் சொகுசு வாகனத்தில் சுற்றிக் கொண்டிருக்கின்றனர்.

வாக்குப்போட்ட மக்களுக்கு போக்குக்காட்டித் திரியும் இவர்களின் மௌனமும் கோழைத்தனமும் இயலாமையும் ஆக்கிரமிக்கப்படும் இந்த முஸ்லிம் பிரதேசத்தை புலிகளுக்கு தாரைவார்த்துக் கொடுப்பதனை அங்கீகரிப்பதாகவே உள்ளது. அச்சத்திலும் பீதியிலும் உறைந்து துயரங்களோடு ஜீவிதம் நடாத்தும் முஸ்லிம்களுக்கு பா. உறுப்பினர்கள் ஒரு ஆறுதலாக இருப்பார்கள் என்று எதிர்பார்த்தால் அவர்களோ தம்வாசியை பார்த்துக் கொண்டு ஒதுங்குகின்றனர்.

புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்குப் பின்னர் கிண்ணியாவில் புலிகளால் 100க்கு மேற்பட்ட மாட்டுவண்டிகள் கடத்தப்பட்டு புலிகளால் கப்பம் பெறப்பட்டுள்ளது. பல லட்சம் பெறுமதியான கால் நடைகள் கடத்திச் செல்லப்பட்டுள்ளன. உழவு இயந்திரங்கள் கடத்தப்பட்டு கப்பம் பெறப்பட்டுள்ளன.

இத்தோடு குரங்குபாஞ்சானை அண்டியுள்ள கிராமங்களில் புலிகளால் தொடர்ந்தும் கொடுமைகள் அரங்கேறிக் கொண்டிருக்கின்றன. கடந்த 2003.09.18,19 ஆம் திகதிகளில் சூரக்கல் பகுதியைச் சேர்ந்த கே.எம். ரகீப், நடுவூற்றைச் சேர்ந்த ஏ.ஆர். யாஸீன், மாதிரிக் கிராமத்தைச் சேர்ந்த அல்லாபிச்சை, கச்சக் கொடித்தீவைச் சேர்ந்த ஏ.எஸ். நஸார் ஆகியோர் புலிகளால் கடத்தப்பட்டு சுங்கான் குழி தமிழ் வித்தியாலயத்தில் ஒரு இரவு தடுத்துவைக்கப்பட்டு 60 ஆயிரம் ரூபா கப்பம் பெறப்பட்ட பின்னர் விடுதலை செய்யப்பட்டனர். இத்தோடு 23.09.2003ம் திகதி மாதிரிக் கிராமத்தை சேர்ந்த மஜீத்கான் எனும் ஏழை முஸ்லிமின் கடை புலிகளால் கொள்ளையிடப்பட்டது.

இவ்வாறான சம்பவங்கள் இன்னுமின்னும் அவ்வப்போது முடிவுறாத் தொடர்கதையாக நீண்டு செல்கின்றன. எதிர்காலத்திலும் இவைபோன்ற அக்கிரமங்கள் நிகழாதென்பதற்கு எவ்விதமான உத்தரவாதமுமில்லை.

ஆனால் ரோம் எரியட்டும் நாம் பிடில் வாசிப்போம் என்ற வீம்பில் கிண்ணியா மண்ணின் பாராளுமன்ற உறுப்பினர்கள் இருக்கின்றார்கள். தம் மக்களின் துயரங்களைவிட இவர்களது சொந்த விடயங்கள் பெரிதாகிவிட்டன. ஆகக்குறைந்தது நடக்கின்ற கொடுமைகளுக்கெதிராய் நாலு வார்த்தை பேசலாம். அதுவுமில்லை. பின்னெப்படி முஸ்லிம் போராளிகள் என தம்மீது போர்வை சாத்திக் கொள்ளும் இவர்கள் காவல் தொலைந்த இந்த மக்களை காத்து நிற்கப்போகின்றார்கள்?

திருமலை மாவட்ட அபிவிருத்தி மற்றும் ஒருங்கிணைப்புக்குழுவின் இணைத்தலைவரான திடீர் தௌபீக் கிண்ணியாப்பிரதேச சபை எல்லைக்குள் இருக்கும் வானாறு என்ற கிராமத்தின் பெயரை பந்துலுபுர என மாற்றியமைப்பதற்கு மாவட்ட அபிவிருத்திக்கூட்டத்தில் கொண்டுவரப்பட்ட பிரேரணையை ஆமோதித்து அதற்கு ஒப்பமும் இட்டுக் கொடுத்தது உண்மையிலும் உண்மை. இது அவர் கிண்ணியா மக்களுக்கு ஆற்றிய மிகப்பெரிய சேவை.

அடுத்து சின்ன தௌபீக் என அழைக்கப்படும் எம்.எஸ். தௌபீக் கிரவல் றோடு போடுவது போன்ற சின்னச் சின்ன விசயங்களுக்கு தன்னை நத்தைபோல சுருக்கிக் கொண்டார். அவருக்கு கிண்ணியாப்பாலம் போடுவது தொடர்பில் தனக்கு மட்டுமே முழு உரிமை கோர முடியுமென நாளுக்குநாள் வாதாடியே நேரம் போகின்றது. இவருக்கென்று இதுவரை திருமலை மாவட்ட முஸ்லிம்கள் தொடர்பில் குறிப்பாக கிண்ணியா முஸ்லிம்கள் தொடர்பில் சொந்தமாக கருத்துச் சொல்லும் தைரியம் வந்ததேயில்லை என்பது யார் செய்த பாவம். கிண்ணியாவில் இவ்வளவு பிரச்சினைகள் நடக்கின்றதே ஏன் அந்த பிரச்சினைகளில் தலையிட்டு தைரியமாக முடிவுகளை எடுக்கும் உபாயம் அவருக்குத் தெரியவில்லையோ தெரியாது?

ஐக்கிய தேசியக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் மஹ்றூபின் நிலைப்பாடு பயணம் செய்ய முடியாத ஒரு பாதையைப் போலவே இருக்கின்றது. அடிக்கடி ஆவேசப்படுகின்றார். கோபப்படுகின்றார். முடிவில் அனைத்தும் பூச்சியம்தான். இவரைப் பொறுத்தளவில் தன் மாவட்ட முஸ்லிம்களின் நலன் முக்கியமல்ல.

மாற்றுக் கருத்துக்களுக்கு மதிப்பளிக்கத் தெரியாத திருவாளர் மஹ்றூபின் எண்ணம் தான் முஸ்லிம் காங்கிரஸ் எம்பியல்ல. ஐக்கிய தேசியக்கட்சி எம்.பி. நான். எனவே எனக்கெந்த பொறுப்புமில்லை என்பதாகும். இவர் பேரினவாதக் கட்சி ஒன்றின் செல்லப்பிள்ளையாக இருக்கலாம். ஆனால், வோட்டுப்போட்டு பாராளுமன்றத்திற்கு அவரை அனுப்பிவைத்தது திருமலை மாவட்ட அதிலும் குறிப்பாக கிண்ணியா முஸ்லிம்கள் என்பதை அவர் மறக்கலாகாது. இவர் தேர்தலில் வெற்றி பெற்ற காலந்தொட்டு கிண்ணியா முஸ்லிம்களுக்கு என்ன செய்திருக்கிறார் என்று பார்த்தால் அந்த மக்களின் பகை தவிர, கோபத்தினைத்தவிர வேறெதனை சம்பாதித்திருக்கிறார்.

கிண்ணாவுக்கான பாலம் கட்டுவது தொடர்பில் மஹ்றூபும் சின்ன தௌபீக்கும் சின்னப்பிள்ளைகளைப்போல தொடர்ந்து சண்டைபோட்டுக் கொண்டிருக்கின்றனர். ஆளாளுக்கு மாறி மாறி பத்திரிகைகளில் ஸ்டேட்மென்ட் வேறு. பிரபலத்தை சம்பாதித்துக் கொள்வதில் இவர்களுக்கு இருக்கும் அக்கறை முஸ்லிம்களின் கண்ணீரைத் துடைப்பதில் கிடையாது. பாராளுமன்ற உறுப்பினர் மஹ்றூப் சின்னத் தௌபீக் ஏதாவது அபிவிருத்தித் திட்டம் கொண்டுவந்தால் அதனை முடக்கிவிடுவதிலும் சின்ன தௌபீக் இது தொடர்பில் வீம்பு பிடிப்பதிலுமே காலம் செல்கின்றது. உதாரணமாக கிண்ணியாவில் அமைக்கப்படவிருக்கும் பஸ் டிப்போ குறித்த இடத்தில் அமைய வேண்டுமென சின்ன தௌபீக் பிரேரிக்க மஹ்றூபோ அதற்கு மாற்றமான இடத்தை பிரேரிக்க இன்னமிது இழுபறியிலேயே இருக்கின்றது. கேவலம் தமக்குள்ள பொறுப்புக்களை மறந்து நீயா, நானா என்று போட்டியிடும் சிறுவர்களா எங்களை வழிநடத்தப்போகிறார்கள். இவர்களா எங்களை, எங்கள் உரிமைகளை பாதுகாக்கப்போகிறார்கள்.

எங்களைப்பற்றி சிந்திக்கக்கூடிய, எம் சுக துக்கங்களில் பங்கு போடக்கூடிய சிந்தனை தெளிந்த, ஒரு கல்விமான் அரசியல் தேசத்திற்கு தேவை. அந்த தகுதி வாய்ந்த நபரை எங்கள் பிரதிநிதியாக நாம் தேடிப்பெறாதவரை நாம் எப்போதுமே மேய்ப்பனற்ற மந்தைகள்தான்.

**இப்னு காசீம்**
**கிண்ணியா 05.**

## மஃரூப் அமைச்சரின் நிலைப்பாட்டில் மாற்றம்!

கடந்த பொதுத் தேர்தலில் கொழும்பு மாவட்டத்தில் முஸ்லிம் காங்கிரஸை போட்டியிடாமல் செய்வதற்கு தான் 2 கோடி ரூபா பணத்தை முஸ்லிம் காங்கிரஸ் தலைமைக்கு வழங்கியதாக மிகப்பகிரங்கமாக அமைச்சர் மஹ்ரூப் சொல்லிவருவது கொழும்பு அரசியல் வட்டாரத்தில் அநேகர் அறியப்பட்ட கதை.

ஆனால் இனிவரும் தேர்தலில் முஸ்லிம் காங்கிரசிற்கு தான் பணம் வழங்கப்போவதில்லை என்றும் அப்பணத்தை மக்களுக்குக் கொடுத்து வாக்குகளை வாங்கி விடுவதுதான் நன்மை என்று இப்போது அமைச்சர் மஹ்ரூப் சொல்லி வருகிறாராம். அதிஷ்டசாலிகள் கொழும்பு வாக்காளர்கள். 2 கோடி ரூபாய் அவர்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

## எது காவாலித்தனம்!

கிண்ணியா மக்கள் தாக்கப்படும்போதும், நசுக்கப்படும்போதும் மக்களைப் பாதுகாக்காமல் கொழும்பில் ஒழிந்து நிற்கும் முஸ்லிம் எம்.பிக்கள் அவர்களின் கையாலாகாத்தனம்மீது மக்களின் ஆத்திரம் சீறிப்பாயும் போது அதன் நேரடி விளைவு எம்.பிக்கள் இல்லாத அவர்களின் வீடுகளும், காரியாலயங்களுமாக உள்ளது.

கடந்த ஜூன் மாதம் வாழைச்சேனை சம்பவம் நடந்தபோதும், முகிதீன் அப்துல்காதர் எம்.பியின் வீடும் தாக்கப்பட்டது. இப்போது அந்த வரிசையில் தௌபீக், சின்னத் தௌபீக், மஃரூப் எம்.பிமாரின் வீடுகளும், காரியாலயங்களும் நமது இளைஞர்களின் கோபாவேசத்திற்கு உட்பட்டுள்ளது.

இந்த யதார்த்தத்தைப் புரிந்துகொள்ளாமல் தனது வீட்டை காடையர்களும், காவாலிகளும் தாக்கியதாக ஊடகங்களுக்கு அறிக்கைவிடும் மஃரூப் எம்.பி. புலிகளின் காடைத்தனத்தையும், காவாலித்தனத்தையும் சுதந்திரத்திற்கான போரெனச்சொல்லி புலிகளின் பாதங்களுக்கு பூ வைப்பது எப்படித் தகும்.

மஃரூப் எம்.பிக்கு தலைபழுதாகிவிட்டது என்பதை இது காட்டுகிறது என்கிறார்கள் கிண்ணியா இளைஞர்கள். ஊருக்கு வந்தால் பெரும் வரவேற்புக்கொடுக்கக் காத்துக்கொண்டிருக்கிறார்களாம்.

## இதுவும் சுவாரஸ்யமானதுதான்

முஸ்லிம் குரல் பத்திரிகையில் திடீர் தௌபீக் எம்.பியின் தொலைபேசி இலக்கத்தை மக்கள் தேடுகிறார்கள் என்ற ஒரு செய்தி வந்ததை யாவரும் அறிந்திருப்பீர்கள். இச்செய்தி வந்தவுடன், மூதூர் உள்ளூர் அரசியல்வாதி யொருவர் ஆசிரியர் பீடத்துடன் தொடர்பு கொண்டு அப்படி ஒரு நிலைமையில்லை, அது தவறான செய்தி என்றாராம். அப்படியானால் திடீர் தௌபீக் எம்.பியின் தொலைபேசி எண்ணைத் தாருங்கள் நாங்கள் தொடர்பு கொண்டு பார்க்கிறோம் என்றபோது இப்போது அது முடியாது. அவர் இடைக்கால சபை தொடர்பாக அயர்லாந்து விஜயத்திற்கான கூட்டங்களில் இருக்கிறார் மூன்று கிழமைக்குப் பின்தான் அவருடன் பேச முடியும் என்றாராம் அந்த உள்ளூர் அரசியல்வாதி! மக்கள் இப்பொழுதும் தொலைபேசி எண்ணைத் தேடுகிறார்களாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதிக்கப்பட்ட ஒரு குழுவினரைத் திருப்திப்படுத்துதல் அத்தகைய பிறிதொரு குழுவை உருவாக்கக் கூடாது!

**- சம்பிக்க லியனாராச்சி -**

இங்குள்ள முஸ்லிம் மக்கள் தமிழினத்தின் ஒரு பகுதியினராவர் எனச் சுமார் 115 ஆண்டுகளுக்கு முன்னர் சேர். பொன்னம்பலம் ராமநாதன் பரப்ப முயன்ற கோட்பாட்டினை மீண்டும் உயிர்ப்பித்துப் பரப்புவதற்குப் புலிகள் முயல்கின்றனர். புலிகளின் இம்முயற்சிக்கான காரணம் வடக்கில் போன்று கிழக்கிலும் தமது அரசியல் தலைமையினை உறுதிப்படுத்திக் கொள்வதற்கான மோசமான முயற்சியாகும்.

புலிகளின் இடைக்கால ஆலோசனைகள் அமைக்கப்பட்டுள்ளதன் அடிப்படையினைப் பற்றிக் கருத்து வெளியிட்ட புலிகளின் கிழக்குத் தளபதி கருணா அம்மன், வடக்கு கிழக்கில் வாழும் முஸ்லிம்களைத் தமிழர்களின் ஒரு பிரிவாகப் புலிகள் கருதுவதாக குறிப்பிட்டார்.

"தமிழ்த் தாயகத்தில்" தமிழர்களும் முஸ்லிம்களும் உடனொத்து வாழ வேண்டியதன் அவசியத்தைப் புலிகள் வலியுறுத்துவதாகவும் குறிப்பிட்டார். தனியான சமூக இனமாக ஏற்கனவே தம்மைத் தாபித்துக் கொண்டு இருக்கக் கூடிய முஸ்லிம்களைப்பற்றிய இத்தகைய பழமையான கருத்துடன் நோக்கும் போது புலிகளுக்கும் முஸ்லிம் பிரதி நிதிகளுக்கும் இடையில் முஸ்லிம்கள் தொடர்பான விடயமாக இடைக்கால நிருவாக சபை அமைப்புக்கு முன்னரான பேச்சு வார்த்தையின் போது வாக்குவாதம் இடம் பெறலாம்.

டோக்கியோ பிரகடனத்தின் படி: அடுத்த சுற்றுப் பேச்சுவார்த்தைகள் தொடக்கம் தனியான முஸ்லிம் பிரதிநிதித்துவத்துக்காக முஸ்லிம்கள் அழுத்தம் கொடுக்கும் இச்சந்தர்ப்பத்தில் வெளிவந்துள்ள கருணாவின் கருத்துக்கள். இரு சமூகத்தின் பிரதிநிதிகள் இடையில் மேலும் விரிசலை ஏற்படுத்த இடமுண்டு.

கடந்த 2002ம் ஆண்டு செப்டம்பரிலும் இந்த ஆண்டு ஜனவரியிலும் முஸ்லிம்களுக்கான தனியான பிரதிநிதித்துவம் பற்றிப் புலிகள் இணக்கம் தெரிவித்தனர்.

வடக்கு கிழக்குப் பிணக்கினைப் பேச்சுவார்த்தை மூலம் தீர்க்கையில் முஸ்லிம்களின் பலத்தைப் பலவீனப்படுத்தும் அதன் நோக்கத்தை அடைவதற்காக முஸ்லிம்கள்: தமிழ் - முஸ்லிம்களாக குறிப்பிடுவதற்குப் புலிகள் முயல்வது இது முதற் தடவையன்று; அத்துடன் இறுதித் தடவையாகவும் இருக்க முடியாது.

இந்த முயற்சிகள் தவிர, முஸ்லிம்களின் பிரச்சினைகளைச் செவிமடுப்பதற்குக் கூடத் தமிழ் தலைவர்களோ, தமிழ் போராட்டத்தை தொடக்கி வைத்தவர்களோ முயலவில்லை.

தமிழ்த் தாயகக் கோட்பாட்டுக் கோரிக்கையிலோ, தனியான சுயாட்சிக்கான வித்துக்கள் விதைக்கப்பட்ட தமிழரசுக்கட்சியின் 1957ம் ஆண்டின் மாநாட்டிலோ அல்லது தமிழர் கூட்டு விடுதலை முன்னணியின் 1977ம் ஆண்டு பொதுத் தேர்தல் விஞ்ஞாபனத்திலோ முஸ்லிம்களின் அபிலாசைகள் ஒரு பாகமாக இடம்பெற்றிருக்கவில்லை. தமிழ்த்தாயகத்துக்கு என அடையாளம் காணப்பட்டுள்ள நாட்டின் 30 வீதமான பிரதேசத்தில் கரையோரப் பகுதியின் 33 வீதமான பிரதேசத்தில் ஏழு இலட்சம் முஸ்லிம்கள் வாழ்கிறார்கள் என்பது புறக்கணிக்கப்பட முடியாத ஒரு விடயமாகும்.

புலிகளது சிந்தனையில் மாற்றம் 90ம் ஆண்டுகளின் தொடக்கத்தில் ஏற்பட்டது. அதாவது தமிழ் ஈழத்தின் பெறுபேறுகளை பலாபலன்களை முன்னர் தமிழர்களுக்கு மட்டும் எனக்குறிக்கப்பட்ட படி தமிழ்பேசும் முஸ்லிம் சகோதரர்களுக்கும் கிடைக்கும் வகையில் விஸ்தரிக்கப் புலிகள் தயாரென முஸ்லிம்களுக்குப் புலிகளின் உயர் மட்டத்தினர் தெரிவிக்க முயற்சித்த போதே இச்சிந்தனை மாற்றம் அவதானிக்கப்பட்டது.

புலிகள் இத்தகைய ஒரு முயற்சியில் ஈடுபடக்காரணம் முஸ்லிம் காங்கிரஸ் எனும் புது அரசியல் கட்சியின் கீழ் கிழக்கு முஸ்லிம்கள் இந்நாட்டின் அரசியல் நீரோட்டத்தில் பங்கெடுத்தமையே

எம்.எச்.எம். அஷ்ரப் அவர்களின் தலைமையில் படிப்படியாக வளர்ச்சி கண்ட ஸ்ரீ.ல.மு.கா 1989ம் ஆண்டு பொதுத்தேர்தலில் பாராளுமன்றத்துக்கு உறுப்பினர்களை அனுப்பியது.

முஸ்லிம்களின் அரசியல் உரிமைகளுக்கான போராட்டம் தமது தனிநாட்டுக் கோரிக்கையினைப் பாதிக்கப் போவதாகப் புலிகள் கருதினர்.

இப்போது 15 ஆண்டு காலத்துக்குப் பின்னர் ஸ்ரீ.ல.மு.கா. கட்சி முஸ்லிம்களின் கோரிக்கைகளுக்காக முன்னின்று சமாதானப் பேச்சுவார்த்தைகளில் சமூகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தல் என்பவற்றை அவதானிக்கையில் புலிகள் அன்று அஞ்சியமையின் பின்னணி தெளிவாகிறது. ஆனால் முஸ்லிம் காங்கிரஸ் பல பிரிவுகளாகப் பிரிந்துள்ளமை அவதானிக்கப்படுதல் வேண்டும்.

சமாதானப் பேச்சு வார்த்தைகளின் அடுத்த கட்டம் தொடக்கம் இப்பிரிவுகள் முஸ்லிம்களின் குரலுக்கு உறுதியளிப்பதற்காக ஒன்றுபடும் அடையாளங்கள் காணப்படுகின்றன.

எனினும் துரதிஷ்டவசமாக இத்தற்காலிக இணைவுகள் உறுதியற்றவை. காரணம் அவை பிரதானமாக அரசியல் அரங்கில் நிலைத்து நிற்கும் நல நோக்குடனேயே உருவாக்கப்பட்டுள்ளன. குறைந்து கொண்டிருந்த படைப்பலத்தைப் பலப்படுத்துவதற்குப் புலிகள் முஸ்லிம்களைக் கவர முற்பட்டபோது ஸ்ரீ.ல.மு.கா. கட்சியின் தலைவர் சிரமத்துடன் மேற்கொண்ட முயற்சியின் விளைவாகவே: தடுக்கப்பட்டனர்.

முஸ்லிம்கள் மீதான புலிகளின் அடிப்படைப் பகைமையுணர்வு மாறவில்லை என்பதுவும் ஐக்கிய ராச்சியத்தின் டெய்லி ரெலிகிராப் இந்நாட்டின் டெய்லி நியூஸ் பத்திரிகைகளுக்குப் புலிகளின் கிழக்கு மாகாண முன்னை நாள் அரசியற் பிரிவுத் தலைவர் கரிகாலன் விடுத்த சர்ச்சைக்குரிய பேட்டியில் இருந்து புலிகளின் சகோதரத்துவம் போலியானது என்பதும் தெளிவானது.

முஸ்லிம்களுக்கு வடக்கு, கிழக்கில் எவ்வித உரிமையும் இல்லையென்று கரிகாலன் உறுதியாக கூறியிருந்தார். முஸ்லிம்கள் நியாயமற்ற நிலக் கொடுக்கல் வாங்கல்கள் மூலம் காணிகளைப் பெறுகின்றனர் எனவும் அவர் கூறினார்.

**சாரம்**
**ஆங்கில ஊடகங்கள்**

கரிகாலன் பலிக்கடாவாக்கிய புலிகளின் தலைவர் மீண்டும் முஸ்லிம்கள் விவகாரத்தில் மிருதுவான தன்மையினைக் காட்டி விட்டு. இடைக்கால நிர்வாகத்துக்கான ஆலோசனைகளைத் தெரிவிக்கும் போது, சுயரூபத்தை காட்டி விட்டனர்.

முஸ்லிம்களின் தனித்தரப்பு பிரதிநிதித்துவத்துக்கு இடமளிக்கப்படும் என டோக்கியோ மகாநாட்டில் அளிக்கப்பட்ட உறுதிமொழியினை அரசு காப்பாற்றினால் ஒழிய அவர்களில் பலர் தமிழைத் தாய் மொழியாகக் கொண்டிருக்கின்ற போதிலும். இலங்கை முஸ்லிம்கள் தனியான ஒருமைப்பாட்டுடைய ஒரு சமூகம் என்பதைச் சர்வதேச சமூகத்துக்கு தமிழ்த் தரப்பு எடுத்துக்காட்டுகிறது.

முஸ்லிம்களுக்கென இங்கு தனியான ஓர் மொழி கிடையாது. எனவே முஸ்லிம்கள் தனியான ஒரு சமூகமல்ல, பதிலாகத் தமிழர்களின் ஒரு பிரிவே எனப் புலிகள் கோரிக்கை முன் வைக்க இதனை பெரிதும் ஒரு வாதமாக முன் வைத்தனர்.

கருணாவின் வாதமும் இதனை ஆதாரமாகக் கொண்டிருக்கிறது. எவ்வாறெனினும் முஸ்லிம்கள் இந்நாட்டுக்கு வரத் தொடங்கியதன் இரண்டும் பெரும் கட்டத்தில் இருந்த கலை இலக்கிய நோக்கங்களுக்காகத் தமிழை ஏற்றனர் என்பது குறித்து வரலாற்று ரீதியான ஆதாரம் உண்டு.

தென்னிந்தியாவில் இருந்து இரண்டாம் கட்டமாக வந்த முஸ்லிம்கள் ஏற்கனவே தென்னிந்தியத் துறைமுக நகரங்களில் குடியிருந்த அராபிய வர்த்தகர்களின் பரம்பரையினராவர். அவர்கள் அறபுத் தமிழை அறிமுகப்படுத்தியிருந்தனர். முஸ்லிம் சிறார்கள் குர்ஆனை ஓதுவதும், படிப்பதும் கட்டாயமான படியால் அவர்களுக்கு இந்த மொழியைக் கற்க வேண்டியேற்பட்டது.

நூற்றாண்டு காலமாகச் சிங்களப்பிரதேசங்களில் வாழ்ந்த முஸ்லிம் குடும்பங்கள் தமது தாய் மொழியாகத் தமிழை வைத்துக் கொண்டிருப்பதன் காரணம் இதுவே அன்றேல் அவர்கள் அறபு மொழியினை தொடர்ந்து பாவித்திருப்பார்கள். இந்து சமுத்திரத்தின் கரையோர வர்த்தகத்தில் தமிழ் மொழி பரவலாக்கப்பட்டமையும், வர்த்தகத்தில் ஈடுபட்ட முஸ்லிம்களுக்குத் தமிழ் மொழியை கற்க ஆர்வம் ஊட்டியது. முஸ்லிம்கள் மிகப் பிந்திய காலப்பகுதியில் கிழக்கிற்கு தமது காணிகளைப் பிடித்துக்கொண்டதாகப் புலிகளும் தமிழர்களும் பிரதானமாகப் குற்றஞ்சாட்டுகின்றனர்.

முஸ்லிம்கள் சாதுரியமான வர்த்தக முயற்சிகளின் வாயிலாகக் காணிகளை வாங்கித் தமது பிரதேசங்களை விஸ்தரித்துக் கொண்ட சந்தர்ப்பங்கள் இருந்திருக்கக் கூடும். எனினும் ஏனையவர்களுக்கு முன்னரே முஸ்லிம்கள் கிழக்குப் பிரதேசத்தில் குடியேறி இருந்தனர் என்பது உண்மையாகும்.

இந்நாட்டில் கி.பி 7ம் நூற்றாண்டு அளவில் முஸ்லிம் குடியேற்றங்கள் இருந்தன என்பதற்கான எழுத்து மூல உறுதிகள் உள்ளன. 10ம் நூற்றாண்டில் திருகோணமலையிலும் அனுராதபுரத்திலும் முஸ்லிம் குடியேற்றங்கள் இருந்தன. என்பதைக் குறிக்கும் புதைகுழிகளும் கல்வெட்டுக்களும் உள்ளன.

முஸ்லிம்கள் சிங்கள அரசர்களுக்கு வெளிநாட்டு வர்த்தகத்தை வசதியாக்கி கொடுத்தமை போன்றன உட்படப் பல சேவைகளைச் செய்து அதற்கு பிரதியுபகாரமாக நாட்டின் பல்வேறு பாகங்களில் காணிகளைப் பெற்றுள்ளமை காணப்படுகிறது.

தீகவாவிப் பகுதியில் நெற்காணிச் செய்கையினை மீளவுயிர்ப்பிப்பதற்காக இரண்டாம் ராஜசிங்க மன்னன் ஏராளமான முஸ்லிம்களைக் குடியேற்றியதாகச் சான்றுகள் உள்ளன.

இத்தகைய சான்றுகள் இருக்கையில், 1880ம் ஆண்டளவில் முஸ்லிம்கள் தமது அரசியல் உரிமைகளுக்காகக் குரல் கொடுக்கும் போது Royal Asiatic Societyக்கு சமர்ப்பித்த ஓர் குறிப்பில் இங்குள்ள முஸ்லிம்கள் தமிழர்கள் என்றும் அவர்கள் பின்னர் இஸ்லாத்தைத் தழுவியவர்கள் என்றும் பொ. இராமநாதன் குறிப்பிட்டுள்ளார்.

அதிஷ்டவசமாக இக்கோட்பாடு அங்கீகரிக்கப்படவில்லை பதிலாக அடுத்த ஆண்டு சட்டசபை மீளவமைக்கப்பட்ட போது கண்டியர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் முன்னைய அமைப்பில் இருந்ததைவிட அதிகரித்த அங்கீகாரம் வழங்கப்பட்டது.

இந்நாட்டின் சுதந்திரத்துக்காகப் பொன்னம்பலம் இராமநாதன் அளித்த பங்கினை எல்லா இனத்தவர்களும் நினைவு கூர்ந்த போதிலும் 1888ம் ஆண்டு நடந்த விடயம் தமது உரிமைகளை விட்டுக் கொடுக்க மேற்கொள்ளப்பட்ட ஒரு சதி என்பதையும் முஸ்லிம்கள் மறந்து விடவில்லை.

இனத்துவேஷம், இனவாதம் என்பது தனது சுய வரலாற்றை உருவாக்கும் என்றும் ஏனெனில் கற்பனையின்றி அது வளராது என்றும் கூறப்படுகிறது.

எல்.ரீ.ரீ. ஐ போன்ற ஒரு பாசிச அமைப்பு தான் பிரதிநிதித்துவப்படுத்துவதாகக் கூறும் மக்கள் சமூகத்தை அதிகாரம் செலுத்துவதன் மூலம் தனது இருப்பை உறுதிப்படுத்திக் கொள்கின்றது. இத்தகைய ஒரு அமைப்புக்குத்தான் முழு நிலப் பிரதேசத்தினதும் உரிமையாளர்கள் என்பதைத் தெரிவிப்பதற்காகப் பிற சமூகத்தினரின் வரலாற்றுண்மைகளைத் திரிபுபடுத்திக் காட்டுவது அவசியமாக உள்ளது. ஆகவே புலிகள் அமைப்பு, தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்கான போராட்டம் எனும் முயற்சியில் ராமநாதனின் கோட்பாட்டைப் புதுப்படுத்தி வடக்கு, கிழக்கின் வரலாற்றை மீளலெழுதப் பகீரதப் பிரயத்தனம் செய்கிறது.



தெற்கின் தலைவர்களது குறைபாடுகள் காரணமாகக் கடந்த பல்லாண்டுகளாகப் பிரச்சினைகளை முன்னோக்கிய தமிழ்க் குடிமக்களுக்கு ஏற்பட்ட இழப்பை ஈடுசெய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ளும் அதே சமயம் அதன் மூலமாகப் பாதிக்கப்பட்ட இன்னொரு குழுவினர் தோன்றுவதற்கு இடமளிக்காது இருப்பது ஒவ்வொருவரினதும் கடமையாகும்.

உண்மைகளைச் சரியான முறையில் தொகுத்தமைக்கு உதவுவது விஷேடமாகச் சர்வதேச சமூகத்தின் கடமையாகும். அத்தகைய நடவடிக்கையின் மூலம் மட்டுமே முஸ்லிம்களுக்கான உரிமைகள் உறுதிப்படுத்தப்படலாம். அவ்வாறின்றேல் இப்போது நடைபெறக்கூடிய சமாதான முன்னெடுப்பு வீழ்ச்சியடைந்து பிறிதொரு இரத்த களரிக்கு வழிவகுக்கும்

**தமிழில்: ஏ.எம். முஹம்மத் மதனி - ஓகொடபொள**

## எனது இறுதித் தீர்மானம்

மாளிகாவத்தையின் போதிமர வேர்களுக்கு
நீ இரத்தத்தில் பசளை தெளித்து
பிரயாசைப்பட்டாய்
ஒவ்வொரு கந்துகளிலும்
எங்கள் ஜனாஸாக்கள் காய்த்துத்
தொங்குகின்றன

அன்பை மாத்திரம் வேதம் எழுதிய
போதி மாதவனே
கண்ணாடி போத்தல்களையும் கம்பு
தடிகளையும்
அல்லவா
கைகளிலே
தம்ம பதயவாகச் சுமந்து வீதிக்கு
வந்திருக்கிறார்கள்
உன் வீரப் புதல்வர்கள்

பௌத்த நறுமணத்தை நுகர்கின்ற துப்பரவான
மூக்காலே
படுகொலைகளின் குப்பை நாற்றத்தை
சுவாசிக்கப்பண்ணியிருக்கும்
பெருங்கொடுமையை எப்படிப் பாடுவது நான்

நீ தோற்றுத்தான் போனாய் கௌதம புத்தனே
தர்மத்தின் வாசற் கதவுகளை
திறந்தே வைப்பதுதான் உன் போதனை
சாரனை மடித்துக் கட்டிக்கொண்டு
சாராய மயக்கத்தில் வந்த உன் பக்தர்கள்
அதர்மத்தின் கதவு ஜன்னல்கள்
அனைத்தையுமல்லவா
திறந்து விட்டுச் சென்றுள்ளார்கள்

அரச மரத்தின் கிளைகளிலே
பெற்றோல் குண்டுகளும் கிரனைட்டுகளும்
காய்த்திருக்கையில்
நிழல் தேடி அமரத்தான் முடியுமா இன்னும்
நான்

ஒரு மத்ரஸா நிர்மாணிக்கும்
சொந்த மகனின் உரிமை மீது
சண்டித்தனத்தை கொளுத்தி வைக்கும்
சிங்கள தேசத்தின் சுதந்திரத்தை
இந்தத் தேதியில் நான்
அறுத்துத்தான் பார்க்க வேண்டும்
போலிருக்கிறது

மாவனல்லையில் உற்பத்தியான என்
கண்ணீரை
மாளிகாவத்தைக்குத் திசைதிருப்பியிருக்கும்
உன் பௌத்த வெறி
நகரத்தான் காத்திருக்கிறது
இன்னுமொரு என் தென்னிலங்கை ஊருக்கு

எதைக் காப்பாற்றுமாறும் கோரி நான்
எம்பியிடமோ மந்திரியிடமோ
பிச்சைக்குக் கெஞ்சி நிற்கப் போவதில்லை
இனிமேல்

மிக இலகுவில் தோற்றுப் போகாத
தேவையான அளவு பொறுமை இருக்கிறது
என்னிடம்
கைக் குண்டைக் குறி பிசகாமல் எறியவும்
கைவாள் விசுக்கி உரிமை காக்கும்
யிற்சியும் உள்ளது தேவையான அளவு

-காத்தான்குடி அனு-

## கதுறுவெலயில் கொள்ளைச் சம்பவம் உடனடித் தேடுதலில் நால்வர் கைது..!

2003-10-08ம் திகதி இரவில் திறந்திருந்த சாப்பாட்டுக்கடைக்குள் நுழைந்த 6 பேர் கொண்ட சிங்கள குழுவொன்று பணமேது மேயில்லாமல் பொருட்களை எடுக்க முனைந்தபோது ஏற்பட்ட கைகலப்பில் கடைக்குரிய பொருட்கள் சேதமானதுடன் மட்டுமன்றி காசாளர் மற்றும் ஏனையோர் காயமடைந்தனர். இத்தகவல் கடை உரிமையாளர் ஊடாக பொலன்னறுவை பொலிஸாருக்கு கிட்டியதும், அவர்கள் உடனே மேற்கொண்ட தேடுதலில் நால்வர் கைதாகியுள்ளனர்.

*(பொலன்நறுவைச் செய்தியாளர், திவுளான நபீல்)*

## ஓட்டமாவடி புடவைக்கடையில் ஆயுத பாணிகளால் உடைகள் பறிப்பு!

கடந்த 26ம் திகதி ஓட்டமாவடி பிரதான வீதியில் அமைந்துள்ள புடவைக் கடையொன்றில் நுழைந்த இரண்டு ஆயுதபாணிகள் 45 ரீசேட், 30 ரவுசர் பச்சைத்துணி, மற்றும் உள்ளாடைகளை கொள்வனவு செய்து: பணத்தைக் கொடுக்காது துப்பாக்கியைக் காட்டி மிரட்டிவிட்டு பொருட்களை அபகரித்துச் சென்றுள்ளனர். தமிழில் சரமாரியாக உரையாடியவர்கள் சத்தம் போட்டால் சுட்டு விடுவதாக எச்சரித்துச் சென்றுள்ளனர். அபகரித்துச் செல்லப்பட்ட பொருட்களின் பெறுமதி ரூபா 30 ஆயிரம் ரூபாவைக் கொண்டதாகும்.

இது தொடர்பாக வாழைச்சேனை பொலிஸ் நிலையத்திலும், கண்காணிப்புக் குழுவினரிடமும் உரியவர் முறைப்பாடு செய்துள்ளார். ஆனால் உரிய நடவடிக்கை இதுவரை எடுக்கப்படவில்லை. இதுதான் இன்றைய ஓட்டமாவடி, வாழைச்சேனை முஸ்லிம் வர்த்தகர்களின் நிலைமை.

எம். அஷ்ரஃப் - ஓட்டமாவடி.

## புஷ் — ஷரோன் இருவரும் பயங்கரவாதிகளே சிரியா குற்றச்சாட்டு

சிரியாவுக்கு பொருளாதாரத் தடை விதிக்க அமெரிக்கா முடிவெடுத்த கையோடு கோபமடைந்த சிரிய மக்கள் வீதிகளில் இறங்கி ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடத்தியதுடன். அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷும் இஸ்ரேல் பிரதமர், ஏரியல் ஷரோன் ஆகிய இருவரும் பயங்கரவாதிகள் என்று குறிக்கும் பெனர்களை சுமந்த வண்ணம் அமெரிக்க பொருட்களை உங்கள் வீடுகளி லிருந்து கூட்டித்தள்ளுங்கள் என்று கோஷமிட்டு மக்களிடம் வேண்டிக் கொண்டனர்.

அமெரிக்காவை தண்டிக்கும் வகையில் அனைத்து அமெரிக்க உற்பத்திகளையும் ஒதுக்கி வைக்குமாறு எதிர்ப்பு ஊர்வலத்தில் கலந்து கொண்டோர் சிரிய மக்களிடம் கேட்டுக் கொண்டனர்.


## அநாதைகளுக்கு உதவுவோம்

**புனித ரமழான் வேண்டுகோள் - 2003**

1982ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு
21வருட காலம் இயங்கி வருகிறது.
இலங்கையின் எல்லாப் பகுதியிலும்
உள்ள 62 மாணவர்கள் தற்பொழுது
பராமரிக்கப்படுகிறார்கள். கல்வி,
தொழிற் பயிற்சி, கனணிப்பயிற்சி,
குர்ஆன் வகுப்புக்கள்.
உணவு, தங்குமிடம், மருத்துவ வசதி
எல்லாம் இலவசம்.
புனித ரமழானில் வாரி வழங்குங்கள்

**கணக்கிலக்கங்கள் :**
370C. இலங்கை வங்கி
0740-07955430-001 செலான் வங்கி
3885 - மக்கள் வங்கி
40075 - அமானா இன்வெஸ்ட்மென்

*இயக்குனர் சபை,*
*முஸ்லிம் அநாதைகள் இல்லம்*
*கத்தான்குடி*


## முஸ்லிம் குரல் — புதிர்ப் போட்டி இல - 04

அகழ்வு : நிஷாத் கரீம்

இந்தப் பகுதியின் மாதிரி விடைத்தாளில் புதிர் எண்களும் அதற்கான விடை எழுதும் பகுதியும் தரப்பட்டுள்ளன. (காண்க விடைத்தாள் - 04)

### போட்டி நிபந்தனைகள்

- ✓ உங்கள் விடைகள் தெளிவான எழுத்துக்களில் எழுதி அனுப்பப்படல் வேண்டும். (விடைத்தாளை நீங்கள் தயாரித்துக் கொள்ளவும்)
- ✓ சகல வினாக்களுக்கும் சரியான விடையை எழுதி அனுப்பிய அதிஷ்டசாலிக்கு பெறுமதியானதும், அறிவு ரீதியானதுமான நூல்கள் பரிசாக வழங்கப்படும்.
- ✓ ஒன்றுக்கு மேலானவர்கள் சரியான விடையை எழுதி அனுப்பும் பட்சத்தில் குலுக்கல் முறையில் அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார்.
- ✓ ஏனைய 10 முதல் தர விடைதாரர்களின் பெயர் பிரசுரிக்கப்பட்டு பாராட்டுப் பெறுவர்.
- ✓ நிரப்பப்பட்ட விடைத்தாள் 15.11.2003 ஆம் திகதிக்கு முன் கிடைக்கக் கூடியதாய் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.
- ✓ விடைகள் அனுப்ப வேண்டிய முகவரி

முஸ்லிம் குரல்,
புதிர்ப் போட்டி இல - 04
181/1 மாளிகாகந்த வீதி,
(வைட் பார்க்)
கொழும்பு - 10

### புதிர்கள் :-

01. இலங்கை முஸ்லிம்களை கல்வியின் மூலம் விழிப்புறச் செய்த மாபெரும் தலைவர் யார்?

02. புலிகள் ஆக்கிரமித்துள்ள குரங்கு பாஞ்சான் என்ற முஸ்லிம்களுக்கு சொந்தமான கிராமத்தின் பெயர் என்ன?

03. பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் முஸ்லிம்களை கல்வியில் விழிப்புறச் செய்வதற்கு புத்தளம், மருதானை கம்பளை போன்ற இடங்களில் ஆரம்பிக்கப்பட்ட பாடசாலைகள் என்ன பெயரால் அழைக்கப்பட்டன.?

04. அம்பாறை மாவட்டத்தில் முஸ்லிம்களின் ஆயிரக்கணக்கான ஏக்கர் நெற்காணிகளை சிங்களவர்கள் ஆக்கிரமிப்பதற்கு காரணமாக அமைந்த குடியேற்றத் திட்டம் எது?

05. இலங்கை சோனக இன வரலாறு என்ற புத்தகத்தை எழுதிய அறிஞர் யார்?

06. எகிப்திய விடுதலைக்கு போராடி இலங்கைக்கு நாடு கடத்தப்பட்ட சுதந்திர போராளி யார்?

07. தனது உலக சுற்றுப்பயணத்தில் இலங்கையை தரிசித்த இப்னு பதூதா எந்த நாட்டைச் சேர்ந்தவர்?

08. குருணாகல் பிரதேசத்தை குறுகிய காலம் ஆட்சி செய்த சோனக மைந்தன் என்ன பெயரால் அழைக்கப்படுகிறான்?

09. 2ம் ராஜ சிங்க மன்னனை காப்பாற்ற தனது உயிரை தியாகம் செய்த முஸ்லிம் பெண்மணி வாழ்ந்த இடம் எது?

10. முஸ்லிம்களால் அறிமுகம் செய்யப்பட்ட பொதிகளை சுமந்து செல்லும் முறை எவ்வாறு அழைக்கப்பட்டது?

### மாதிரி விடைத்தாள் 04

**முஸ்லிம் குரல்**
**புதிர்ப் போட்டி இல- 04**

| புதிர் இல | |
|---|---|
| 1 | |
| 2 | |
| 3 | |
| 4 | |
| 5 | |
| 6 | |
| 7 | |
| 8 | |
| 9 | |
| 10 | |

பெயர் :..........................................
முகவரி :..........................................
கையொப்பம் :..........................................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் நோக்கற்ற சமூகம்

இலங்கை வாழ் முஸ்லிம் சமூகத்தின் அரசியல் செயற்பாடுகள் எவ்வாறு அமைய வேண்டும் என்ற வினாவுக்கான ஆய்வுரீதியான முடிவுகளோடு அவர்களின் அரசியல் வரலாறு நகரவில்லை. மாறாக அவர்கள் எதிர்நோக்கிய அரசியல், சமூக சூழ்நிலைகளின் விளைவுகள் அவர்களுக்கு அரசியல் வழிமுறையைத் தேடிக் கொடுத்தது. ஒரு காலத்தில் தேசியக்கட்சி முஸ்லிம் அரசியல்வாதிகள் முஸ்லிம் அரசியலை கையில் வைத்திருந்தனர். தற்போது தனி முஸ்லிம் கட்சி சார்பானவர்கள் முஸ்லிம் அரசியலை வழி நடாத்துகின்றனர்.

முஸ்லிம்கள் இலங்கை நாட்டின் பிரஜைகள் என்ற பொதுவான எண்ணக் கருவுக்கு அமைவாக தேசியக்கட்சி முஸ்லிம் அரசியல்வாதிகள் முஸ்லிம்களை அரசியலில் வழிநடாத்தினர். பல சமூகங்களுக்கிடையே வாழும் தனியான சமூகம் என்ற வகையில் கிழக்கு முஸ்லிம் அரசியல்வாதிகள் இன்று முஸ்லிம் அரசியலை வழிநடாத்துகின்றனர்.

இவ்வாறு இருவிதமான அரசியற் போக்குகளை கண்டு கொண்ட முஸ்லிம் சமூகம் தனியரசியலில் ஈடுபடும் போதே அதற்கு இலக்குகள், நோக்குகள், வரையறைகள் என்பனவற்றைக் கண்டு கொண்டன. ஆனால் இலங்கை நாட்டின் பிரஜைகள் என்ற பொதுவான நிலைப்பாட்டில் முஸ்லிம் அரசியல் வழி நடாத்தப்படும் போது அது அரசியல் நோக்கற்ற சமூகமாகவே இருந்தது. தெற்கு முஸ்லிம்களினது அரசியல் நிலவரம் இன்று இதுவே.

வடக்கு - கிழக்கு முஸ்லிம்களிடம் அவர்களின் அரசியல் ஈடுபாட்டு நோக்கைப்பற்றி வினவினால் ஆக்கபூர்வமான பதில்கள் வரும். ஆனால் அதே வினாவை தெற்கு முஸ்லிம்களிடம் வினவினால் அவர்கள் மௌனிகளாகவே இருந்து விடுவார்கள். இம் மௌனம் அவர்களின் அரசியல் தெளிவின்மை, அறியாமை என்பதை எடுத்துக்காட்டுகிறது. இலங்கை முஸ்லிம்கள் அவர்கள் கிழக்கில் வாழ்ந்தாலும் அல்லது தெற்கில் வாழ்ந்தாலும் அவர்கள் இலங்கை நாட்டின் பிரஜைகள் என்ற பொதுவான நிலைப்பாட்டில் அரசியலில் ஈடுபடுவார்களேயானால் அது அவர்களின் அரசியல் அறியாமையையே காட்டி நிற்கும்.

ஒரு முஸ்லிம் அவர் முஸ்லிம்களின் பிரதிநிதி என்ற நிலைப்பாட்டில் அல்லாமல் அவரை நாடாளுமன்றத்திற்கு அனுப்பும் முஸ்லிம் வாக்குகளின் பொருள் என்ன? பெறுமானம் யாது? சிங்கள வாக்குகளையும் இணைத்துக்கொண்டு பாராளுமன்றம் செல்லும் முஸ்லிம், முஸ்லிம் பிரதிநிதியாக இருப்பது நீதியானது அல்ல என்றால் தெற்கில் முஸ்லிம் பிரதிநிதி என்பது கேள்விக்குறியாகிவிடும். இரு சாராரினதும் வாக்குகளால் பாராளுமன்றம் புகும் ஒரு முஸ்லிம் அவர் முஸ்லிம்களுக்கு அரசியல் ஸ்தானத்தில் நின்று செய்யவேண்டிய கடமைகள் என்ன என்பதையாவது தெற்கு முஸ்லிம் சமூகம் வரையறுத்துக் கொண்டு இருக்கிறதா?

தெற்கு முஸ்லிம்களிடம் அரசியல் குறிக்கோள்கள் இல்லாமல் இருப்பதே முஸ்லிம் அரசியல்வாதிகள் குறிப்பான விமர்சனங்களுக்கு உட்படாமல் தப்பிப் பிழைத்திருக்கிறார்கள். அவர்களின் அரசியல் குடும்ப வியாபாரமாக மாறியிருக்கிறது. வயிறு வளர்க்கலாம். சுயநலத்தோடும் சமூக அக்கறையின்றியும் அரசியல் செயற்பாடுகளில் ஈடுபாடு கொள்கின்றனர்.

**எம்.எப்.எம். இஹ்ஸான் - பேருவளை.**

இலங்கை 'தாருல் குப்ர்' என்று விளங்கிக் கொள்வதற்குப் பதிலாக முஸ்லிம்கள் அது ஒரு அந்நிய நாடு என்ற மனோநிலையைக் கொண்டவர்களாக இருக்கின்றனர். அவர்களின் அந்நிய நாடு என்ற இச்சிந்தனை இந்நாட்டின் அரசியலிலும், சமூகவியலிலும் நிதானத்தோடும், விட்டுக்கொடுப்போடும், அடிமைத்தனத்தோடும் நடந்து கொள்வதற்கான உளவியல் பண்பை அவர்களிடம் வளர்த்து விட்டிருக்கிறது. இப்பண்பு அவர்களின் அரசியல் நோக்குகளை வரையறுத்துக் கொள்ள தடையாய் இருக்கின்றது. தெற்கு முஸ்லிம்களிடம் இவ்வியல்பு ஆழமாக வேரூன்றியுள்ளதை அவதானிக்கலாம். தமிழ் சமூகம் தேசியம் பேசிய போராட்டத்தில் வடக்கு - கிழக்கு முஸ்லிம்கள் பாதிப்படையாமல் இருந்திருந் தால் அவர்களிடமும் இச்சிந்தனைப்போக்கு தாக்கம் செலுத்தியிருக்கும்.

புனர்நிர்மாணப் பணியில் ஈடுபடல், வேலை வாய்ப்புக்களை அளித்தல் என்பன மட்டுமா தெற்கு முஸ்லிம் அரசியல்வாதிகளின் நோக்காக இருக்க வேண்டும்? அவைகளை சிங்களப் பாராளுமன்ற அரசியல்வாதிகளின் மூலமாகவும் முஸ்லிம் சமூகத்தின் பொது நிறுவனங்களின் நன்கொடைகள் மூலமாகவும் அத்தேவைகளை பூர்த்தி செய்து கொள்வது முடியுமானதாகவே இருக்கும். அவ்வாறாயின் முஸ்லிம் அரசியல்வாதிகளின் விஷேடத்துவமான பணிதான் என்ன?

தெற்கு முஸ்லிம்களின் அரசியல் நோக்கங்கள், இலக்குகள் யாவை? அவைகள் கேள்விக்குறியாகவே நிற்கின்றன. அவர்கள் இந்நாட்டின் பிரஜைகள் என்ற பொதுவான நிலைப்பாட்டில் அரசியலில் ஈடுபடுவதா? அல்லது தனியான சமூகம் என்ற வகையில் அரசியலை ஒழுங்கு படுத்திக் கொள்வதா? அவர்களிடம் காணப்படும் அந்நிய நாடு என்ற மனோநிலைக்கான நிவாரணம் யாது? முஸ்லிம் ஒருவர் முஸ்லிம்களின் பிரதிநிதியாக அல்லாமல் பாராளுமன்றம் செல்ல அவர்களின் வாக்குகள் அளிக்கப்படுவது அறிவுபூர்வமானதா? இக்கேள்விகளுக்கான பதிலைத் தேட முனையும் போது தெற்கு முஸ்லிம்களிடம் ஒரு அரசியல் இடைவெளியைக் கண்டு கொள்ளலாம்.

# மத்திய கிழக்கில்

## வீட்டுப் பணிப் பெண்களின் நலன்கள்!

மத்திய கிழக்கு நாடுகளில் இருந்து, வீட்டுப் பணிப் பெண்கள் தொடர்பாக வியப்பூட்டக்கூடிய சம்பவங்கள் பற்றி இந்நாட்களில் அதிகமதிகம் கேள்விப்படுகிறோம்.

எமது மக்கட் சமுதாயத்தின் ஒவ்வொருவரைப் பொறுத்த வரையிலும், பிறர் தொடர்பாக நிறைவேற்றப்படவேண்டிய சமூகக் கடமைகளையே இவை எமக்கு நினைவூட்டுகின்றன.

ஏழை எளியவர்கள் எம் வீடுகளில் பணியாற்ற வருகின்றனர் என்பதன் பொருள், அவர்கள் அடிமைகள் என்பதல்ல. அவர்களும் மனித உணர்வுகள் உடையவர்களே.

அவர்களுக்கும் வீட்டின் எஜமானுக்கும், எஜமாட்டிக்கும் இடையில் உள்ள வித்தியாசம் சமூக கலாசார நிலைமைகளில் தவிர வேறொன்றிலும் அல்ல.

வெளிப்படையான பல்வேறு காரணங்களுக்காக அவர்களை வீட்டில் சற்றுத் தூரத்தில் வைத்திருக்கலாம். எனினும் ஒருவர் மானிட சமூகத்தில் இன்னொருவருக்குக் கொடுக்க வேண்டிய மரியாதைக்கு அவர் உரித்துடையவர் என்பது எச்சந்தர்ப்பத்திலும் மறக்கப்படலாகாது.

மக்களுக்குத் தேவை உணவு, உறக்கம், ஓய்வு, அனுபவித்தல் தமது பிரச்சினைகள், ஏமாற்றங்கள் பற்றிக் கலந்துரையாடும் வாய்ப்பு போன்றன.

தனது பணிப்பெண் பிறரது உணர்ச்சிகளுக்கும் துஷ்ப்பிரயோகங்களுக்கும் உட்படுத்தப்பட எஜமான் இடமளிப்பின் இத்தவறுகளுக்குப் பொறுப்புடையவராகிறார்.

கடும் வெறுப்பு, தாழ்வுணர்ச்சி என்பன ஏற்படவும் பகையுணர்ச்சி மேலெழவும் இடமளிக்கிறார்.

மத்திய கிழக்கில் நாள் முழுதும் கடுமையாக உழைக்கும் பணிப்பெண்களில் மிக அதிகமானவர்கள் ஒழுக்கமானவர்கள். அவர்களின் தயவை நாடிக் குடும்பங்களும் குழந்தை குட்டிகளும் உள்ளனர்.

எவ்வாறாயினும், மத்திய கிழக்கில் அவர்களது வாழ்க்கையினைப் பயனுள்ளதாக்குவதற்கு தேவையான மேற்பார்வை அமைப்பு ஒன்று இல்லை.

வெளிநாட்டில் பணிபுரியும், பாடுபட்டுழைக்கும் வீட்டுப் பணியாளர்களின் நலன்களை மேற்பார்வை செய்து தேவையான போது உரிய நடவடிக்கை மேற்கொள்வதற்காகச் சுதந்திரமான அமைப்பொன்று தேவை.

தாய்நாட்டில் வேலைவாய்ப்பு வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்க அரசாங்கம் தவறியுள்ளமை காரணமாக இப்பணிப் பெண்ணுக்கு வெளிநாட்டுக்குச் செல்ல வேண்டியேற்படுதல் துரதிஷ்டமானதே. அதே சமயம் வெளி நாட்டில் எசமானர்களின் கீழ்: உணர்ச்சியற்ற பொருட்களாகக் கணிக்கப்படுதல் அதனைவிட மேலானதாகும்.

இவ்வகையில், தாம் கணிக்கப்படுவதை எவரும் விரும்ப மாட்டார்கள், ஆயினும் பெரும்பாலோனோர் இந்நிலையில் சிக்கித் தவித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பது மறுக்கப்படவோ, மறைக்கப்படவோ முடியாத உண்மையென்பதை நாம் விரும்பியோ, விரும்பாமலோ ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும்.

ஏ.எம். முஹம்மத் மதனி, ஓகொடபொள




உடல் பலம் பெற்று நோயின்றி வாழ்வதற்கு.... புளியங் கொட்டையளவு தோல் சீவிய இஞ்சியை வாயில் போட்டு, நன்றாக மென்று அதை விழுங்கி விட வேண்டும். காலையில் மதிய உணவுக்குப் பின் அதே அளவு சுக்குத் துண்டையும், மாலையில் அதே அளவு கடுக்காய்த் துண்டையும், வாயில் போட்டு மென்று தின்ன வேண்டும். இந்த விதமாக இடையில் விட்டு விடாமல் தொடர்ந்து நாற்பது நாள் சாப்பிட்டு வந்தால், உடலில் எந்த விதமான வியாதியும் ஏற்படாமல் பல நூறு வருடங்கள் ஆரோக்கியமாக வாழலாம். 100 மி.லி. அளவு இஞ்சிச்சாற்றை கொதிக்க வைத்து அத்துடன் 100 கிராம் தேனையும் ஊற்றி ஆற வைத்து தினசரி காலை மாலை இரு வேளையும் உணவுக்குப் பின்னர் இரண்டு தேக்கரண்டி சாப்பிட்டு வந்தால் பெருத்த வயிறு குறையும்.

எம்.ஆர்.எ்.இனாமுல்லா, நாபாவெளை

# நோன்பாளி!

## ஆர்னிகா நாசர்

வெகுதூரம் நடந்து வந்த அயர்ச்சி அந்த நாற்பது வயது முதிர் இளைஞனிடம் தெரிந்தது. நெற்றி வியர்வையை வலது உள்ளங்கையால் அழுந்தத் துடைத்துக் கொண்டான். இடது கை ஒரு அழுக்கு மஞ்சள் பையை இறுக்கமாக பிடித்திருந்தது.

பள்ளிவாசல் எளிமையாய் நிமிர்ந்திருந்தது. பள்ளிவாசல் பக்கவாட்டில் கூரைக் கொட்டகையாய் 'மதர்ஸா' பள்ளிக்கூடம்.

தயக்கத்துடன் பள்ளிவாசலுக்குள் கால் வைத்தான் அவன். ரப்பர் மிதியடியை கழற்றி ஓரம் தள்ளினான். தொழுகுமிடத்தில் யாருமில்லை. கொல்லைப்புறத்தில் முதியவர் ஒருவர் செங்கல் கலவையிலிருந்து சிறு நீர் ஒற்றும் கட்டிகள் செய்து கொண்டிருந்தார்.

"அஸ்ஸலாமு அலைக்கும் பாய்!" என்றான் வந்தவன்.
"அலைக்கும் சலாம்!" நிமிர்ந்தார்.
"நீங்கள் பள்ளிவாசல் மோதினார் தானே?"
"ஆமாம்!"
"அஜரத்?"
"மாடியறைல ஒய்வெடுத்துகிட்டு இருப்பார். நீங்க யாருன்னு சொல்லவே இல்லையே?"
"மோதினார் பாய்! என் பெயர் ஜெய்லானி. என் சொந்த ஊர் மதுரைக்கு அருகிலிருக்கும் திருப்பத்தூர். வாப்பா, உம்மா இல்லை; சொந்த, பந்தம் கண்டுக்கல. கடந்த 20 வருஷமா மிஸ்கின் வாழ்க்கைதான். ரம்ஜான் மாசம் நெருங்கிருச்சு. நான் கடுமையான நோம்பாளி.

"ரம்ஜான் மாசத்துல எந்த ஊர்ல இருக்கேனோ, அந்த ஊர் பள்ளிவாசலிலேயே டேரா போட்டு முப்பது நோம்பும் வச்சிருவேன். இந்த வருஷம் முப்பது நோம்பையும் உங்க மஹல்லால்ல தான் நோக்கப்போறேன். அது சம்பந்தமாக முத்தவல்லியை பாக்கணும் மோதினார் பாய்!"

தன்தாடியை கோதிவிட்டுக் கொண்டார் மோதினார்...

"உங்க மேல அல்லாஹ் கருணை காட்டியிருக்கான். ஜெய்லானி பாய். முத்தவல்லி ஊர்லதான் இருக்கார். முத்தவல்லிக்கு தகவல் சொல்லி விடுகிறேன் காத்திருங்கள்!"

மஞ்சள் பையை ஓரமாக வைத்துவிட்டு 'ஒலு' செய்தான். 'நபில்' தொழுகை இரண்டு ரக்காயத்து முடித்து விட்டு 'துவா' கேட்க ஆரம்பித்தான் ஜெய்லானி.

வந்து சேர்ந்தார் முத்தவல்லி.

"அஸ்ஸலாமு அலைக்கும் முத்த வல்லி பாய்!"

"அலைக்கும் ஸலாம் பாய். உங்களை பத்தி மோதினார் சொன்னார். நீங்க நம்ம மஹல்லால்லயே தங்கி முப்பது நோம்பும் நோக்கறதை பத்தி எனக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை. ஆனா, இங்க இருக்கின்ற நானூறு முஸ்லிம் குடும்பங்களும் ஏழ்மையானவை. 'சஹர்' சாப்பாடு சிறப்பாக இருக்காது. கைக்காசுக்கு ஏத்தபடி தான் நோம்புக் கஞ்சியே காய்ச்சுவோம்!"

மிஸ்கீனுக்கு என்ன பாய் பெருசா எதிர்பார்ப்பு? சஹருக்கு ரசம் சோறுன்னாலும் மகிழ்ச்சிதான். நோம்பு திறக்க ஒரு கொட்ரா நோம்புக் கஞ்சி, ரெண்டு மசால் வடை போதும் பாய்!"

திடீரென்று முத்தவல்லியின் முகத்தில் சந்தேகம் கிளைத்தது....

"பாய்! நீங்க ஒண்ணும் தீவிர வாதி இல்லையே!?"

மஞ்சள் பையைத் திட்டில் கவிழ்த்தான் ஜெய்லானி. பழைய தலைப்பாய் சோப் அரைக்கட்டி. இரு ஜுப்பாக்கள், இரு லுங்கிகள், இரு ஜோடி உள்ளாடைகள், தஸ்பமணி மாலை, யாஸின்......

"என்னைப் பார்த்தா தீவிரவாதி மாதிரியா தெரியுது?"

"தப்பா நினைச்சிக்கா தீங்க பாய். முந்தியெல்லாம் கொமரு காரியம், பள்ளிவாசல் கட்றதுக்கு உதவின்னு ஆளுக வருவாங்க. முடிஞ்ச பணத்தை வசூல் பண்ணி தருவோம். ரெண்டு, மூணு வருஷமா நிலைமை தலைகீழ். நம்ம காசை வாங்கிட்டு போய் யாரும் அதை தீவிரவாதக் காரியத்துக்கு பயன்படுத்தி மொத்த சமுதாயத்தோட பேரையும் கெடுத்திரக்கூடாதுல? அதனால், செய்யற சிறு உதவியையும் ஆராய்ஞ்சு தகுதியான ஆளுக்கு செய்றோம்!"

ஆமோதித்து தலையாட்டினான் ஜெய்லானி.

"ஒவ்வொரு வீடும் ஒவ்வொரு நாளுக்கான 'சஹர்' சாப்பாட்டை உங்களுக்கு வழங்கும். நோம்பு திறக்கறது நோம்பாளிகளோடயே நீங்கத்திறக்கலாம். இருபத்தியேழாம் கிழமை 'சஹர்' சாப்பாட்டை நம்ம பள்ளிவாசலே தயாரித்து அளிக்கும்!"

"முத்தவல்லி பாய்! முப்பது நாளும் நோம்புக் கஞ்சி தயாரிக்கும் பணிக்கு என்னால் முடிஞ்ச உதவியைச் செய்கிறேன். பூண்டு உரிக்கிறது. தேங்காய் திருகி, அரைக்கிறது. வெங்காயம் உரிக்கிறது இந்த மாதிரி வேலைகள் செய்கிறேன். கொல்லைல இருக்கிற தென்னை மரங்கள் ஏறி தேங்காய் பறிச்சு போடுறேன். கல் அடுப்பு ரெடி பண்றேன். முப்பது நாளும் பள்ளிவாசலுக்கு நான் ஏதாவது செஞ்சுக்கிட்டுதான் இருப்பேன்!"

முறுவலித்தார் முத்தவல்லி....

"அப்படியே செய்ங்க பாய்!"

அன்றைய 'மஹரிப்' தொழுகைக்கான பாங்கை ஜெய்லானியே ஓதினான்.



மறுநாள் காலை தலையில் ஒரு அழுக்குத் துணியைக் கட்டிக் கொண்டு பள்ளிவாசல் முழுமையையும் ஒட்டடை அடித்தான் ஜெய்லானி.

ஹவுதுக்குள் இறங்கி கசடுகளை நீக்கி, இரு விரால் மீன்கள் விட்டான்; தென்னை மரம் ஏறி இளநீர்களை உலுப்பினான். உலுப்பின காய்களை ஜெய்லானியும், மோதினார் பாயும் உரித்தனர்.

மாலை நெருங்கியது... ஆங்காங்கே சிறுவர்களும், சிறுமியரும், பெரியவர்களும் வானத்தில் பிறை தேடினர். மேகமூட்டமாய் இருந்ததால் பிறை தெரியவில்லை.

ஓடிவந்தார் முத்தவல்லி...

"போன் வந்திருச்சு, பிறை பாத்துட்டாங்க.. போன் வந்திருச்சு, பிறை பாத்துட்டாங்க!"

அவ்வளவுதான்... பள்ளிவாசல் 'நகரா'ய நோக்கி ஓடினான் ஜெய்லானி. நகரா அருகே மைக்கை ஸ்டாண்டிட்டான். நகராவை டமடமவென அடித்தபடி "பிறை பொறந்திருச்சு!" என்று கூவினான். முதல் நோம்புக்கான 'சஹர்' சாப்பாடு ஒரு கூலித் தொழிலாளி வீட்டில்.... ரசம் சோறு, உப்புக்கண்டம் பொரித்த அப்பளம், வாழைப்பழம். நோம்பு நோற்பதற்கான நிய்யத்தைக் கூறினான் ஜெய்லானி.

பள்ளிவாசல் போய் படுத்துக் கொண்டான். பகலில் நோன்புக்கஞ்சிக்காக வெங்காயம், வெள்ளைப்பூண்டு உரிக்கும் வேலைகளில் ஈடுபட்டான். முப்பது நாட்களுக்கு, முப்பது வீடுகளில் 'சஹர்' சாப்பாடு எடுத்துக் கொண்டான் ஜெய்லானி. கிராம மக்கள் பணம் வசூல் பண்ணி எடுத்துக் கொடுத்த ஆடையை அணிந்து ரம்ஜான் சிறப்புத் தொழுகையில் கலந்து கொண்டான்.

அன்று மாலையே கண்கள் கலங்கியபடி முத்தவல்லியிடமும், மஹல்லா மக்களிடமும் விடை பெற்றான் ஜெய்லானி. ஜெய்லானியிடம் இருநூறு ரூபாய் நீட்டினார் முத்தவல்லி...

"மறுக்காம வாங்கிக்கங்க பாய்: பஸ் செலவுக்கு உதவும்!"

நீண்டதூரம் கையசைத்தபடியே கூடியிருந்த மக்களிடமிருந்து விலகி நடந்தான் ஜெய்லானி.

செம்மண் சாலையில் எட்டு கி.மீ., நடந்தான் ஜெய்லானி. செம்மண் சாலை முடிவில் ஒரு விலையுயர்ந்த கார் நின்றிருந்தது. காரின் பின் பக்கத்தில் சாய்ந்து நின்றிருந்த ஓட்டுநர் ஜெய்லானியைக் கண்டதும் வணங்கியபடி ஓடோடி வந்தான். துணிப்பையை வாங்கிக் கொள்ள கை நீட்டினான். மறுதலிப்பாய் தலையாட்டியபடி காரின் பின் இருக்கையில் போய் அமர்ந்தான் ஜெய்லானி.

கார் ஒரு ஐந்து நட்சத்திர ஹோட்டலுக்குப் பறந்தது. குளித்து சிறிய ஓய்வுக்கு பின் புத்தாடைக்கு மாறினான். அடுத்த சில மணிநேரத்தில் விமான நிலையத்துக்கு விரைந்தான் ஜெய்லானி. விமானம் ஜெய்லானியை சுமந்து ஹாங்காங் பறந்தது.

ஹாங்காங்-
அலங்காரத் தோட்டம் கூடிய பங்களா, தஸ்பமணி உருட்டியபடி அமர்ந்திருந்த 66 வயதுப் பெண்மணி நிமிர்ந்தார்.

"அஸ்ஸலாமு அலைக்கும்!"
"அலைக்கும் சலாம்!"

"பயணம் எப்படியிருந்தது மகனே?"

"பயணத்தின் சிறப்பைக் வர்ணிக்க வார்த்தைகள் இல்லை உம்மா. பயணத்தின் பல நோக்கங்கள் நிறைவேறின. நான் பிறந்த இந்திய மண்ணில் ரமலான் நோன்பை நோற்க விரும்பினேன். விரும்பிய படியே நோற்றும் விட்டேன்.

"ஒரு ஏழை முஸ்லிமாக இருந்து ஏழை, எளியோரின் தின உணவையே 'சஹர்' சாப்பாடாக உண்டு, நோன்பு சார்ந்த, அனைத்துக் காரியங்களுக்கும் உடல் உழைப்பு ஈந்து, ஒரே மாதத்தில் அந்த மஹல்லா மக்களுடன் இரண்டறக் கலந்து விட்டேன் உம்மா.

"என் உடலை பாருங்கள் உம்மா. எடை குறைந்து மினுமினுக்கிறது. என் மனதிலிருந்த அழுக்குகளும், செல்வச் செருக்கும் கரைந்தோடி விட்டன. என் மீதி வாழ்நாள் முழுக்க ஒவ்வொரு ரமழான் மாதத்தையும் ஒரு இந்திய குக்கிராம பள்ளிவாசலின் ஏழை நோன்பாளியாக கழிப்பேன் உம்மா!"

"இன்ஷா அல்லாஹ் மகனே, அந்த பள்ளி வாசலில் உனக்கு எவ்வளவு 'ஜக்காத்து' கொடுத்தனர்?"

"இரு நூறு ரூபாய் உம்மா!"

"பதிலுக்கு அவர்களுக்கு நீ என்ன செய்யப் போகிறாய்?"

"அந்தப் பள்ளிவாசல் சீரமைப்புக்கும், அக்கிராம மக்கள் நலனுக்கும் ஐந்து லட்சம் இந்திய ரூபாய்க்கு டிமாண்ட் டிராப்ட் எடுத்து அனுப்பப்போகிறேன்!"

"உன்னை மகனாய் பெற்றதுக்கு பெருமைப்படுகிறேன் ஜெய்லானி!"

"அல்லாஹ் உங்கள் வழியாகவே எனக்கு நற்சிந்தனை வழங்கியுள்ளான் உம்மா: எல்லாப் புகழும் இறைவனுக்கே!"

தஸ்பமணி மாலை உருட்டியபடி உம்மாவும் புன்முறுவலாய் ஆமோதித்தார்.

நன்றி : தினமலர் வாரமலர் 21, செப்டம்பர் 2003

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மாற்றுத் தீர்வென்ன என்பதை மயோன் முஸ்தபா அவர்கள் தெரிவிக்க வேண்டும்!

அரசியல் ரீதியாக அல்-ஹாஜ் எம்.எம்.முஸ்தபா அவர்களின் அணுகுமுறை சகல மக்களாலும் ஏற்றுக் கொள்ள முடியாததொன்றாகிறது. அவர் இந்த அரசாங்கம் பதவியேற்ற காலம் முதல் பேசி வருகின்ற கருத்துக்களுக்கும், அவரால் மேற்கொள்ளப்படும் செயல் திட்டங்களுக்குமான மக்கள் அபிப்பிராயங்கள் நேர்மாற்றமான முறையில் அமைந்து வருகின்றமையைக் கொள்ள முடியும். இன்னும் மேடைகளில் அண்மைக்காலமாக அவர் ஆற்றி வருகின்ற உரைகளையும், பொதுஜன ஊடகங்களில் கலந்து கொண்டு அவர் தெரிவித்து வருகின்ற கருத்துக்களையும் கூறமுடியும்.

அதாவது மருதமுனை மக்கள் மண்டபத்தில் அல்-ஹாஜ் எம்.எம். முஸ்தபா அவர்கள் ஆற்றிய உரையின் சுருக்கமாவது "இன்று அரசாங்கம் சமாதானத்தை நிலை நிறுத்த பெரும்பாடுபட்டுக் கொண்டிருக்கின்றது. ஆனால் எமது முஸ்லிம் அரசியல்வாதிகளில் சிலர் முஸ்லிம் இளைஞர்களை உணர்ச்சிவசப்படுத்தி பிழையான வழி முறைக்கு இட்டுச் செல்கின்றார்கள். இதன் காரணமாக மீண்டும் எமது நாட்டிலே இரத்த ஆறே ஓடும். எனவே, அவ்வகையான அரசியல்வாதிகளில் நின்றும், எமது இளைஞர்களை நாம் காப்பற்ற வேண்டும். இதற்கு இந்த வைபவத்தை நடத்துகின்ற அமைப்பு பாடுபட வேண்டும்" என்பதே அந்த உரையின் சாரம்சமாகும்.

அப்படியானால் அந்த யுத்தம் ஏற்பட காரணகர்த்தாக்களாக அவரால் அடையாளப்படுத்தப்படுகின்ற முஸ்லிம் அரசியல்வாதிகள், முஸ்லிம் காங்கிரஸ், தே.ஐ.முன்னணி, அஷ்ரஃப் காங்கிரஸ் ஆகிய கட்சிகளைச் சார்ந்தவர்களாகத்தான் இருப்பார்கள். இன்றைய நிலையில் இக்கருத்தானது ஏற்றுக் கொள்ளக் கூடியதொன்றா? இந்தக் கருத்தை நாம் ஏற்றுக் கொண்டால் வடக்கு, கிழக்கு முஸ்லிம்களாகிய நாங்கள் என்ன செய்ய வேண்டும்! எங்களின் எதிர்காலங்களின் நிலைமைகள் என்ன? நாங்கள் மௌனமாகவிருந்தால் இன்றைய அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் நாங்கள் எதிர்பார்ப்பதை விட அதிக அதிகாரங்களை முஸ்லிம்களுக்கு தருவார்களா? என்பன போன்ற கேள்விகளுக்கும் அல்-ஹாஜ் எம்.எம். முஸ்தபா அவர்கள் பதில் தெரிவித்திருக்க வேண்டும்.

இன்றைய நிலையில் வடக்கு - கிழக்கு முஸ்லிம்கள் எந்தவொரு அரசியல் பலத்தில் அல்லது அதிகாரத்தில் இருக்கின்றார்களோ அதனைத் தக்க வைத்துக் கொள்வதே கேள்விக்குறியாகவிருக்கும் ஒரு நிலையில், சற்றேனும் அரசியல் விழிப்புணர்ச்சியற்று பொதுவைபவங்களில் கருத்துத் தெரிவித்து வரும் எமது அரசியல்வாதிகள் யதார்த்த நிலையை புரிந்து கருத்துக்களைத் தெரிவிக்க வேண்டும். எம்மால் எமது சமூகத்திற்கு உதவ முடியாக

போதும் உபத்திரமாவது நாங்கள் செய்யாமலிருப்பதே இன்றைய எமது தேவையாகும். இது அனைவருக்குமான வேண்டுதலாகும்.

அன்பார்ந்த அல்-ஹாஜ் எம்.எம். முஸ்தபா எம்.பி அவர்களே! கொழும்பிலே, ரணில் அரசாங்கம் நாட்டை பிரித்து பிரபாகரனிடம் கொடுத்து விட்டதென்று கூறி எதிர்க்கட்சிகள் ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள் நடத்துகின்றனர். சுகாதார சேவையில் வேலை நிறுத்தம், புகையிரத சேவையில் வேலை நிறுத்தம், பல்கலைக்கழகங்களின் சிற்றூழியர்களின் வேலை நிறுத்தம், பட்டதாரிகளின் போராட்டம், மின்சார ஊழியர்களின் போராட்டம் என போராட்டத்திலேயே எமது தலைநகர் மூழ்கிக் கிடக்கையிலே அவைகளுக்கு முகம் கொடுக்க முடியாமல் இன்றைய ஆட்சியாளர்கள் திணறிக் கொண்டிருக்கும் ஒரு நிலையில் பிரதமர், அமைச்சர்கள் வெளிநாடுகளில் வலம் வர, தமிழ்ப் போராளிகள் இடைக்கால நிர்வாக யோசனைகளை ஆராய ஆகாயமார்க்கமாக நாடு நாடாக சுற்றுலா நடத்த, எமது முஸ்லிம் தலைமைகளும் அவர் சார்ந்தவர்களும் மீளாத தூக்கத்தில் இருந்து கொண்டு தலையாட்டி பொம்மைகளாக செயல்படுகின்றார்கள் என்று குற்றம் சாட்டும் எமது முஸ்லிம் இளைஞர்கள் ஒன்றும் அரசியல் ஞானம் இல்லாத ஜடங்களல்ல. அவர்களுக்கு எந்தத் தலைவர்களும் உணர்ச்சிகளைக் கொடுக்க வேண்டிய அவசியமில்லை.

ஏனெனில் முஸ்லிம் இளைஞர்களுக்கு இயற்கையாகவே சமூக உணர்வுகள் நிறையவே இருக்கின்றன. நீங்கள் யாரை மனதில் வைத்து உரையாற்றினீர்களோ தெரியாது. எனினும் அண்மைய சில நிகழ்வுகளை இவ்விடத்தில் தருவது பொருந்துமென நினைக்கின்றேன். ஆம் மு. காங்கிரஸ் தலைவர் கிண்ணியா சென்றிருந்தபோதும், கல்முனைக்குடிக்குச் சென்ற வேளையிலும், இன்னும் உலமாக்கள் கலந்து கொண்டதொரு நிகழ்விலும் முஸ்லிம்கள் தீவிரவாதத்தைக் கொள்கையாகக் கொள்ளக்கூடாதென (மு.கா. தலைவர்) கூற அந்தக் கருத்துக்கு எதிர்க்கருத்து அவர் முன்னிலையில் பொதுமக்கள் தெரிவித்ததையும் செய்திப் பத்திரிகைகளூடாக நாம் அறியமுடிந்தது. அப்படியானால் முஸ்லிம் தலைவர்களை விடவும் தீவிரமாக பொது ஜனங்களே உள்ளார்கள் என்பதை விளங்க வேண்டும். இது ஒரு கட்டுக்கதையல்ல. நடந்த நிஜங்கள்.

எமது மக்கள் தீவிரவாதிகளாகி எந்தவொரு இனத்தையும் அடக்கி ஆளவோ, அல்லது அழித்தொழிக்கவோ வேண்டியதில்லை. மாறாக எமது சமூகத்திற்கெதிராக அநீதி இழைக்கப்படும் பட்சத்தில் அந்த இலட்சிய தீவிரம் தேவைப்படுகின்றது. இதனை எமது அருள் மறையாம் திருமறையும் போதிக்கின்றது. எனவே தங்களின் கருத்துக்களையேற்று எமது சமூகம் வாய்மூடி மௌனித்திருக்கும்வேளை இதுவல்ல.

இது எமது உரிமைகளை பேசவேண்டியகாலம. அது மறுக்கப்படும்போது அகிம்சை ரீதியாக எமது ஆட்சேபனையைத் தெரிவிக்க வேண்டிய காலம், தட்டிக்கேட்க வேண்டிய காலம் என்பதை அனைவரும் ஏற்றுக்கொண்டேயாக வேண்டும்.

அல்லது கிடைப்பதை பகிர்ந்து கொள்ளும் விடயமோ அல்ல. அது ஒரு சமூகத்தின் தலை விதியுடன் சம்பந்தப்பட்ட விடயமாகும். எனவே ஒரு சமூகத்தின் தலைவிதியை அச்சமூகமே தீர்மானிக்க வேண்டும். இந்த விடயத்தில் இன்னுமொரு சமூகத்தின் எச்ச சொச்சங்களைப் பெறுவதென்பது தமது சமூகத்தின் தன்மானத்தை அடகு வைப்பதற்குச் சமனானதாகும்.

பாராளுமன்ற உறுப்பினர் அவர்களே! இன்று



எம்.எல்.எம். முஸ்தபா-மருதமுனை

நீங்கள் பதவியில் இருந்தாலும் நாளை ஒரு சாதாரண நிலைக்கு முஸ்தபாவாக வரலாம். எனினும் பதவியில் இருந்த காலத்தில் தமது கடமையை தாம் சரிவரச்செய்தோமா? என்ற கேள்வி பிற்காலத்தில் உங்களை நீங்கள் கேட்டுக் கொள்ள வேண்டிய காலமும் ஏற்படலாம். பாராளுமன்ற உறுப்பினராகவிருந்து நீங்கள் சார்ந்த கட்சிக்காக பேசுவதற்கும், கருத்துக்களைத் தெரிவிப்பதற்கும் உரிமைகள் உண்டு. அதேபோன்று ஒரு முஸ்லிம் சமூகத்தவன் என்ற ரீதியில் எமது கருத்துக்களை எழுத எமக்கும் எழுத்துச் சுதந்திரமுண்டு. எனினும் எங்களின் பேச்சும், கருத்தும், எழுத்தும் எம்மைப்பெற்றெடுத்த முஸ்லிம் உம்மாவுக்கே பயன்படுத்தப்பட வேண்டும். அது இன்று எம் சமூகத்திற்குத் தேவையுங்கூட.

அடுத்ததாக, இரத்த ஆறுபற்றி பேசியிருக்கின்றீர்கள். வடக்கு கிழக்கு முஸ்லிம்களுக்கு இது ஒன்றும் புதியவிடயமல்ல. வடக்கு கிழக்கு முஸ்லிம்கள் ஏதும் அறியாத அப்பாவி நிலையிலேயே வட மாகாணத்திலிருந்து முஸ்லிம்கள் இனச்சுத்திகரிப்புச் செய்யப்பட்டார்கள். அதேபோன்று காத்தான்குடியில் தொழுகையில் வைத்து

நூற்றுக்கணக்கானவர்கள் கொன்றொழிக்கப்பட்டார்கள். இன்னும் ஏறாவூர், பொலநறுவை, சாய்ந்தமருது, அக்கரைப்பற்று என நீண்டு செல்லும் எமது முஸ்லிம் கிராமங்களில் நூற்றுக்கணக்கில் எமது சகோதரர்கள் கொன்றொழிக்கப்பட்ட வேளையில் ஓடியதும் இரத்த ஆறுதான். அதனைவிடவா இப்போது புதிதாக இரத்த ஆறு ஓடப்போகின்றது. இன்று வடக்கு கிழக்கு முஸ்லிம்கள் எதற்கும் முகம்கொடுக்க தம்மைத்தாங்களே பழக்கப்படுத்திக் கொண்டுள்ளார்கள். இனிமேல் இப்படியான பேச்செல்லாம் எமது மக்களிடம் செல்லாது போகலாம்.

ஸ்ரீலங்கா நாட்டில் நாம் சிறுபான்மையானாலும் பரந்த இன்றைய உலகில் நாம் பெரும்பான்மை என்பதை எமது மக்கள் நன்றாகவே உணர்ந்திருக்கின்றார்கள். எமது மக்கள் எவரது போராட்டங்களையும் கொச்சைப்படுத்தவில்லை. எனினும் கடந்தகால கசப்பான சம்பவங்களால் பாதிக்கப்பட்டுள்ளார்கள். இன்று வீறு கொண்டு ஒரு முஸ்லிம் இளைஞன் எழுகிறானென்றால் அவனது குடும்பத்தைச் சேர்ந்த யாராவது அநியாயமான முறையில் கொல்லப்பட்டிருப்பார்கள். இப்படியானவர்களுக்கு ஹக்கீமோ, அதாவுல்லாவோ, அல்லது ஹிஸ்புல்லாவோ உணர்ச்சியூட்ட வேண்டிய அவசியமில்லை. அது தேவையானதுமல்ல. ஆயிரக்கணக்கான எமது முஸ்லிம் உயிர்கள் பறிக்கப்பட்டதன் வெளிப்பாடே அந்த இளைஞனின் ஆவேசமாகும்.

இறுதியாக கடந்த பிரேமதாஸ அரசாங்க காலத்தில் இப்படியானதொரு இக்கட்டான நிலைதோன்றி முஸ்லிம் கிராமங்கள் தமிழ்ப் போராளிகளால் தாக்கப்பட்ட வேளை தமது கிராமங்களையும், தமது சமூகத்தையும் பாதுகாக்க முன்னின்ற முஸ்லிம் காங்கிரஸ் தொண்டர்களை அவ்வேளை அமைச்சராகவிருந்த அல்-ஹாஜ் ஏ.ஆர். மன்சூர் அவர்களினதும் இன்னுமொரு அமைச்சராகவிருந்த ஏ. அப்துல் மஜீத் அவர்களினதும் முன்பாகவே அன்று பிரதிபாதுகாப்பு அமைச்சராகவிருந்த ரஞ்சன் விஜேயரத்தினவின் உத்தரவின்பேரில் "ஜிஹாத்" என்று தேடித்தேடிக் கைதுசெய்து சிறையிலடைத்து சித்திரவதை செய்தனர். இன்னும் சில முஸ்லிம் இளைஞர்கள் விடுதலைப் போராளிகளால் கொல்லப்பட்டனர். இன்று அதே மன்சூர் முஸ்லிம் காங்கிரஸின் சிபாரிசினால் தூதுவராக வெளிநாடு சென்றிருக்கின்றார். ஆனால் அன்று அமைச்சராக இருந்த இவர் இவைகளைத் தடுக்கவில்லை. முஸ்லிம்களைப் பொறுத்தவரை தமது சமூகத்திற்கு அடுத்ததாகத்தான் "கட்சி அரசியலுக்கு" முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். இந்த உணர்வுகள் நிச்சயமாக அல்-ஹாஜ் எம்.எம். முஸ்தபா அவர்களிடமுண்டு என்பதை நாம் அறிவோம். அதற்கிசைவான முறையில் அவர் கருமமாற்ற வேண்டும். அதுவே இன்றைய தேவை.

## காணிப்பதிவுகளும் காணாமல்போன பிரதேசங்களும்

அம்பாறை, மட்டக்களப்பு, திருமலை மாவட்டங்களில் முஸ்லிம்களின் காணிகள் பற்றிய விபரங்களைத் திரட்டும் வகையில் USAID நிறுவன அனுசரணையுடன் எம்.ஆர்.ஓ. என்ற அமைப்பு தகவல்களைத் திரட்டி வருகின்றமையை நம்மில் பலர் அறிந்திருப்பர்.

இந்த வகையில் ஏனைய மாவட்டங்களில் இந்தக் காணிப்பதிவு விடயங்கள் எப்படி நடக்கின்றது என்பது எங்களுக்குத் தெரியாத நிலையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் இக்காணிப்பதிவு விடயத்தில் முஸ்லிம்களுக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளது கண்கூடு.

மட்டக்களப்பு மாவட்ட காணிப்பதிவு விவகாரம் ஏன் சரியாகச் செய்யப்படவில்லை என ஆராய்கிற போது பல்வேறு குறைபாடுகள், காட்டிக் கொடுப்புகள் வெளிச்சத் திற்கு வருகின்றன. இவற்றில் சில அதிர்ச்சியான தகவல்களாகவும் உள்ளன.

குறிப்பாக காத்தான்குடியைச் சூழவுள்ள பிரதேசங்களில் முஸ்லிம்களுடைய காணிகள் அதிகமாக இருக்கின்ற பூநொச்சிமுனை, கீச்சான் பள்ளம், சிகரம், கோட்டைமுனை, முஸ்லிம் கொலனி போன்ற பிரதேசங்களில் வாழ்ந்த முஸ்லிம் மக்களிடமிருந்து விண்ணப்பங்கள் திட்டமிட்டு திரட்டப்படவில்லை என்கிற விடயம் தெரியவந்துள்ளது. பதியச் சென்றோருக்கு பதியப்பட்டுள்ளது என ஏமாற்றப்பட்ட சம்பவங்கள் நடந்துள்ளது இப்போது தெரியவருகிறது.

எம்.ஏ.பாத்திமா ஹரீஸா, புதிய காத்தான்குடி.

## தோப்பூர் ஜம்இய்யதுல் உலமா சபைத் தெரிவு

தோப்பூர் ஜம்இய்யதுல் உலமா சபைத் தெரிவுக்கான பொதுக்கூட்டம் 28.09.2003 ஞாயிற்றுக் கிழமை தோப்பூர் நூரிய்யா அரபுக்கல்லூரியின் கேட்போர் கூடத்தில் மௌலவி ஆ. அப்துர் ரஹ்மான் (பஹ்ஜி) அவர்களின் தலைமையில் நடைபெற்றது. இதில் நூற்றுக்கணக்கான உலமாக்கள் கலந்து கொண்டு தோப்பூர் பிரதேசத்திற்கான ஜம்இய்யத்துல் உலமாசபையைத்தெரிவு செய்தனர்.

**தோப்பூர் ஜம்இய்யதுல் உலமாசபை நிருவாகம்**

தலைவர் - மௌலவி M. J. சர்ஜில் (நத்வி)
செயலாளர் - மௌலவி S.A. அமீன் (நத்வி)
பொருளாளர் - மௌலவி A. ஜவாஹிர் (நளீமி)
உப தலைவர் - மௌலவி K.M. அலாவுதீன் (நத்வி)
உப செயலாளர் - மௌலவி A.W.M. கனீஸ் (நூரி)
துணைக்குப் பரிசோதகர் - மௌலவி A.S. ஜின்னா (பலாஹி)

**நிருவாக சபை உறுப்பினர்கள்**

மௌலவி M.K. நஜீம் (பலாஹி)
மௌலவி P.T. மர்சூன் (நூரி)
மௌலவி N. இர்பான் (நூரி)
மௌலவி S.M. நிஸ்வான் (நஜாஹி)
மௌலவி Y.L. முபாரிஸ் (நூரி)
மௌலவி M.S. அனஸ் (நூரி)

**உயர் மட்ட ஆலோசனைக் குழு**

மௌலவி M. அப்துர் ரஹ்மான் (பஹ்ஜி)
மௌலவி A.R. அப்துல் கை (காசிமி)
மௌலவி M.S. ஜலால்தீன் (காசிமி)
மௌலவி A.R.Z. ஆப்தீன் (பஹ்ஜி)
மௌலவி M.L. அனிபா (பாகவி)

தகவல்:- A.S.M. [illegible]

## நீயும் நிகழ்கால நிமிஷங்களும்!



செத்துப்போன
உன் குழந்தையை நினைத்து
நீ இன்னும்
ஓயாது ஒப்பாரித்துக்
கொண்டிருக்கிறாய்.

பிறக்காத
உன் பிள்ளையை நினைத்து
நீ இன்னும்
பிரலாபித்துக் கொண்டிருக்கிறாய்.

ஆயினும்
உன் மடியினில் தவழும்
மழலையை மட்டும்
உதாசீனித்துக்,
கொண்டிருக்கிறாயே!.

கடந்தகாலத்தில்
கை நழுவிப்போன
மாணிக்கங்களை நினைத்து
நீ ஏங்குகிறாய்

வருங்காலத்தில் கிட்டவிருக்கும்
வைரங்கள் பற்றிய
வர்ணக் கனவுகளில்
நீ தூங்குகிறாய்.

ஆயினும் நிகழ்காலத்தில்
உன்கையிலிருக்கும்
கருங்கல்லை மட்டும்
நீ கவனிப்பதேயில்லையே!.

நீ ஒன்றில்
இறந்தகால நினைவுகளில்
நீந்துகிறாய்.

அன்றில்
வருங்காலக் கனவுகளில்
மாந்துகிறாய்.

ஆனால்
நிகழ்காலத்தை மட்டும்
நிராகரித்துக் கொண்டிருக்கிறாயே!.

நேற்றோடு
நேசம் பாராட்டுகிறாய்.
நாளையோடு
நட்புறவாடுகிறாய்.
இன்றோடு மட்டும்
கோபித்துக் கொள்கிறாயே!

நேற்றின் தெருக்களில்
உலவுகிறாய்.
நாளையின் வீதிகளில்
சஞ்சரிக்கிறாய்.
இன்றின் பாதையில் மட்டும்
நீ பயணிப்பதே இல்லையே!

நேற்றில் இருக்கின்றாய்.
நாளையில் இருக்கின்றாய்.
இன்றில் மட்டும் நீ இருப்பதே
இல்லையே!

நேற்று-
உன் கடந்தகால முகவரி.
நாளை-
உன் வருங்கால முகவரி.
இன்றுதான்-
உன் இப்போதைய முகவரி

என்ன?
உன் நிஜ முகவரியை
நீ மறந்து விட்டாயா?

நிகழ்காலம் தானே-உன்
நிஜமான முகவரி
நிஜமுகவரியை மறந்து விட்டு
நீ வீடுபோய்ச் சேர்வதெப்படி?

கடந்த காலம்
உன் கைவிட்டுப்போன காசு.
வருங்காலம்
உன் கைக்கு இன்னும் வராத
காசு.
நிகழ்காலம்தான்
உன் கையிலிருக்கும் நிஜமான
காசு.

நிகழ்காலச் செலாவணியை
நிராகரித்துவிட்டு
நீ-
வாழ்க்கையில் எதை
வாங்கப்போகிறாய்?

உஸ்மான் மரிக்கார்

## வாசகர் கவனத்திற்கு

முஸ்லிம் குரலின்
1-15 இதழ்கள் தேவைப்படுவோர்.ரூபா. 200/- க்கான
காசுக்கட்டளை/காசோலை அனுப்பி பெற்றுக் கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊடகப் பயங்கரவாதத்தை உடைத்தெறிவோம்

புலிகளுக்கும், முஸ்லிம்களுக்கும் இடையில் பலநூறு முரண்பாடுகள் தோன்றியுள்ளன. இவற்றின் நதிமூலம் எதுவென்று ஆராய்ந்து பார்த்தால் அதனை ஆரம்பித்தவர்கள் புலிகளாக இருப்பர். இதனை ஆதாரத்துடன் நிரூபித்தால் புலிகளும், தமிழ் ஊடகங்களும் "முற்றாக மறுக்கிறோம், புலிகள் அப்பாவிகள், மூன்றாம் சக்தி , முப்பதாம் சக்தி, தீய சக்தியின் வேலை, இனந்தெரியாதவர்கள், முஸ்லிம்கள் சிங்களவர்களால் இயக்கப்படுகின்றார்கள்" (இவற்றை வடக்கு கிழக்கில் புலிகள் செய்யாமல் வேற்றுக்கிரக வாசிகள் செய்திருப்பார்களோ!) என்றெல்லாம் காதில் பூச்சுற்றி பூசணிக்காயை புதைக்கப்பார்ப்பார்கள்.



24-1,0-2003 அன்று விறகு எடுக்கச் சென்ற கிண்ணியாவைச் சேர்ந்த முஸ்லிம் ஏழையை வழமைபோல புலிகள் கடத்தி, வண்டியையும், மாட்டையும் அவ்வேழை முஸ்லிமையும் விடுவிக்க கப்பம் கோரினர். இச் சந்தர்ப்பத்தில் 3 புலிகளைப் பொது மக்கள் தடுத்து வைத்து கடத்திய நபரை விடுவிக்குமாறு கோரினர். அவ்வேளை அங்கு ஓடோடி வந்த கண்காணிப்பு உத்தியோகத்தர்களும், இராணுவத்தினரும் அப்புலிகளை அழைத்துச் சென்றனர். ஆனால் அவர்கள் வழமைபோல புலியிடம் சிக்கிய முஸ்லிமையும் வண்டில் மாட்டையும விடுவிக்க எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. இதனால் பொதுமக்களுக்கும், இராணுவத்தினருக்கும் இடையில் முறுகல் நிலை ஏற்பட ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டது.

யதார்த்த நிலைமை இவ்வாறிருக்க புலிகளின் மறுபெயரான 'இனந்தெரியாத நபர்' என்ற கதையாடலின் பிதாமகனான திருகோணமலைக்கான தமிழோசை நிருபர் ரத்னலிங்கம் 24-10-03 பி.பி.சி. தமிழோசைக்கு பின்வருமாறு பொய் கூறினார். " திருகோணமலை மாவட்டத்தின் கிண்ணியாப்பிரதேசத்தில் மூன்று விடுதலைப்புலி உறுப்பினர்களை முஸ்லிம்கள் கடத்தியதனால் அங்கு ஏற்பட்ட குழப்பநிலையைத் தணிப்பதற்கு ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேலும், இவ்வாறு விடுதலைப்புலிகள் கடத்தப்பட்டமைக்கு வண்டில் ஒன்றை இனந்தெரியாத நபர்கள் கடத்தினார்கள் என்றும் காரணம் கூறப்படுகிறது" என்று கூறினார்.. இந்த (பொய்) செய்தியாளர் அண்மையில் வவுனியாவுக்கு அழைக்கப்பட்டு 'சிறந்த செய்தியாளர்' என்ற விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதே நேரம் சக்தியின் உயிர்நாடி, சக்தி நேசன் சக்தியின் நரம்பு, நாடி, நாளம், ஈரல், குருதிச் சுற்றோட்டம் (சக்தி என்றால் சிவனின் மனைவி) என்றெல்லாம் தம்மை அறிமுகப்படுத்தி வழியும் முஸ்லிம் சகோதர, சகோதரிகள் காது கொடுத்துக் கேட்கும் சக்தி எப்.எம். எவ்வாறு செய்தி வாசித்தனர் தெரியுமா? இதோ. "கிண்ணியா ஊடக ஆட்டோவில் பயணம் செய்த மூன்று விடுதலைப்புலிகளை முஸ்லிம்கள் கடத்தியதனால் அங்கு ஏற்பட்ட குழப்ப நிலையை சமாளிக்க ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டுள்ளது" இவ்வளவுதான் சக்தி எப்.எம். இன் நேர்மை.

இவை 'ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறுபதம்தான்'. இன்று தமிழ் பத்திரிகைகள், வானொலிகள், தொலைக்காட்சிகள், இணையத்தளங்கள் அனைத்தும் முஸ்லிம்களுக்கெதிராகவே சொற்போர் நடத்துகின்றன. இதனை நாளாந்தம் நாம் அனுபவிக்கிறோம்.

அதே நேரம் . எமக்கெதிராக எழுதுகின்ற பத்திரிகைகளை நாம் பணங்கொடுத்து வாங்குகிறோம். பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி என்பனவற்றுக்கு விளம்பர அனுசரணை வழங்குகிறோம். எம்மிடம் உழைத்துக் கொண்டு எமக்கே குழி பறிக்கிறார்கள். எம்மைப் பற்றி என்னதான் நினைத்துக் கொண்டார்கள்?

முஸ்லிம்களை அழிக்கப்புறப்பட்டதனால் நாம் அமெரிக்கப் பொருட்களை பகிஷ்கரிக்கிறோம்! வரவேற்கத்தக்கது. அதே நேரம் இலங்கையில் தமிழ் ஊடகங்கள் முஸ்லிம்களின் தலையைத் தடவிக் குட்டுவதை உணராதிருக்கிறோம். எப்போது நாம் இவற்றைப் பகிஷ்கரிக்கப்போகிறோம். எப்போது எமக்கான ஊடகங்களுக்கு அனுசரணை கொடுத்து வளர்க்கப்போகிறோம்? விழித்தெழுவோம்! தமிழ் ஊடகப் பயங்கரவாதத் தாக்குதலை முறியடித்து முன்னேறுவோம்!!

-பாத்திமா சுமையா
தோப்பூர்.


முஸ்லிம் குரலில் விளம்பரம் செய்து நமது பத்திரிகை வளர்ச்சிக்கு உதவுங்கள்

தொடர்புக்கு

விளம்பர முகாமையாளர்

முஸ்லிம் குரல்

181/1 Maligakanda Road (White Park)

Colombo 10 .

Phone : 0777 389127


# வாழைச்சேனை பஸ் டிப்போவில் இன ஆதிக்கம் முஸ்லிம்கள் ஓரம்கட்டப்படுகின்றனர்!

நியூ ஈஸ்டர்ன் பஸ் கம்பனியின் வாழைச்சேனை டிப்போவில் கடமையாற்றும் முஸ்லிம் ஊழியர்கள் பல வழிகளிலும் நெருக்கடிகளுக்குள்ளாக்கப்பட்டு வருவதாக அறிய முடிகிறது.

இந்த டிப்போவில் கடமையாற்றும் முஸ்லிம் ஊழியர்களுக்குப் பதவி உயர்வுகள், சலுகைகள், ஊக்குவிப்புக்கள் அனைத்துமே மறுக்கப்பட்டு வருவதோடு எந்நேரமும் இனத்துவேஷ மனப்பான்மையில் நடத்தப்படுவதாகவும் ஊழியர்கள் வேதனை தெரிவிக்கின்றனர்.

வாழைச்சேனை டிப்போ முஸ்லிம் மஜ்லிஸினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: "வாழைச்சேனை டிப்போவில் இன ரீதியாக நசுக்கப்படும் முஸ்லிம் ஊழியர்களையும், சமூகத்தையும் பாதுகாக்கத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

கடந்த காலங்களில் சாலை முகாமையாளராகக் கடமையாற்றிய வீ. தவநேசன் பதவி உயர்வு பெற்றுச் சென்றபின்னர், முகாமையாளர் வெற்றிடத்திற்கு தகுதியான நிலையில் இந்த டிப்போவில் கடமை புரிந்து கொண்டிருந்த ஏ.பி.எம். ஸனூஸ் (தரம்-4) அவர்களை நியமிப்பதற்குப் பதிலாக, மட்டக்களப்பு பஸ் நிலையத்தில் நேரப்பதிவாளராக கடமை புரிந்த வீ. முரளிதரன் (தரம்-5) என்பவரை நியமித்தனர். அவரது நிர்வாகச் சீர்கேடு காரணமாக அவரைத் தலைமைக்காரியாலயத்திற்கு இடமாற்றம் செய்து அவ்விடத்திற்கு இந்த டிப்போவில் கணக்காளராகக் கடமை புரிந்த எஸ். பத்மநாதனை நியமித்தனர்.

அதே நேரம் இச்சாலையில் சகல தகைமைகளுடனும் எம்.ஐ.ஏ. அஸீஸ் (தரம்-3), ஏ.பி.எம். ஸனூஸ் (தரம்-4) ஆகிய இரு முஸ்லிம் அதிகாரிகள் இங்கு கடமை புரிந்து கொண்டிருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

தற்போது சாலை முகாமையாளராகக் கடமை புரியும் எஸ். பத்மநாதன் (தரம்-5) னைத் தலைமைக் காரியாலயத்திற்கு மாற்றம் செய்து, அவரது இடத்திற்கு இப்பொழுது களுவாஞ்சிக்குடி டிப்போவில் கடமை புரியும் ரீ. கதிரையாவை நியமிப்பதற்கு கல்முனைத் தலைமைக் காரியாலயம் முடிவு செய்துள்ளதாக அறிகிறோம்.

இதேவேளை இந்த டிப்போவில் முகாமையாளர்களாக் நியமிப்பதற்குரிய சகல தகுதிகளுடனும் இரு முஸ்லிம் அதிகாரிகள் கடமையாற்றுகின்றனர். இவர்கள் இருவரும் முஸ்லிம்கள் என்ற ஒரே காரணத்திற்காகவும், முஸ்லிம்களை முகாமையாளர்களாக நியமிக்கக் கூடாது என்ற நோக்கிலும் இன ரீதியான ஒதுக்கலை திட்டமிட்டு மேற்கொண்டு வருகின்றமை ஆரம்பத்திலிருந்தே வாழைச்சேனை டிப்போவில் இடம் பெற்றுவருவது உண்மையாகும்.

இது விடயத்தில் கூடிய அக்கறை செலுத்தி, நியமிக்கப்படவுள்ள முகாமையாளர் நியமனத்திற்கு தகுதியான எம்.ஐ.ஏ. அஸீஸ் (தரம்-3) அவர்களை நியமித்துத்தருமாறும், முஸ்லிம்கள் என்ற காரணத்தினால் சகல வழிகளிலும் புறக்கணிக்கப்பட்டுவரும் ஊழியர்களின் நலன் காக்க உதவுமாறும், அது சாத்தியப்படாத பட்சத்தில் இங்கு கடமை புரியும் முஸ்லிம் ஊழியர்கள் அனைவரினதும், இப்பிரதேச முஸ்லிம் மக்களின் எதிர்கால நன்மையினைக் கருத்திற் கொண்டும் பிரிந்து சென்று தனியாகச் செயற்படுவதற்கு ரிதிதென்ன, ஜெயந்தியாய ஆகிய பகுதிகள் உள்ளடக்கப்பட்டதாக சுமார் 50 ஆயிரம் முஸ்லிம்களின் நன்மை கருதி தனியான ஒரு டிப்போவை ஏற்படுத்தித் தருமாறு கேட்டுக் கொள்கின்றோம்", என அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஏற்கனவே வாழைச்சேனை டிப்போ நட்டத்தில் இயங்கி வருகின்ற போதும் அங்கு கடமையாற்றும் 32 முஸ்லிம் ஊழியர்களின் பலத்தைக் குறைக்கும் வகையில் அதிகளவான தமிழ் ஊழியர்கள் தேவைக்கு அதிகமாக வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ளார்கள்.

கடந்த ஆண்டு ஜூன் மாதம் 27ம் திகதி வாழைச்சேனையில் முஸ்லிம்கள் ஹர்த்தால் அனுஷ்டித்தபோது அந்த ஹர்த்தாலை முறியடிப்பதற்காக எல்.ரீ.ரீ.ஈ. இனரும் டிப்போவின் தமிழ் ஊழியர்களும் ஆயுதங்கள் சகிதம் பஸ்சேவை நடத்தினர். பின்னர் முஸ்லிம்கள் மீது வன்முறைகளைக் கட்டவிழ்த்து விட்டு 16 முஸ்லிம்களைப் படுகொலை செய்ததுடன் சுமார் 250 இற்கும் மேற்பட்ட முஸ்லிம்களின் கடைகளைத் தீயிட்டுக் கொளுத்தினர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

-மட்டக்களப்புச் செய்தியாளர்-

# நோக்கும் போக்கும்

முஸ்லிம்களின் சுயநிர்ணயம், பாதுகாப்பு என்பவற்றை வென்றெடுப்பதற்காகவே முஸ்லிம் காங்கிரஸ் உருவானது. எனவே, நமது கட்சி சார்பாக பாராளுமன்ற உறுப்பினர்களானவர்கள் கட்சி உருவாக்கப்பட்டதன் நோக்கத்தை அடைந்துக் கொள்வதற்கான வழிவகைகள் பற்றியே சிந்திக்கக் கடமைப்பட்டவர்கள்.

அதன்படி சாத்தியமான ஒவ்வொரு சந்தர்ப்பங்களையும் கச்சிதமாகவும், புத்தி பூர்வமாகவும் பயன்படுத்த வேண்டும்.

- பற்பல கலந்துரையாடல்களை நடாத்த வேண்டும்.
- துறைசார் நிபுணர்களை அழைத்து ஆலோசிக்க வேண்டும்.
- முஸ்லிம்களின் பிரச்சினையை தீர்க்கும் விடயங்களில் அரசாங்கத்தை வற்புறுத்துமாறு முஸ்லிம் நாடுகளுக்கு வேண்டுகோள் விடுக்கவேண்டும்.
- ஆட்சிக்கு அனுசரணை வழங்குவதற்கு கைம்மாறாக முஸ்லிம்களின் உரிமைகளை மாத்திரம் கேட்டுப் பெறவேண்டும்.

சமாதானப் பேச்சுவார்த்தையில் முஸ்லிம்களைப் பார்வையாளர்களாக மாத்திரமே சேர்த்துக் கொள்ள முடியும் எனக் கரிபூசியதற்குப் பிறகாவது முஸ்லிம்களின் கோரிக்கை இதுதான் என எடுத்துக்காட்ட ஒரு ஆவண வாக்கம் கையில் இருக்க வேண்டும்.



இவை அனைத்தும் கரிசனையுடன் இடம் பெற்றதா என்று ஆராய்ந்து பார்த்தால் பூச்சியம்தான். இப்படிக்கூறியதும் இல்லை அங்கு கூடினோம், இங்கு கூடினோம், வெளிநாட்டில் சுற்றுப்பயணம் செய்தோம் என்று கூறுவார்கள். சரி அப்படியே இவர்களிடம் முஸ்லிம்களின் கோரிக்கை பற்றி ஆவணம் கையில் இருந்தால் கடந்த இரண்டு வருடமாக ஏன் அதனை ஒழித்து வைக்க வேண்டும்? அதனைக்கையில் எடுத்துக் கொண்டு மக்களை இணைத்துக் கொண்டு ஆட்சியின் பங்காளியான நீங்கள் ஏன் அரசுக்கு அழுத்தம் கொடுக்காதிருக்கிறீர்கள்? இப்படிக் கேட்டால் அதுக்கும் ஒரு தலை சுற்றும் விளக்கம் தருவார்கள். இவர்கள் முஸ்லிம்களின் இனப் பிரச்சினை தொடர்பாக உருப்படியான முயற்சிகள் எதனையும் செய்யவும் இல்லை. அவர்களிடம் எமது கோரிக்கை பற்றிய ஆவணம் எதுவும் கையிலுமில்லை. இருந்திருந்தால் அரசிடமும், புலியிடமும் தமது கோரிக்கையை ஆவண வடிவில் முன்வைத்திருப்பார்கள்.

அதுதான்முறை, அவ்வாறு எதுவும் இல்லாததால்தான் "எமக்கு என்ன (பிச்சை) தருவார்கள் என்று புலிகள் கூறட்டும் பிறகு அது பற்றி நாங்கள் சிந்திப்போம்" என குழந்தைத்தனமாகப் பேசி நம்பிய மக்களை கேவலப்படுத்துகிறார்கள்.

-மூதூர் முகம்மதலி ஜின்னா. ஜே.பி.-




முஸ்லிம்குரல் பத்திரிகை நமது மக்களின் இழப்புகளை ஆவணப்படுத்தி, இழப்புகளுக்கு நீதி வேண்டிப் போராடும் பணியை, முஸ்லிம் தேச ஆவணக் காப்பகத்தினூடாக முன்னெடுத்து வருவதை அறிந்திருப்பீர்கள். எமது இந்த முயற்சிக்கு நமது மக்கள் மத்தியிலிருந்து பெருமளவு ஆதரவும், ஆவணங்களும் வந்து சேர்ந்து கொண்டிருக்கின்றன.

இத்தகவல்களை நமது மக்களுக்கு பகிரங்கப்படுத்தும் நோக்கில் மக்கள் பத்திரிகை என்ற வகையில் இத்தொடர் எழுதப்படுகிறது. எமக்கு கிடைத்த விபரங்களின் எண்வரிசைப்படி பட்டியல்படுத்தப்பட்டுள்ளது.

21


ஹயாத்து முகம்மது மீரா லெவ்வை
இல 53, ஸாவியா வீதி,
காத்தான்குடி 01.
பிறந்த திகதி : 30.10.1947
சம்பவம் இடம்பெற்ற திகதியும்
இடமும் : மீரா ஜும்மா பள்ளிவாசல், தாக்குதல் 03.08.1990 மரணம் புலிகளால் நிகழ்த்தப்பட்டுள்ளது.
மரண அத்தாட்சிப் பத்திர இலக்கம் : 5614

22

அப்துல் கரீம் முகம்மது ஜஃபர்,
26/1, மோதினார் லேன்,
காத்தான்குடி 01.
பிறந்த திகதி : 17.06.1974
சம்பவம் இடம்பெற்ற திகதியும் இடமும் : பள்ளிவாசல், தாக்குதல் 03.08.1990 மரணம் புலிகளால் நிகழ்த்தப்பட்டுள்ளது.
மரண அத்தாட்சிப் பத்திர இலக்கம் : 5711

23


கல்லடிப்பிச்சை மர்சூன்,
அல்லை நகர் 5 , தோப்பூர்
பிறந்த திகதி : 01.08.1994
சம்பவம் இடம்பெற்ற திகதியும்
இடமும் : தோப்பூர். 27.04.1997
உடலில் காயங்கள் பயங்கரவாதிகளால் மேற்கொள்ளப்பட்ட ஷெல் வெடியினால்.

24


மக்பூல் நகீம், நெய்தல்நகர்,
மூதூர் 01.
சம்பவம் இடம்பெற்ற திகதியும்
இடமும் : கடற்கரைச்சேனையில் 31.03.2003 இல் விடுதலைப் புலிகளால் கடத்தப்பட்டுள்ளார்.

25


முகம்மது இஸ்மாயில்
அமானுள்ளாஹ்,
34/2, நாகையடி அவுலியா
ஒழுங்கை, காத்தான்குடி 06.
பிறந்த ஆண்டு : 1952
சம்பவம் இடம்பெற்ற திகதியும் இடமும் : குருக்கள் மடம் 12.07.1990 மரணம் புலிகளால் நிகழ்த்தப்பட்டுள்ளது.
மரண அத்தாட்சிப் பத்திர இலக்கம் : 752

26


முஹம்மது இபுறாஹீம்
முஹம்மது பரீட், இரும்பு
தைக்கா வீதி, காத்தான்குடி 06.
பிறந்த திகதி : 30.01.1967
சம்பவம் இடம்பெற்ற திகதியும்
இடமும் : நாவற்குடா 01.01.1988 மரணம் இனந்தெரியாதோரால் நிகழ்த்தப்பட்டுள்ளது.
மரண அத்தாட்சிப் பத்திர இலக்கம் : 1876

27


முஹம்மது இபுறாஹீம்
முகம்மது ரமீஸ்,
இரும்பு தைக்கா வீதி,
காத்தான்குடி 06.
பிறந்த திகதி : 10.07.1968
சம்பவம் இடம்பெற்ற திகதியும்
இடமும் : நாவற்குடா 01.01.1988 மரணம் இனந்தெரியாதோரால் நிகழ்த்தப்பட்டுள்ளது.
மரண அத்தாட்சிப் பத்திர இலக்கம் : 1877

28

முகைதீன் பிச்சை முகம்மட் ஜுனைட்,
53/17, ஸாவியா வீதி, காத்தான்குடி 01.
பிறந்த திகதி : 25.07.1958
சம்பவம் இடம்பெற்ற திகதியும்
இடமும் : மீரா ஜும்மா பள்ளிவாசல், தாக்குதல் 03.08.1990 மரணம் புலிகளால் நிகழ்த்தப்பட்டுள்ளது.
மரண அத்தாட்சிப் பத்திர இலக்கம் : 5705

29

ஆதம்லெப்பை முகம்மட் மக்கீன்,
53/17, ஸாவியா வீதி, காத்தான்குடி 01.
பிறந்த திகதி : 28.04.1977
சம்பவம் இடம்பெற்ற திகதியும்
இடமும் : மீரா ஜும்மா பள்ளிவாசல், தாக்குதல் 03.08.1990 மரணம் புலிகளால் நிகழ்த்தப்பட்டுள்ளது.
மரண அத்தாட்சிப் பத்திர இலக்கம்.: 5641

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முஸ்லிம் குரல்

## வடக்கு முஸ்லிம்கள் சிறப்பிதழ்






பலாத்காரமாக வெளியேற்றப்பட்ட வடமாகாண முஸ்லிம்கள் கடந்த 23ஆந் திகதி கோட்டை ரயில் நிலையத்தின் முன் நடாத்திய எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்



## நான் அகதி இல்லை

நீயும், யாரும்தான் அழைக்க வேண்டாம்
அகதியென்று என்னை.

யுத்தத்தின் நெருப்புக் கால்களென்மீது
ஏறிச்சென்றனவா?

எங்ஙனம் நானகதியாவேன்
அகதியாய்ச் சுருக்கி வலிமையோயச் செய்ததும்
என்னை ஏன்?

தாயகத்தின் மடியிற்றவழ்ந்து
சுதந்திரமாக விரல் சூப்பியவென்னை
பிடரியிற்றள்ளி உதைத்து விரட்டி விட்டார்கள்
ஆக்கிரமிப்பாளர்கள்

என் உம்மாவின் காதுகளில் பூப்பூத்திருந்த
ஒரு சோடி மின்னியை
பிளேட்டால் அறுத்துக் கொய்த கொடூரம்
ஈரலில் எரிந்து இன்னுமணையவில்லை

குமருப்பிள்ளை என் தங்கையின் கழுத்தில்
வானமில்லாமலே மின்னல் வெட்டிய
ஒன்றரைப் பவுண் தங்கச் சங்கிலியை
அறுத்துப் பறித்த புலிக் காடைத்தனம்
என் கண்களுக்குள் பெருங்கோபமாய் முகாமிட்டிருக்கிறது

மூல வியாதியின் நெருப்பு அவதியிலிருந்து
விடுதலை பெறும் இன்ப நாளுக்காய்க் காத்திருந்த
வாப்பாவின்
வைத்திய செலவுத் தொகையை
மாங்குளச் சந்தியில் வைத்து சூறையாடியவர்களின் வெறித்தனம்
உரோமமொவ்வொன்றிலும் சினந்து நிற்கின்றது.

எனக்கு வாழ்வைத் தந்த வடக்கு மண்
எனது நிழலுக்குக் குடைவிரித்துத் தந்த
யாழ்ப்பாண வீடு வாசல்களில்
குந்திக் குடியிருக்கும் உரிமையை
அடித்தும் உதைத்தும் பறித்துக் கொண்டவர்கள்
என்னைத் துரத்தியடித்து விரட்டியும் விட்டிருக்கிறார்கள்.

என்னைப் படைத்த ரப்பின் மீது சத்தியமாக
நான் விரட்டியடிக்கப்பட்டவன்தான்
அழைக்காதீர்கள் யாருமென்னை அகதி என்று.

என் வெளியேற்றப்பட்ட காயங்களின் வயது
பதின் மூன்றைக் கடந்த பருவத்தில் உள்ளது.
இன்னுமதிக வருடங்கள் போயினும்
நோவுகிற என் ரணங்கள் மீது பதிந்திருக்கும்
நம்பிக்கை சற்றேனும் குறையுமென்று மட்டும் நீ
எதிர்பார்த்து விடாதே!

முகாம்களின் நரகல்களுக்குள்தான்
எனது மூச்சை பாதுகாத்து வருகிறேன்
நான் அகதி இல்லை ஆனாலும்

துப்பாக்கி, வெடிகுண்டு, ஏவுகணைகள் சகிதம் வேட்டையாடி
எனது தாயகத்தை வெல்லக் காத்திருக்கின்ற
விரட்டியடிக்கப்பட்டவன் நான்.

- எம்.எல்.எம். அன்ஸார் -

## புத்தளத்திலிருந்து நேரடி ரிப்போர்ட்

### முஸ்லிம் குரல் ஆசிரியர் குழுவினர் ...

### வடக்கு மக்களுக்கு தன் மடி திறந்து வாழ்வளித்த புத்தளம் மண் !



முஸ்லிம்கள் புலிகளால் வெளியேற்றப்பட்டபோது அபயம் தந்து வாழ்வளித்த மண்தான் புத்தளம் மண்- பல்வேறுபட்ட வளக் குறைபாடுகளுக்கு மத்தியில் வாழும் புத்தள முஸ்லிம்கள் - தங்கள் மனங்களை விசாலமாக்கி மேலும் 85 ஆயிரம் முஸ்லிம்களுக்கு தங்களுடைய வாழ்வை பங்குபோட்டுக் கொடுத்துள்ளனர் - இந்த முன்மாதிரியை இலங்கை வாழ் முஸ்லிம்களில் எந்த மாவட்டத்து மக்களும் இதுவரை காட்டவில்லை

ஒருநாளா? இரண்டுநாளா? 13 வருடங்கள் தனது மடியைத்திறந்து நமது மக்களை அரவணைத்து வைத்திருக் கிறாள் புத்தளத்து அன்னை. அவள் இன்னும் வடக்கு முஸ்லிம்களைப் பார்த்து சீ என்று சொல்லவில்லை - வாழும் காலமெல்லாம் வாழ்ந்து விட்டுப் போங்கள் என்பதே அவளது விருப்பமாக உள்ளது.

அவலங்களும் - அதிலிருந்து மீள முடியாத தோல்விகளுமான துன்பம் நிறைந்த வாழ்க்கை வடக்கு முஸ்லிம்களின் தலைவிதியாய் மாறி நிற்கிறது. 13 வருடங்கள் - சராசரி மனித வாழ்வில் நான்கில் ஒரு பகுதியை விரட்டியடிக்கப்பட்ட அகதி வாழ்வு சுவீகரித்துக் கொண்டுள்ளது.

அன்பு, கருணை, ஈகை, சகோதரத்துவம், கொண்ட நமது சன்மார்க்க வாழ்வின் அடிப்படைகளை நிரூபிப்பதற்கான எதிர்பார்ப்புகள் நிறைந்த ஆயிரக்கணக்கான மனிதாத்மாக்கள், புத்தளம் மாவட்டத்தின் அகதி முகாம்களிலும், அபயம் தரும் நிழல்களிலும் காத்திருக்கின்றனர்.

இந்தத் துன்பமிகு காத்திருப்பு 13 வருடங்களை முடித்து 14 வது வருடத்தினுள் காலடி எடுத்து வைத்துள்ளது. இவ்வாழ்வு இன்னும் எத்தனை வருடங்கள் தொடருமோ படைத்த இறைவனுக்கே தெரியும்!

கல்நெஞ்சையும் கரையை வைத்துவிடும் இந்த அவலம் நிறைந்த வாழ்வை நமது மக்களுக்கு பரிசாகத்தந்தவர்கள் புலிகள். நம்மை தொடர்ந்தும் அடக்கி வரும் ஆதிக்க சக்திகள்.

வடக்கு முஸ்லிம்களின் வாழ்வு எப்படி இருக்கிறது? ஓலைக் கொட்டில்களுள் சுருங்கிய வாழ்வு. பசியாற உண்பதற்கு உணவு இல்லை - உடுக்க உடையில்லை குடிநீர்வசதி இல்லை, மலசலகூடவசதி இல்லை. அடிப்படைத் தேவைகள் கூட நிறைவேற்றப்படாத, முடியாத மோசமான வாழ்வு.

இளம் சிறார்களுக்கு ஆரம்பக் கல்வி இல்லை. உயர் கல்வி கற்பதற்கான வாய்ப்பின்மை, வசதியின்மை வருமானத்திற்கான தொழிலில்லை, இருந்தாற் போல் கிடைக்கும் கூலி வேலைகள். எஞ்சிய நாட்களில் வேதனை! வேதனை!!

புத்தளம் மாவட்டத்தில் மாத்திரம் 87 ஆயிரத்திற்கும் மேற்பட்ட வடக்கு மண்ணிலிருந்து துரத்தியடிக்கப்பட்ட முஸ்லிம் மக்கள் வாழ்கின்றனர். நீர்கொழும்பு, கொழும்பு மற்றும் நாட்டின் பல்வேறு பிரதேசங்களிலும் வடக்கிலிருந்து விரட்டியடிக்கப்பட்ட மக்களின் வாழ்வு துன்பத்தினுள் உழன்று கொண்டிருக்கின்றது.


இந்த மக்களுக்கு நமது அரசியல் தலைமைகள் ஆற்றிய பணியானது மிகமிகச் சொற்பமே. மக்கள் தேவை அளவுகள், அது நிவர்த்திக்கப்பட்ட விகிதாசாரத்தை பார்க்குமிடத்து அரசியல் தலைமைகளை விட அரச சார்பற்ற நிறுவனங்களும் தனி நபர்களுமே அதிகமான உதவிகளைச் செய்துள்ளனர் இம்மக்களுக்கு.

ஒவ்வொரு தேர்தலிலும் நமது அரசியல்வாதிகள் இந்த முகாம்களை முற்றுகையிடுகின்றன. ஆனால் தேர்தல் முடிந்த பின் நிலைமை வேறு விதமாக உள்ளதை நேரடியாக மக்களின் மன உணர்வுகளை கண்டு உரையாடும் போது புரிந்து கொள்ளக் கூடியதாகவுள்ளது.

இந்தப் புனித ரமழான் தினத்தில் நமது வடக்கு "முஸ்லிம்களின் துயர்களை - அவர்களின் உளக் குமுறல்களை மக்களுக்குத் தெரியப்படுத்துவது எமது கடமையாகும். இம்மக்களின் வாழ்வில் ஒளிக்கீற்றை ஏற்படுத்துவதற்கும் இம்மக்களுக்கு நீதி கிடைப்பதற்கும், நாமனைவரும் பங்காற்ற வேண்டியுள்ளது.

வடக்கு மண்ணிலிருந்து இம்மக்களிடம் புலிகள் 75 கோடி ரூபா பெறுமதியான சொத்துக்களை பறிமுதல் செய்து சூறையாடியுள்ளனர். இவைகளுக்கு உரிய நஷ்ட ஈட்டை புலிகள் வழங்க வேண்டும்! வடக்கு மீதான முஸ்லிம்களின் தாயக உரிமத்தை புலிகள் ஏற்க வேண்டும்.

"வடக்கும் எங்கள் தாயகமே" என ஒலிக்கும் இம்மக்களின் குரல் மீள மீள ஒலிக்கிறது. தமது வாழ்வும் மரணமும் வடக்கு மண்ணில், தங்களது சொந்தத் தாயகத்தில் தான் என நம்பும் இவர்களின் கனவு மெய்ப்பட நமது அரசியல் தலைமைகள், சமூக சக்திகள் உழைக்க வேண்டும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிகளினால் விரட்டியடிக்கப்பட்ட வடக்கு முஸ்லிம்கள் / புத்தள மாவட்டம்

## புத்தளம் பிரதேச செயலாளர் பிரிவு

| இல. | கிராமத்தின் பெயர் | குடும்ப எண்ணிக்கை |
|---|---|---|
| 01. | நாகவில்லு | 715 |
| 02. | றசூல் நகர் | 55 |
| 03. | பாலவி பரீதா பாத் | 60 |
| 04. | மலீகா புரம் | 104 |
| 05. | பாலவி செம்பமடு | 37 |
| 06. | பாலவி மதீனா புரம் | 34 |
| 07. | பாலவி ஷாபி நகர் | 50 |
| 08. | பாலவி ஹிஜ்ரா புரம் | 122 |
| 09. | ரத்மல்யாயா | 310 |
| 10. | வை.எம்.எம்.ஏ. நகர் | 47 |
| 11. | அரபா நகர் | 82 |
| 12. | தில்லையடி ஜித்தா புரம் | 122 |
| 13. | தில்லையடி உம்ராபாத் | 105 |
| 14. | தில்லையடி சதாமியா புரம் | 117 |
| 15. | தில்லையடி அக்ஷா | 38 |
| 16. | தில்லையடி அல்-மினா | 55 |
| 17. | தில்லையடி பீ | 30 |
| 18. | தில்லையடி ஈ | 26 |
| 19. | தில்லையடி எப் | 23 |
| 20. | அனைபிள்ளையூத்து | 110 |
| 21. | நிந்தானி | 76 |
| 22. | முல்லை நகர் | 70 |
| 23. | றகுமாபாத் | 15 |
| 24. | மதீனா நகர் | 102 |
| 25. | வேப்பமடு | 330 |
| மொத்தம் | | 2835 |

## வனாத்தவில்லு பிரதேச செயலாளர் பிரிவு

| | | |
|---|---|---|
| 01. | புதிய சிட்னி | 128 |
| 02. | முஜாஹிதீன் புரம் | 106 |
| 03. | நூஹ்நகர் | 25 |
| 04. | சலாமாபாத் | 78 |
| 05. | ஐ.ஐ.ஆர்.ஓ. | 65 |
| 06. | காரைதீவு | 33 |
| 07. | எழுவான் குளம் பழையது | 116 |
| 08. | எழுவான் குளம் புதியது | 176 |
| 09. | எழுவான் குளம் இரால்மடு | 111 |
| மொத்தம் | | 838 |

## கற்பிட்டிய பிரதேச செயலாளர் பிரிவு

| | | |
|---|---|---|
| 01. | ஹுஸைனிய்யாபுரம் | 451 |
| 02. | கரம்பவத்த | 125 |
| 03. | பூலாச்சேனை | 40 |
| 04. | குறுவங்குடி | 20 |
| 05. | கல்பீலை ஏ அன்ட் டீ | 150 |
| 06. | ஹாஜராவத்த | 91 |
| 07. | நுரைச்சோலை | 52 |
| 08. | கொய்யாவடி அறபா நகர் | 282 |
| 09. | கொய்யாவடி அல்-அரபா | 19 |
| 10. | கொய்யாவடி அல்-மினா | 88 |
| 11. | கொய்யாவடி அல்-ஹிஜ்ரா | 83 |
| 12. | கொய்யாவடி அல்-ஹிரா | 47 |
| 13. | சாஜிதாவத்தை | 68 |
| 14. | மன்னார் வத்தை | 61 |
| 15. | கல்முனைக் குடி ஏ அன்ட் வி | 146 |
| 16. | ஆலங்குடா சரயியா | 40 |
| 17. | ஆலங்குடா மதீனா | 46 |
| 18. | ஆலங்குடா தாருஸ்ஸலாம் | 40 |
| 19. | ஆலங்குடா அல்-ஜின்னா | 55 |
| 20. | ஆலங்குடா ஜின்னா புரம் | 51 |
| 21. | ஆலங்குடா அல்-மனார் | 45 |
| 22. | ஆலங்குடா அகத்திமுறிப்பு | 49 |
| 23. | அண்டங்கேனி (தாயூப் நகர்) | 125 |
| 24. | திகாலி இஸ்லாமாபாத் | 60 |
| 25. | திகாலி மாவடித்தோட்டம் | 30 |
| 26. | திகாலி குறுஞ்சிமுட்டை | 39 |
| 27. | கண்டகுடா | 43 |
| 28. | பள்ளிவாசல்துறை அல்-ஹம்ரா | 120 |
| 29. | பள்ளிவாசல்துறை தெம்பிலிவத்த | 81 |
| 30. | பள்ளிவாசல்துறை டிஸ்சன்ட் | 23 |
| 31. | பள்ளிவாசல்துறை ட்ராண்ஸ்போமர் | 31 |
| 32. | பள்ளிவாசல்துறை சம்மட்டிவார் | 77 |
| 33. | பள்ளிவாசல்துறை புதிய சப்னா | 53 |
| 34. | பள்ளிவாசல்துறை ஜின்னா | 40 |
| 35. | கண்டகுளி புதுவாடி | 45 |
| 36. | கண்டகுளி குளங்குளம் ஏ அன்ட் - | 152 |
| 37. | கண்டகுளி முசாலி | 45 |
| 38. | கண்டகுளி தாலையடி | 30 |
| 39. | ிங்க புரம் | 40 |
| 40. | மிஹ்ராஜ் புரம் | 80 |
| 41. | தலைமன்னார் புரம் | 250 |
| 42. | அபத்தோலி முல்லை | 42 |
| மொத்தம் | | 3455 |

## முந்தல் பிரதேச செயலாளர் பிரிவு

| | | |
|---|---|---|
| 01. | புதுக்குடியிருப்பு | 100 |
| 02. | அக்கரவெளி | 45 |
| 03. | ரீமா புரம் | 55 |
| 04. | ஹ்மத் புரம் | 51 |
| 05. | ியா புரம் | 24 |
| 06. | அன்புற்று | 22 |
| 07. | மண்செடிச்சோலை | 10 |
| மொத்தம் | | 337 |
| முழு மொத்தம் | | 7465 |

தகவல் : Community Trust Fund, Putalam

**நேர்காணல்கள்:**



ஜனாப் பதுருதீன்

## எமது மக்களுக்கு எந்த வழியுமில்லை

மன்னார் எருக்கலம் பிட்டியைச் சேர்ந்த நான் தற்போது கரம்பையில் உள்ள சபா மர்வா முகாமில் வசித்து வருகின்றேன். இங்கு கரம்பையில் 5 முகாம்கள் இருக்கின்றன. தொள்ளாயிரத்துச் சொச்சம் குடும்பங்கள் வசிக்கின்றன. எங்களுக்கு இங்கு எந்த வேலை வாய்ப்பும் கிடையாது. உலர் உணவு நிவாரணத்தை நம்பியே வாழ்ந்து வருகின்றோம். 5பேருக்கு குறைந்தவர்களுக்கு ரூபா 800உம் 5 பேருக்கு மேட்பட்டோருக்கு ரூபா 1200உம் வழங்கப்படுகின்றன. 5 வருடங்களாக இத்தொகையே கிடைக்கின்றது. இன்றைய நிலையில் இத்தொகை மூன்று நான்கு நாட்களுக்கே போதுமானது. இதுவும் மாதாமாதம் ஒழுங்காக வழங்கப்படுவதில்லை.இந்த வருடத்திலே 7 மாதத்திற்கான உலர் உணவே வழங்கப்பட்டிருக்கின்றது. இன்னும் 3 மாதம் மிகுதி இருக்கிறது. எங்களுக்கு ஏற்பட்ட துன்பம் யாருக்குமே ஏற்பட்டு விடக் கூடாது.

- ஜனாப் அப்துல் மஜீத் -

## போராடத்தான் வேண்டும்!



நீங்கள் மௌலவியா?
ஆம். நான் மௌலவி.

நீங்கள் வெளியேற்றப்பட்டதன் பின்னரா மத்ரஸாவில் சேர்ந்தீர்கள்?
இல்லை. வெளியேற்றப்படுவதற்கு முன்னரே நான் மத்ரஸாவில் சேர்ந்து விட்டேன்.

சமாதானம் வந்ததன் பின் மீண்டும் உங்களுடைய ஊருக்குப் போவதற்கு எத்தனிக்கவில்லையா?
ஒரு முறை நான் போய்ப் பார்த்து விட்டு வந்தேன். அங்கு எல்லாம் காடாக ஒரு வீடு இருந்ததற்கான தடயம் கூட இல்லாமல் இருந்தது. அதைப் பார்த்த போது எனக்கு மிகவும் மனவருத்தமாக இருந்தது. மிகவும் கஷ்டப்பட்டு ஒற்றையடிப்பாதையினூடாக சென்றே போய்ப் பார்க்கக் கூடியதாக இருந்தது.

அதற்குப் பிறகு?
சந்தர்ப்பம் கிடைக்கவும் இல்லை போகவும் இல்லை

மீண்டும் அங்கு போய்க் குடியமர்வதற்கான யோசனைகள் இருக்கிறதா?
இன்ஷா அல்லாஹ் நிச்சயம் போவோம். அந்த விடயத்தில் உறுதியாக இருக்கிறோம். அதற்கான சரியான திட்டங்களும் சூழ்நிலையும் ஏற்படும் போது மீண்டும் போவோம்.

ஒரு சிலர் போய் இருக்கிறார்கள்தானே?
ஆம் போனவர்களில் சிலர் விவசாயம் செய்து கொண்டிருக்கிறார்கள். இன்னும் சிலர் கடற்றொழில் செய்து கொண்டிருக்கிறார்கள்.

ஏன்? நீங்கள் போகாமல் இருப்பதற்கான காரணம் என்ன?
தற்போதைய நிலைமையில் அங்கு எங்களுக்கு தொழில் செய்யக் கூடிய அளவிற்கு ஒன்றுமில்லை. எல்லாம் காடாக கிடக்கிறது. நடமாடுவதற்கு சரியான பாதை கூட அங்கு இல்லை! ஒரு ஒழுங்கான அமைப்பொன்று வருமானால் அங்கு போவது உசிதமாக இருக்கும்.

பெண்கள் சிறுவர்கள் என்ன செய்கிறார்கள்? உங்களுடைய பிரதான தொழில் என்ன?
இங்கே படித்தவர்கள் குறைவு. தோட்டம், கஜு, மற்றும் உப்பு வேலை போன்ற கூலி வேலைகளையே நாம் செய்து கொண்டிருக்கிறோம்.

கைத்தொழில்களினால் சராசரி ஒரு நாளைக்கு எத்தனை ரூபாய் சம்பளம் கிடைக்கும்?
சம்பளம் பல மாதிரி இருக்கும். மற்றது தொடர்ந்தும் வேலை கிடையாது. உப்பு போன்ற வேலைகளை மாரி காலத்தில் நினைத்தும் பார்க்க முடியாது.

உங்களுடைய நிலத்தைப் போராடித்தான் பெற வேண்டி வந்தால் அதற்கு நீங்கள் தயாரா?
ஆம் சரியான போராட்டத்தலைமை வந்தால் அதற்கு நாம் தயார். மாத்திரமன்றி அண்மையில் புறக்கோட்டையில் நடந்த விரட்டப்பட்ட வட மாகாண முஸ்லிம் மக்களின் ஆர்ப்பாட்டப் பேரணியில் இங்கிருந்து நாம் நிறையப் பேர் கலந்து கொண்டோம்.

## எங்கள் வாழ்வு இப்படியாகிவிட்டது!

உங்களுடைய பெயர்?
றஹ்மத்

எத்தனை வயதாக இருக்கும் போது நீங்கள் வெளியேற்றப்பட்டீர்கள்?
எட்டு வயது



இப்போது எத்தனையாம் ஆண்டில் கல்வி கற்கிறீர்கள்?
ஏ. எல் கலைப்பிரிவில் கல்வி கற்கிறேன்.

இவ்வளவு கஷ்டம் வந்தும் கல்வியைத் தொடரும் நீங்கள் எதிர்காலத்தில் என்ன ஆக வேண்டும் என நினைக்கிறீர்கள்.
ஒரு சட்டத்தரணியாக வரவேண்டும் என்று

இங்கு இருக்கின்ற பிள்ளைகளின் கல்வி மட்டங்கள் எந்தளவில் இருக்கின்றன?
இந்த முகாமில் நானும் ஒரு சகோதரியும்தான் உயர்தரம் வரை படிக்கிறோம். ஏனைய மாணவர்கள் வறுமை காரணமாக ஆண்களும் பெண்களும் இடை நடுவிலேயே கல்வியை விட வேண்டிய துர்ப்பாக்கிய நிலை காணப்படுகிறது.

நீங்கள் வெளி வகுப்புகளுக்குச் செல்கிறீர்களா? இலவசமாகவா அல்லது பணம் செலுத்தியா?
வெளிவகுப்புக்குச் செல்கிறேன். பணம் செலுத்தித்தான்.

உங்களுடைய சகோதரன்மார் உங்களுக்கு உதவி செய்வார்களா?
அவருடைய குடும்பத்தைக் காப்பாற்றுவதற்கே அவருக்கு போதுமான தொழில் இல்லாமல் இருக்கும் போது எவ்வாறு அவருடைய உதவியை நாங்கள் எதிர்பார்ப்பது.

CTF
நிறுவனத்தில் பணிபுரியும்
ஜனாப். குவைஸ்

## ஆயிரமாயிரம் பிரச்சினைகளுடன் வாழ்கிறோம்!



*நீங்கள் எந்தெந்தத் தளங் களில் வேலை செய்கிறீர்கள்?*
எங்களுடைய நிறுவனத்தைப் பொறுத்தவரையில் பல்வேறு தளங்களில் வேலை செய்கிறோம். குறிப்பாக சமாதானம், அடிப்படை மனித உரிமைகளின் செயற்பாடுகளில் கூடுதலாக கவனம் செலுத்துகிறோம். சமாதான வேலைத்திட்டம் எனும் போது இடம்பெயர்ந்த மக்களுக்கும் உள்ளூர் மக்களுக்கும் இடையிலான பிணக்குகளுக்கு தீர்வு காணுதல் இனங்களிடையே நம்பிக்கையை கட்டி எழுப்புதல் போன்ற பணிகளில் ஈடுபடுகிறோம்.

*உள்ளூர் மக்களுக்கும் இடம் பெயர்ந்த மக்களுக்கும் இடையில் ஏற்படும் முரண்பாடுகள் எவ்வாறு எதிர்கொள்ளப்படுகின்றன?*
அவ்வாறான சந்தர்ப்பங்களில் சிறுசிறு வாய்த்தர்க்கங்கள், கைகலப்புகள் வந்துள்ளன. இச் சந்தர்ப்பத்தில் இரு தரப்பிலும் உள்ள பிரதிநிதிகள், அமைப்புக்களை சந்திக்கச் செய்து சுமுகமான நிலைக்கு கொண்டு வருவோம். இடம்பெயர்ந்த மக்களின் அடிப்படை உரிமைகளுக்காக நீதி மன்றங்களுக்குச் சென்று வாதாடி வருகிறோம்.

இங்கு உள்ளூர் மக்களுக்கும் இடம் பெயர்ந்து வந்துள்ள மக்களுக்கும் இடையில் வளங்களைப் பகிர்ந்து கொள்வதில் பெருமளவு பிரச்சினைகள் எழுகின்றன. உதாரணம் கல்வி வாய்ப்பு, சுகாதாரம் போன்ற துறைகளில் மிக மோசமான நெருக்கடியை எதிர்நோக்குகிறோம். கற்பிணித் தாய்மார்களுக்கு திரிபோசா மா புத்தளம் சொந்த மாவட்ட மக்களுக்கே வழங்கப்படுகிறது. இடம்பெயர்ந்த கற்பிணித்தாய்க்கு திரிபோசாமா வழங்குவதாக இருந்தால் புத்தள மாவட்ட மக்களின் பங்கிலே வழங்கப்படவேண்டும். இந்த அளவு சிறிய பிரச்சினை கூட அரசாங்கத்தால் தீர்க்கப்படவில்லையானால் நிலைமையைப் பாருங்கள் ●

*சொந்த மண்ணை இழந்து*
*சோகத்திலே வாழும் முஸ்லிம்களே உங்களுக்கு*
*உணர்வில்லையா*
*வெந்த புண்ணில் விசத்தை*
*பாய்ச்சிகின்ற புலியை வந்தவழி*
*விரட்ட துணிவில்லையா?*
*புலி சுற்றிச் சுற்றி வருதே தெரியலையா?*
*சொத்தை அள்ளி அள்ளிச் சென்றதே*
*நினைவில்லையா?*
*(சொந்தமண்ணை)*

*ஓயாத கொடுமையில் போர் வெடிக்கும்*
*போருக்குள் அகப்பட்டு உயிர் துடிக்கும்*
*முஸ்லிம் இளைஞரே துணிந்து விட்டாலே*
*போருக்கு முடிவு வரும்*
*துணிவோம் துணிவோம் வாருங்களே*
*இணைந்தே துணிவோம் வாருங்களே*

*(சொந்தமண்ணை)*

*பள்ளிகள், வீடுகள் எனப் பார்க்காமல்*
*பாவிகள் கைகளாலே உடைத்து விட்டார்*



*தாயின் மனம் வெந்துப் போச்சி*
*தந்தை மனம் வெந்துப் போச்சி*
*உள்ளம் எல்லாம் எரிகிறதே*
*துணிவோம் துணிவோம் வாருங்களே*

*(சொந்தமண்ணை)*

*எம்.என். நிப்யா,*
*தில்லையடி முஸ்லிம் மகா வித்தியாலயம்*
*புத்தளம்.*

## அரசியல்வாதிகளை நம்பி பலனில்லை!

*உங்களுடைய பெயர் என்ன?*
மார்சூக் நஸீபா

*சொந்த இடம்*
மன்னார் மாவட்டம்

*பெண்களுடைய நிலமை இங்கு எவ்வாறிருக்கிறது?*
ஊரில் வெளியேவராத பெண்கள் இன்று 6 K.M.க்கு அப்பால் உள்ள நாகக் காடு என்னும் இடத்திற்குப் போய் 130 ரூபாவிற்கு கொடும் வெயிலில் தொழில் செய்ய வேண்டியவர்களாக இருக்கிறார்கள். அதுவும் பஸ் கண்டக்டர்மார் ஆடு மாட்டை ஏற்றுவது போல் அவர்களை பஸ்ஸில் அடைத்து ஏற்றிச் செல்கின்றனர். அதுவுமில்லாமல் இந்தக் காணிக்காக கோட் வாசலையே காணாத மன்னார் முஸ்லிம் பெண்கள் சுமார் 350 பேர் இன்று இக்காணி விவகாரத்தில் கோட்டில் அலைமோத வேண்டிய துர்ப்பாக்கிய நிலை காணப்படுகிறது.

*இது விடயத்தில் அரசியல்வாதிகள் என்ன சொல்கிறார்கள்?*
அரசியல்வாதிகள், எம்.பிக்கள் நாங்கள் உங்களுக்கு இக்காணிக்கான உறுதி எடுத்துத் தருகிறோம் இந்த வழக்கை வென்று தருகிறோம் என்று சொல்கிறார்களே ஒழிய ஒன்றும் அந்த வழக்கு தீர்ந்த பாடில்லை. வாயிதா - வாயிதா - வாயிதா- என்று பின்னுக்குப் போய்க் கொண்டிருக்கிறது.

*இந்தக் காணிக்கு நீங்கள் காசு கொடுத்தீர்களா?*
இல்லை. நாங்கள் முன்னர் பல முகாம்களிலும் சிதறி வாழ்ந்தோம். 1995ம் ஆண்டு அபூபக்கர் எம். பி. எங்கள் எல்லோரையும் ஒரிடத்தில் குடியமர்த்துவதற்காக எங்களை இங்கு குடியமர்த்தினார்.

*இந்த முகாமின் பெயர் என்ன?*
சபா மர்வா கரம்பை.

*எத்தனை குடும்பங்கள் இருக்கி ன்றன?*
350 குடும்பங்கள்.

*சிறுவர்களுடைய கல்வி. பாடசாலை அதன் நிலைப்பாடு பற்றி!*
பாடசாலை இங்கு கரம்பைக்குள் இல்லை. உலுப்பைக்குளம் என்ற இடத்தில் இருக்கிறது. அதுவும் ஆசிரியர் பற்றாக் குறையாய் இருக்கிறது.

*அந்தப் பாடசாலை எவ்வளவு தூரத்தில் இருக்கிறது?*
இங்கிருந்து 1/2 KM நடைவைத்தூரத்தில் இருக்கிறது.

*உலர் உணவுகள் உங்களுக்கு உரிய முறையில் கிடைக்கிறதா?*
உலர் உணவைப் பொறுத்தவரையில் காலந் தாழ்த்தியே கிடைக்கிறது. உதாரணமாக 5ஆம் மாதத்திற்குரியது 7ஆம் மாதமே கிடைக்கிறது.



*உலர் உணவு தரமானதாக இருக்கிறதா? அரிசி, மா. போன்றவை தருகிறார் களா. அல்லது காசு தருகி றார்களா?*
இல்லை. அரிசி போன்றவையே தருகிறார்கள்?

*நல்ல அரிசி வகைகளா அல்லது....?*
இனி கூட்டுறவுச்சங்கத்துக்கு எந்த அரிசி "கல்பீக்கிறதோ" அந்த அரிசுதான் நமக்கும். நல்ல அரிசி என்றும் சொல்ல இயலாது கெட்டதென்றும் சொல்ல இயலாது.

*பெண்களின் அடிப்படை வசதிகள் மற்றும் கிணறு மலசல கூடம் என்பன எல்லாம் அமைக்கப்பட்டி ருக்கிறதா?*
இங்கு மலசல கூடம் கிணறு போன்றன இருந்தாலும் கூட 10 பேச்சஸ் காணிதான் ஒராளுக்குரியது. அத ற்குள்ளே வயதுக்கு வந்த இரண்டு பிள்ளைகள் இருந் தால், அந்தப் பிள்ளையும் கூட அதே காணித் துண்டுக் குள்த் தான் தனது ஜீவனோபாயத்தை நடத்த வேண்டி இருக்கிறது. 10 பேச்சஸ் ற்குள் 3,4 குடும்பங்கள் இருக்கும் போது பிரச்சினைகள் வருவது தவிர்க்க முடியாதது.

தொகுப்பு: நௌசாத்

## வெளியேற்றப்பட்ட வட மாகாண முஸ்லிம்கள் - புத்தளம் மாவட்டம்

| | பிரதேசச் செயலாளர் பிரிவு | வீதம் % | குடும்பங்கள் | நபர்கள் | தற்காலிக குடியேறிய கிராமம் | நலன்புரி நிலையம் | ஆழ் கிணறு | குழாய் கிணறு | மல கூடம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01. | கற்பிட்டிய | 50% | 8,500 | 43,500 | 45 | 32 | 170 | 340 | 850 |
| 02. | புத்தளம் | 30% | 5,100 | 26,100 | 16 | 10 | 102 | 204 | 510 |
| 03. | முந்தல் | 12% | 2,040 | 10,440 | 12 | 15 | 41 | 82 | 204. |
| 04. | வனாதவில்லு | 8% | 1,360 | 6,960 | 10 | 3 | 27 | 54 | 136 |
| | | 100% | 17,000 | 87,000 | 83 | 60 | 340 | 680 | 1,700 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்ரேலுக்கு சிரியா அச்சுறுத்தல்

இஸ்ரேல் தனது எல்லைக்குள் மீண்டும் ஒரு தாக்குதலை மேற்கொண்டால். கோலான் மேட்டுப் பகுதியில் உள்ள இஸ்ரேலிய குடியேற்றங்கள் மீது தான் தாக்கப்போவதாக சிரியா அச்சுறுத்தியுள்ளது.

டமஸ்கானுக்கு அருகில் இம்மாதத் தொடக்கத்தில் பயங்கரவாதிகளின் பயிற்சி முகாம் எனச் சந்தேகிக்கப்பட்ட ஓர் இடம் மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்தியது. பதட்டம் அதிகரிக்கக்கூடிய நிலை ஏற்படும் விதத்தில் சிரியாவின் வெளிநாட்டமைச்சர் பாருக் சஆராவின் எச்சரிக்கை அமைந்துள்ளது. மீண்டும் தாக்கப்பட்டால் சிரியா தனது மாற்று நடவடிக்கையைக் கையாள நேரிடும் என அவர் இஸ்ரேலை மேலும் எச்சரித்தார்.

டெலிகிராபுடன் நடத்திய ஒரு செவ்வியின் போது அமைச்சர் சஆரா விடுத்த அச்சுறுத்தல் 1967ம் ஆண்டு தன்னிடம் இருந்து இஸ்ரேல் கைப்பற்றிய பகுதியை மீண்டும் சிரியா தாக்கும் நிலையினை ஏற்படுத்தப்போகிறது.

அமெரிக்கத் துருப்புகளைத் தாக்குவதற்காக விடுதலைப்போராளிகள் எல்லைப்புறத்தினூடாக ஈராக்கிற்குச் செல்வதைத் தடுக்கத் தன்னால் முடியாது என வெளிநாட்டமைச்சர் மேலும் கூறியுள்ளார். "அவர்கள் மிகவும் உறுதியாகத் தீர்மானித்திருக்கிறார்கள். பலருக்கு அமெரிக்க தாக்குதலைக் காணும் ஆர்வம் உள்ளது.

இஸ்ரேல் 20 ஆண்டு காலமாக எம்பிரதேசங்களில் ஊடுருவி உள்ளமை எமக்குக் கடும் சினத்தை ஏற்படுத்தியுள்ளது. சிரியா ஆட்சியினர் சமாதானத்தை விரும்பிய போதிலும் நாட்டு மக்கள் பதிலடி கொடுப்பதையே விரும்புகின்றனர்.

இஸ்ரேலின் தாக்குதலைத் தொடர்ந்து. இஸ்ரேலியத் துறைமுக நகரான ஹைபாவில் பலஸ்தீனியத் தற்கொலைப்படையினர் ஒருவரால் உணவுச் சாலையில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் விளைவாக 19 பேர் கொல்லப்பட்டனர்.

எம்மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலைத் தொடர்ந்து நாம் மிகவும் பொறுப்பான முறையில் நடந்து கொண்டதுடன் நாம் ஐக்கிய நாடுகள் சபைக்குச் சென்று முறையிட்டதுடன் எமது மக்களில் பெரும்பான்மையினரும் அந் நடவடிக்கையினை ஆதரித்தனர். சஆரா மேலும் கூறினார். ஆயினும் எம்மீது மீண்டும் தாக்குதல் நடத்தப்பட்டால் எமது மக்கள் சகிக்க மாட்டார்கள். அச்சமயம் நம் மக்களின் கருத்துக்களுக்கு மதிப்பு அளிக்க வேண்டிய நிலை ஏற்படும்.

எம்மிடம் பல தெரிவுகள் உள்ளன. கோலானில் இஸ்ரேலியக் குடியிருப்புக்கள் பல உள்ளன என்பதை மறக்க வேண்டாம். நான் விடயத்தை மிகைப்படுத்திக் கூறவில்லை. நடக்கக்கூடிய வாய்ப்புகள் உள்ளன. என்பதையே சுட்டிக்காட்டுகின்றேன்.

மேலத்தேய இராஜதந்திரி ஒருவர் கூறினார் "கோலான் குடியிருப்புக்கள் மீது தாக்குவதன் மூலம் அல்லது தென் லெபனானில் உள்ள ஹிஸ்புல்லா கெரில்லாக்களை மீளத் தூண்டுவதன் மூலம் சிரியா இஸ்ரேலின் மற்றொரு தாக்குதலுக்குப் பதிலடி கொடுக்கலாம் அத்தகைய பதில் தாக்குதல் அபாயகரமானதாக இருக்கலாம்.

இஸ்ரேல் கோலான் குன்றுகளை சிரியாவிடம் இருந்து 1967ம் ஆண்டு கைப்பற்றியதுடன், சிரியா அப்பகுதியை ஒரு தளமாகப்பயன்படுத்தி இஸ்ரேல் தாக்கியது என்ற குற்றச்சாட்டின் பேரில் 1981ம் ஆண்டில் அதனைத் தனது நாட்டுடன் இணைத்துக் கொண்டது. கோலானிலும். ஹேர்மெஸ் மலையின் தாழ்ந்த பகுதிகளிலும் 14000 க்கும் மேற்பட்ட யூதர்கள் வாழ்கின்றனர்.

சிரியாவுக்கு எதிராக ஏற்கனவே அமெரிக்கா. இராஜதந்திர மட்டத்திலும். நிதி நடவடிக்கைகள் மூலமாகவும் கடுமையான நடவடிக்கைகளை ஏற்கனவே திட்டமிட்டிருக்கிறது.



அமைச்சர். ஷஆரா

பின்வருமாறும் கூறியதன் மூலம் அமெரிக்காவின் மேலதிக விமர்சனங்களையும் பெறும் நிலை ஏற்படலாம்.

"சிரியாவுக்கு ஈராக்குடனான எல்லைகளைக் கட்டுப்படுத்தமுடியாது. அத்துடன் பலஸ்தீனர்களும், ஈராக்கியர்களும் , சிரியர்களும் அமெரிக்கப் படைகளுக்கு எதிராகப் போரிட முன் செல்வதைச் சிரியாவால் தடுக்க முடியாது".

"எம்மால் முடிந்ததை நாம் செய்கிறோம். நாம் எமது சோதனைச் சாவடிகளில் அதிக கவனஞ் செலுத்தியுள்ளோம். அத்துடன் மக்களைத் திருப்பியனுப்புகிறோம், எனினும் எல்லைப் பகுதி மிக நீண்டதாகையால் முழுப்பகுதியையும் எம்மால் கண்காணிக்க முடியாது.

மிகச் செல்வந்த, சக்தி மிக்க நாடான அமெரிக்காவுக்கே மெக்ஸிக்கோவில் இருந்து மக்கள், ஐ. அமெரிக்காவில் நுழைவதைத் தடுக்க முயற்சிக்க முடியவில்லையெனின். எம்மைப் போன்ற ஒரு வறிய நாட்டினால் பாலஸ்தீனியர்கள் ஈராக்கில் நுழைவதை எவ்வாறு கட்டுப் படுத்த முடியும்?

ஜனாதிபதி பஷார் அஸாத்தின் அரசாங்கம். இஸ்லாமிய ஜிஹாத். ஹாமாஸ் பலஸ்தீன விடுதலை அமைப்பின் முன்னணி என்பவற்றின் முகாம்களை மூடியுள்ளதாக அவர் வலியுறுத்திக் கூறினார். இது பின்னர் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

மேலைத்தேய இராஜ தந்திரி ஒருவர் கூறினார்: எவ்வாறெனினும் அலுவலகங்கள் மூடப்பட்டுள்ளன என்பதனால் இயக்கத்தின் செயற்பாடுகள் நிறுத்தப்பட்டுள்ளன என்று அர்த்தமன்று. வேறெங்கும் இடம் மாறிச் செயற்பட முடியும். அத்துடன் கையடக்கத் தொலைபேசிகள் அவசியம் உள்ளன:

அவர் மேலும் கூறினார் சிரியா பயங்கரவாதம் தொடர்பாகச் சரியான வழியில் சில முயற்சிகளை மேற்கொள்வது போல் தெரிகிறது. எனினும் இக்குழுக்கள் இன்னமும் இயங்குகின்றன போல் தெரிகிறது. அவர்கள் இக்குழுக்களுடன் தொடர்பு வைத்திருப்பதுடன், நிதியுதவி. இயக்க உதவி. தந்திரமான உதவி போன்றவற்றைப் புரிகின்றனர் சிரியா இவ்வகையில் நீண்டதூரம் செல்லவிருக்கிறது.

அகதிகள் முகாமில் இன்னொரு பக்கத்தில் ஈராக்கில் உள்ள அமெரிக்கர்களுக்கெதிரான மக்கள் அமைப்பில் பலஸ்தீனியர்கள் இணைவதைக் காணக்கூடியதாக இருந்தது. அல்-வஸீம் பள்ளிவாசலுக்கருகாமையில் இறங்கி இரு மாதங்களுக்கு முன்னர் கொலை செய்யப்பட்ட தாஹிர் அப்துல்லாஹ் றகுமானுக்கு அஞ்சலி தெரிவிக்கும் போஸ்டர் ஒட்டப்பட்டிருந்தது.

*பள்ளியின் முஅல்லிம் பின்வருமாறு கூறினார்:-*

பல பலஸ்தீனியர்கள் ஈராக்கிற்குச் செல்கிறார்கள் அத்துடன் சிலர் அங்கு கொலை செய்யப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் எவ்வாறு எல்லைகளைக் கடக்கிறார்கள் என்பது தெரியாது. சிரியா அரசாங்கம் அவர்களுக்கு உதவுவதில்லை. அவர்கள் தாமாகவே முயன்று செல்கிறார்கள்.

*மூலம் : டெலிகிராப் குறூப் லண்டன்*

## வெலிகம அல் - இஹ்ஸான் நலன்புரிச்சங்கம் நடாத்தும் இஸ்லாமிய அறிவுப் போட்டி

புனித ரமழானை முன்னிட்டு. வெலிகம அல் - இஹ்சான் நலன்புரிச் சங்கம். தென் மாகாண மற்றும் மொனராகல மாவட்ட ரீதியில் இஸ்லாமிய அறிவுப் போட்டியொன்றை நடத்தவிருக்கின்றது.

மாவட்ட ரீதியிலான நிலையங்களில் எழுத்துப் பரீட்சையாக நடைபெறவுள்ள இப்போட்டியில் ஆண், பெண் இருபாலாரும் சமய, வயது வித்தியாசமின்றி பங்கு பற்ற முடியும். போட்டி விண்ணப்பதாரிகளுக்கு நிறுவனத்தால் அனுப்பி வைக்கப்படவுள்ள புத்தகப் பொதி மற்றும் அல்குர்ஆனின் வள்ளுஹா முதல் அந்நாஸ் வரையான ஸூராக்கள் என்பவற்றிலிருந்து வினாக்கள் தயாரிக்கப்படவுள்ளன.

முதலாம், இரண்டாம், மூன்றாம் பரிசுகளாக முறையே பதினையாயிரம், பத்தாயிரம், ஏழாயிரத்து ஐநூறு ருபாவும் தலா ஆயிரம் ரூபா வீதம் பத்து ஆறுதல் பரிசுகளும் ஐம்பது சத வீதத்துக்குக் கூடுதலான புள்ளிகள் பெறுவோருக்கு ஊக்குவிப்பு பரிசுகளும் வெற்றியீட்டிய சகலருக்கும் சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன. வெற்றி பெறுவோருக்கான பரிசளிப்பு எதிர்வரும் நோன்புப் பெருநாளைக்கு முன்பாக நடைபெறவிருக்கின்றது.

போட்டியில் பங்கு பற்ற விரும்புவோர் தமது முழுப் பெயர், முகவரி, பிறந்த திகதி, கல்வித் தகைமை, அடையாள அட்டை இலக்கம், கையொப்பம் முதலிய விபரங்கள் அடங்கிய விண்ணப்பமொன்றை இவ்வாரத்திற்கு முன்பாக "படியுங்கள் வெல்லுங்கள்" 55 ஸ்ரீ வஜிரஞான மாவத்தை, கல்பொக்கை, வெலிகம எனும் முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும். போட்டித் தினம், இடம் போன்றன பின்னர் அறியத்தரப்படும்.


## Muslim Kural News Paper
முஸ்லிம் குரல் பத்திரிகை
181/1, Ananda Mawatha, Colombo -10

Advertisement Rates
விளம்பரக் கட்டண விபரம்

| Page Size பக்க அளவு | Colour or Black & White கலர் அல்லது கறுப்பு வெள்ளை | Rate கட்டணம் |
|---|---|---|
| Full Page முழுப் பக்கம் | 4 Colour (4 கலர்) | Rs. 60,000/- |
| | 2 Colour (2 கலர்) | Rs. 40,000/- |
| | Black & White (கறுப்பு வெள்ளை) | Rs. 30,000/- |
| Half Page அரைப் பக்கம் | 4 Colour | Rs. 30,000/- |
| | 2 Colour | Rs. 20,000/- |
| | Black & White | Rs. 15,000/- |
| Quarter Page கால் பக்கம் | 4 Colour | Rs. 15,000/- |
| | 2 Colour | Rs. 10,000/- |
| | Black & White | Rs. 7,500/- |
| Half - Quarter Page அரைக்கால் பக்கம் | 4 Colour | Rs. 7,500/- |
| | 2 Colour | Rs. 5,000/- |
| | Black & White | Rs. 4,000/- |
| 1 Column x cm 1 கலம் x செ.மீ. | 4 Colour | Rs. 150/- |
| 1 கலம் = 3 செ.மீ. | 2 Colour | Rs. 100/- |
| 1 Column = 3 cm | Black & White | Rs. 75/- |

Front Page - Extra 30% Premium Page - Extra 20%
முன் பக்கம் - மேலதிகம் 30% விருப்பத்திற்குரிய பக்கம் - மேலதிகம் 20%

சிறு விளம்பரங்கள் - Classified Advertisements

முதல் 20 சொற்களுக்கு Rs. 200/- மேலதிக சொல் ஒன்றுக்கு Rs. 10/-
First 20 words Rs. 200/- Per Additional word Rs. 10/-

விளம்பர முகாமையாளர். முஸ்லிம் குரல் பப்ளிகேஷன்
Advertisement Manager, Muslim Kural Publication


## ஏமாற்றங்கள்



*எங்கள் விடியல்களுக்காக*
*இரவு இரவாய் (ப்)*
*பாலங்கள் செய்தோம்*
*பாதி இரவிலே*
*பாலம் நொறுங்கி*
*பல பேர்கள்-*
*இறந்திருக்கக் கண்டோம்*

*பல நூறு*
*வாட்கள் சம்மட்டிகள் சகிதம்*
*எங்களது*
*எசமானர்களை நோக்கி*
*ஓடினோம்!*
*வழியிலே-*
*எதிரிகளின் இயந்திரத் துப்பாக்கிகள்*
*எங்களது*
*உடல் அங்கங்களைத் துளைக்க-*

*அப்பொழுது-*
*ஆயிரம் சம்மட்டிகளும்*
*வாட்களும் சரிய*
*புழுதியில்-உணர்வற்று விழுந்தோம்.*

*மீண்டும்-*
*உடல் அங்கங்களை*
*உணர்வுகளை-*
*தொலைத்தவர்களாக*
*எழுந்து நின்று பார்த்தோம்*
*எங்களது-*
*எசமானர்களின் பெயர்களை*
*உச்சரித்தபடி-*

*என்ன அதிசயம்!*
*அவர்கள் அக்கரையில்*
*(எங்களது நினைவுகளேயின்றி)*
*பளிங்குச் சுவர்களில்*
*தேவதைகளைச் செதுக்கிக்*
*கொண்டிருந்தார்கள்.*

*- மும்தாஸ் ஹபீர்*


## முஸ்லிம் குரலின் வளர்ச்சிக்கு பக்க பலமாக இருங்கள்

நமக்கான பத்திரிகைகளின் அவசியம் குறித்து நீங்கள் அறிவீர்கள். மக்களாகிய உங்களின் ஆதரவுடனேயே நமது பத்திரிகையை தொடர்ச்சியாக வெளிக்கொணர முடியும். சந்தாதாரர்களாகச் சேருங்கள்! சகோதர சகோதரிகளுக்கும் அறிமுகப்படுத்துங்கள்! பத்திரிகையை வாங்கி விநியோகியுங்கள்!

### சந்தா விபரம்!

3 மாதங்கள் - (12 இதழ்கள்) 250/-
6 மாதங்கள் - (24 இதழ்கள்) - 500/-
1 வருடம் - (48 இதழ்கள்) - 1000/-

(பிரதிகள் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும்)

காசோலையாகவோ, காசுக் கட்டளையாகவோ எமக்கு அனுப்பி வைக்கலாம். பத்திரிகையை விநியோகிக்கும் எமது ஊர் பிரதிநிதிகளிடமும் நேரடியாக கையளிக்கலாம். காசுக்கட்டளையாக அனுப்புவதாக இருந்தால் Muslim Kural Publiction Slave Island Post office எனக் குறிப்பிடவும்.


## வடக்கு கிழக்கு இணைப்பும் இடைக்கால நிர்வாக சபைத் தீர்வும் எரிந்து கொண்டிருக்கும் இனப் பிரச்சினையை அணைத்து விடாது!

விடுதலைப் புலிகளின் உள் நோக்கத்தைப் புரிந்து கொள்ளாமல் அவர்கள் கேட்பது போல வடக்கையும் கிழக்கையும் இணைத்து இடைக்கால நிர்வாக சபையை அவர்களிடம் ஒப்படைப்பதானது வடக்கு கிழக்கு வாழ் முஸ்லிம், சிங்கள மக்களுக்கு மட்டுமல்ல முழு நாட்டுக்கும் செய்யும் துரோகமாகும். அவ்வாறு ஐ.தே. முன்னணி அரசு கொடுப்பதாக இருந்தால் அதற்கு முன் வடக்கு கிழக்கு வாழ் முஸ்லிம், சிங்கள மக்களுக்கு விசத்தைக் கொடுத்து கொன்ற பின்பே அதைச் செய்ய வேண்டும். அதைத்தான் இந்த அரசு செய்ய விரும்புகின்றதா என்பது நாட்டு மக்களிடமுள்ள வினாவாகும்.

வடக்கில் 85 வீதமான தமிழர்கள் வாழ்கின்றனர். அவர்கள் அங்கு பெரும்பான்மை என்பதால் அதைப்பற்றி அவர்கள் பேசுவதில் யாருக்கும் ஆட்சேபனை இல்லை. ஆனால் கிழக்கில் அவர்கள் வெறும் 35 வீதம் மட்டும்தான். முஸ்லிம், சிங்கள மக்கள்தான் பெரும்பான்மையாக 65 வீதம் வாழ்வதால் கிழக்கு வாழ் முஸ்லிம், சிங்கள மக்களின் அபிலாசைகளை அரசு. அல்லது விடுதலைப் புலிகள் தூக்கி வீச முடியாது. கிழக்கு வாழ் பெரும்பான்மை மக்களின் அபிலாசைகளைக் கருத்தில் எடுத்து அவர்களின் உரிமைகளைக் கொச்சைப் படுத்தாது கிழக்கைத் தனியான அதிகார அலகின் கீழ் கொண்டுவர அரசு ஆவன செய்ய வேண்டும். வடக்குவாழ் முஸ்லிம்களை விடுதலைப்புலிகள் விரட்டிய விடயம் இன்னும் முஸ்லிம்களின் நெஞ்சை விட்டு அகலவில்லை. அதற்குள் மற்றுமொரு அராஜகத்திற்காக விடுதலைப்புலிகள் துடிப்பதைத்தான் இது காட்டுகின்றது.

மறைந்த முதல் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்தன அவர்களின் பதவிக்காலத்தில் இனப் பிரச்சினைத் தீர்வுக்காக ஒரு சர்வ கட்சி மகாநாடு நடாத்தப்பட்டது. அதில் கலந்து கொண்ட தமிழ் கட்சிகளைத் தவிர்ந்த ஏனைய எல்லாக் கட்சிகளும் இனம் கண்ட இறுதித் தீர்வு இலங்கையின் எல்லா மாநிலங்களும் தனித்தனி சமஷ்டி அதிகார அலகின் கீழ் வரவேண்டும் என்பதைத் தவிர வேறு எதுவுமில்லை.

அதேபோல, அடுத்துவந்த மறைந்த ஜனாதிபதி ஆர். பிரேமதாச அவர்கள் அன்று பாராளுமன்றத்தில் எஸ்.எல்.எப்.பீ. யைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர் மங்கள முனசிங்க அவர்களின் தலைமையின் கீழ் ஒரு பாராளுமன்றத் தெரிவுக்குழுவை நியமித்தார். அந்த தெரிவுக் குழுவில் தமிழ் கட்சிகள் தவிரவுள்ள அனைத்துக் கட்சிகளும் பங்கு பற்றின. அதே நேரம் சில தமிழ் கட்சிகளின் தனிப்பட்ட உறுப்பினர்கள் பலர் பங்குபற்றி இருந்தனர். அந்தத் தெரிவுக்குழுவில் கண்ட இறுதித் தீர்மானம் இலங்கையின் எல்லா மாநிலங்களும் தனித்தனி அதிகார சபையின் கீழ் வரவேண்டும் என்பதாகும்.

அன்று பாராளுமன்றத்தில் இருந்த தமிழ்கட்சிகளும் ஸ்ரீ.ல.மு.காவும் பேச்சுவார்த்தை நடத்தி ஒரு ஒப்பந்தத்தைச் செய்தனர் அதுவும் தனித்தனி அலகின் கீழ் வடக்கும் கிழக்கும் வரவேண்டும் என்பதுடன் வடக்கில் தனி அதிகார அலகொன்றும் கிழக்கில் இரண்டு அதிகாரஅலகுகள். அதில் ஒன்று முஸ்லிம்களுக்கான அதிகார அலகு என்பதாக கூறப்பட்டிருந்தது. இதே கருத்தைக் கொண்ட ENDLF யைச் சேர்ந்த ஸ்ரீனிவாசன் யோசனை ஒன்றும் அதே பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டது. இவைகளை எல்லாம் யாரும் இலகுவில் மறந்துவிட முடியாது. இவைகள் அத்தாட்சிப்படுத்தப்பட்ட உண்மைகள். இவற்றை எல்லாம் மறந்து வடக்கையும், கிழக்கையும் பிரிக்கமுடியாது. அது இணைந்த மாகாணம் என்று "மலையைக் கெல்லி எலியைப் பிடித்தது" போன்று புதிதாகக் கதைப்பதானது மக்களையும் வரலாற்றையும் ஏமாற்றும் முயற்சி ஒன்றாகும்.

இவ்வாறான வரலாற்று உண்மைகள் பச்சையாக இன்னும் இருக்கும் போது இன்று விடுதலைப் புலிகள் முஸ்லிம்களைக் கொச்சைப்படுத்திப்பேசுவதும் முஸ்லிம் தலைவர்களை அரசியல் பேசக்கூடாது என்று ஊடகங்களில் கதைப்பதும் அவர்களின் அராஜகப்போக்கை காட்டுகின்றது.

வடக்கு வாழ் முஸ்லிம் மக்களின் சொத்துக்களைப் பறித்துக் கொண்டு இரண்டு மணித்தியாலங்கட்குள் அவர்களைத் துரத்தியதையும், பள்ளிவாயலுக்குள் தொழுகைப் பாயிலும் நடுநிசி வேளையில் ஆழ்ந்த உறக்கத்திலும் இருந்த முஸ்லிம் ஆண் பெண்கள், குழந்தைகள், வயது முதிர்ந்த பெற்றோர்களை எல்லாம் வெட்டி, குத்தி கொன்ற சோக வரலாற்றை விடுதலைப்புலிகள் சொல்வது போல மன்னிப்போம் மறப்போம் என்பதை ஒரு பாவ மீட்சியாக ஏற்று இன்னும் முஸ்லிம்கள் புலிகளுடன் நேசக்கரம் நீட்டும் போது அதைத்தட்டிவிடாது இரு சமூகங்க ளுக்கிடையிலும் ஒரு நட்புப் பாலத்தை கட்டி எழுப்பத்துணை புரிவது தான் புலிகளுக்கு தற்போதுள்ள ஆரோக்கியமாகும்.

மௌலவி றபீயுடீன் (ஜமாலி)

இப்பத்திரிகை 181/1, ஆனந்த ... கொழும்பு 10 'முஸ்லிம் குரல் பப்ளிகேஷன்' இனால் அச்சிட்டு வெளியிடப்படுகிறது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# “அவர்கள் தங்கள் மேலாதிக்கத்தை நிலைநிறுத்த விரும்புகிறார்களே தவிர முஸ்லிம்களை மனிதர்களாகவே பார்க்கவில்லை.”

*யாழ்ப்பாணம் கிளிநொச்சி முஸ்லிம் மக்கள் ஒன்றியத் தலைவர்*

நாங்கள் யாழ்ப்பாணத்தில் இருந்து சகலவற்றையும் பறி கொடுத்து, 1990ம் ஆண்டு துரத்தியடிக்கப்பட்டோம். சுருக்கமாகச் சொன்னால் இரண்டு வயது பாலகனுடைய கழுத்தில் இருந்த சிறிய தங்கச் சங்கிலி ஒன்றைக்கூட, ஒரு பெண் புலி பறித்தெடுப்பதை கண்ணால் கண்டவர்கள் நாங்கள். வடக்கு மண்ணில் இருந்து துரத்தியடித்த தினத்தை எங்களால் மறக்கவே முடியாது.

இது எமது வரலாற்றில் புது விடயமல்ல. எங்கள் மூதாதையர்களை “முசன்” என்ற பிரதேசத்தில் இருந்து அன்று எழுதுவட்டுவான் என்ற பிரதேசத்துக்கு துரத்தி அடித்தனர். பின்னர் அங்கிருந்து சாவகச்சேரிக்கு விரட்டினர். அங்கிருந்து நல்லூருக்கு துரத்தி அடித்தனர். நல்லூர் கோயிலை விஸ்தரிப்பதற்காக; எங்கள் கிணற்றிற்குள் பன்றிகளை வெட்டிப் போட்டு யாழ்ப்பாண சோனகத்தெருவுக்கு விரட்டி அடித்தனர். இப்போது எங்கள் பரம்பரையை வடக்கில் இருந்து முற்றாகவே துரத்தி அடித்து விட்டனர். அத்தினத்தில் நாங்கள் ஆடுமாடுகளைப். போல் ஒரு மையித்தையும் சுமந்து கொண்டு கால்நடையாக கண்ணீர் விட்டே அழுது வந்தோம்.



அந்த மையித்து ஒரு வயது முதிர்ந்த மூதாட்டியாகும். பிறந்த மண்ணை விட்டு பிரியும் துயரத்தில் அந்த மூதாட்டி மரணித்தார். அந்த மையித்தை நாங்கள் வவுனியா பட்டணிச் சோலையில் கொண்டு வந்து அடக்கினோம். நாங்கள் பட்ட துன்பங்கள் சொல்லில் அடங்காது.

புலிகள் இதுவரை எங்களை மனதார அழைத்தது கிடையாது. புலிகள் எங்களை உண்மையாக அழைந்திருந்தால் எம்மிடம் வரியறவிடமாட்டார்கள். எங்களின் குடியிருப்புக்குத் தேவையான பொருட்களுக்குக் கூட அங்கு வரியை பலாத்காரப்படுத்தி பெற்றிருக்கின்றனர். அங்கு நாங்கள் வாழ்ந்த வீடுகள் 95 வீதமானவை முற்றாகச் சேதமடைந்திருக்கின்றன. விடுதலைப் புலிகளோ, அரசோ, முஸ்லிம் காங்கிரசோ எங்களது வீடுகளை புனரமைப்பதற்கு எவ்விதமான் நஷ்ட ஈடுகளையும் தருவதாக இல்லை. புலிகளும் அரசும் உலகத்திற்கு காட்டுவதற்காக சில விடயங்களைச் செய்தும், உஸ்மானியக் கல்லூரியை திறந்தும் மீண்டும் எங்களை ஏமாற்றப் பார்க்கின்றனர் என்கிறார் முன்னாள் கல்விப் பணிப்பாளரான அல்ஹாஜ் எம்.வை. அப்துல் கையும் அவர்கள்.

## மூதூர் டயரி

*16.10.2003*

சேகு அப்துல் காதர் நளீம் (31 வயது) ஜமால் ஜெஸீன் (22வயது) பலமாக புலிகளால் தாக்கப்பட்டு ஆஸ்பத்திரியில் அனுமதி. விறகுக்காகச் சென்ற இவர்களது வண்டில் இன்னும் புலிகளால் ஒப்படைக்கப்படவில்லை.

தாஹா நகர் பிரதேச மீனவர்களை மீன்பிடிக்க வரக்கூடாதென புலிகள் எச்சரிக்கை

முனைப்பகுதியிலிருந்து மூதூர் முஸ்லிம்கள் கட்டுமாணப் பணிகளுக்கு மண் அள்ளுவதற்குத் தடுக்கப்பட்டனர்.

*25-10-2003*

வர்த்தக விடயமாக பொலநறுவைக்குச் சென்று திரும்பிய எம். அசனார் (67) என்பவர் திருமலை காளிகோயில் முன்றலில் இளைஞர்களால் மிக மோசமாக தாக்கப்பட்டார். அவரது தாடி, மீசை என்பன மழிக்கப்பட்டதுடன், நிர்வாணமாக்கி அவமானப் படுத்தப்பட்டார். வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

*26-10-2003*

அன்று மூதூருக்கு தரைவழியாக வந்து கொண்டிருந்த முஸ்லிம்களை வழிமறித்து தாக்கியதுடன், அவர்களது உடமைகள் சேதமாக்கப்பட்டன.

*இச்சம்பவத்தில் தாக்கப்பட்டவர்களின் விபரம்*

முகம்மது ஹனிபா (60)
அசனார் லெப்பை ஜெயினுதீன் (50)
முகம்மது நியாஸ் (26)
முகம்மது நிம்ஸாத் (24)
நாகூர் பிச்சை சகீம் (32)

பொருளாதார இழப்புக்கள்

01. லொறி (அசோக் லேலண்ட்) இலக்கம் 227-6787 பெறுமதி 14 இலட்சம்
02. லொறியில் ஏற்றி வரப்பட்ட பொருட்களின் மொத்தப் பெறுமதி 26 இலட்சம்

*28-10-2003*

அல்-ஹாஜ் குஞ்சி முஹம்மது (74) என்பவர் அறபா பகுதியில் குளித்துக் கொண்டிருந்த போது புலிகளால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் காலிலும் மார்பிலும் பலத்த காயத்திற்குள்ளாகி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். தாக்குதலுக்குள்ளான போது இவர் நோன்பு நோற்றிருந்தார்.

கைரியா நகர் முஸ்லிம்களுக்குச் சொந்தமான நான்கு இயந்திரப்படகுகள் எரித்துச் சாம்பலாக்கப்பட்டன.


## விளம்பரம் சேகரிப்பாளர் தேவை

**நமது இலக்கை நோக்கிய பயணத்தில் நமக்கான பத்திரிகையை நிலைநிறுத்துவதற்கு ‘ விளம்பரங்கள்’ இன்றியமையாததாக உள்ளன.**

**பத்திரிகை தயாரிப்புச் செலவிற்கும், வீற்பனை வரவுத் தொகைக்கும் இடையிலான நஷ்டத்தை ஈடு செய்யும் பிரதான பங்களிப்பை விளம்பரங்கள் நிவர்த்தி செய்கின்றன.**

**ஊர், பிரதேச, மாவட்ட மட்டங்களில் உள்ள நமது சமூக ஆர்வலர்களிடமிருந்து விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.**

*ஆசிரியர் பீடம்*

*குறிப்பு : அடிப்படைச் சம்பளமும், நியாயமான கழிவும் தரப்படும்*

## முஸ்லிம் குரலுக்கு

நாட்டின் நாலா திசையிலிருந்தும் செய்தியாளர்கள் விற்பனை முகவர்கள் வேண்டப் படுகின்றனர்.
10 நவம்பர் 2003ந் திகதி இறுதித் திகதியாகும் அதற்கு முன் பூரண விபரத்துடன் தொடர்பு கொள்ளவும்

### ‘முஸ்லிம் குரல்’ பத்திரிகையில் பங்குபற்றுவதற்கான பதவி வெற்றிடங்கள்!

+ கம்பியூட்டர் டைப். செட்டர்
+ (டைப்செற்றிங்கில் விரைவும், பக்க அமைப்பில் அனுபவமும் இருக்க வேண்டும்)
+ ஒப்புநோக்குனர் (Proof Reader) (மொழித்தேர்ச்சியும் வாசிப்பு அனுபவமுள்ளவர்)

எமது நிறுவனத்தில் மேற்படி பதவிகளுக்கு வெற்றிடம் உள்ளன. முஸ்லிம் சமூகத்தின் மீதான உணர்வுள்ளவர்களிடமிருந்து பங்காற்றலை எதிர் பார்க்கிறோம். தகுதியான ஆண்களிடமிருந்து விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

விண்ணப்பிக்கும் பதவிக்குரிய அனுபவங்களும், சான்றிதழ்களும் உள்ளடக்கியதாக விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட்டு இருவாரங்களுக்குள் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைத்தல் வேண்டும்.

**விண்ணப்பங்கள் வந்து சேரவேண்டிய அகம்**

**ஆளணி முகாமையாளர்**
‘முஸ்லிம் குரல் பப்ளிகேஷன்’
இல. 181/1, மாளிகாகந்த வீதி,
மருதானை, கொழும்பு 10.


## உரசியது யார்?

*உரசியது யார்?*
*இங்கே*
*உறங்கிய.. தீக்குச்சிகளை...*

*ஆஹா!... அற்புதம்!...*
*வந்தது சமாதானம்!..*
*உள்ளத்தில் உவகை*
*உடுத்திக்கொண்டோம்*

*ஒப்பந்தத்தில்.. யெங்களை...*
*ஓரம் கட்டினாலும்..*
*ஒப்பந்தக்காரர்களுடன்...*
*ஒரு ஒப்பந்தம்...*
*இனிமேலும் முஸ்லிம்களுக்கு..*
*பிரச்சினைகள்..*
*என்றுமில்லை... யென்று..*

*நாள்கள் நகர்ந்தன*
*நகரங்கள்... யெரிந்தன...*
*பசுத்தோல்.. விலகியது...*
*பாதகம்... விளங்கியது...*
*உத்தரவாத... கோஷம்..*
*அது.. வேஷமானது..*

*பசித்தாலும்.. புல்லையுண்ணோம்..*
*என்று.. கோஷித்தவர்கள்*
*புசித்தால் முஸ்லிமே!..*
*உன்னைத்தான்... புசிப்போம்..*
*என்று... யிப்போ..*
*சீற.. துடங்கிவிட்டனர்...*

*தினமும்!.. நாஷங்களால்*
*எங்கள்.. முஸ்லிம் தேசம்!..*
*வேதனையால்.. வெதும்பி..*
*தீக்குளிக்கின்றது..*
*செந்நீரில்.. குளித்து..*
*கண்ணீரை.. அருந்துகின்றது...*

*அதோ.. மீண்டும்.. மீண்டும்...!*
*நாம் தீக்குள்ளிருந்து..*
*நற.. நற.. ஒலிகள்..!*
*கோரப்பற்களால்*
*கேடு மொழிகள்*
*நம் தேசியத்தை*
*கிழித்துப்போடும்...*
*தீய மொழிகள்..!*

*உரசியது யார்?*
*இங்கே*
*உறங்கிய.. தீக்குச்சிகளை..*

தேச புத்திரன்


# முஸ்லிம் குரல்
Muslim Kural صوت المسلم முஸ்லிம் குரல
181/1, Maligakanda Road, (White Park) Colombo - 10. Tel: 0777-389127, Fax: 01-2665831, E-mail: mm-s@col...


## முஸ்லிம்கள் மீது தொடரும் தாக்குதல்கள்!

இந்த ஆசிரியர் தலையங்கம் எழுதப்படுகின்ற தருணத்தில் கிண்ணியா - கந்தளாய் வீதியில் மூன்று முஸ்லிம்கள் தாக்கப்பட்டு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. ஏலவே மூதூர், கிண்ணியா மிக மோசமான நெருக்கடிக்குள் சிக்கித் திணறிக் கொண்டிருக்கிறது.

அம்பாறை மாவட்டத்தில் பாரம்பரியமாக விவசாயம் செய்து வந்த முஸ்லிம்கள் வட்டமடு வயல் காணிக்குச் சென்றபோது குண்டர்களால் தாக்கப்பட்டு நான்கு முஸ்லிம் விவசாயிகள் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இப்பிரதேசத்தில் முஸ்லிம்கள் பயிர்ச்செய்கையில் ஈடுபடுவதற்கான உத்தரவாதம் விடுதலைப்புலிகளுக்கும் சிவில் சமூகப் பிரதிநிதிகளுக்குமிடையே நடைபெற்ற சந்திப்பில் ஏற்றுக் கொள்ளப்பட்டதாக இருந்தது- இவ் உத்தரவாதத்தை காப்பதற்கான பொறுப்பிலிருந்து விடுதலைப்புலிகள் தவறிவிட்டதை மேற்காட்டிய சம்பவம் நமக்கு உணர்த்துகின்றது.

இதே நேரம் திருமலை மாவட்டத்தில் தொடர்ந்து நடைபெற்றுவரும் முஸ்லிம்கள் மீதான தாக்குதலை தடுத்து நிறுத்தும் வல்லமை இலங்கை பாதுகாப்பு படைக்கு இல்லை போல் தெரிகிறது. முஸ்லிம்களைப் பாதுகாக்கும் பொறுப்பிலிருந்து பாதுகாப்புப் படையும், அரசும் தொடர்ந்தும் தவறிவருவதை தொடரும் முஸ்லிம்களின் உயிர், உடமை இழப்புகள் காட்டுகின்றன. இதற்கு ஒரு தக்க சான்றுதான் திருமலை மல்லிகைத்தீவில் இராணுவ பாதுகாப்புடன் அழைத்துச் செல்லப்பட்ட முஸ்லிம்கள் மீதும் அவர்களின் உடமைகள் மீதான தாக்குதல் சம்பவமுமாகும்.

“26-10-2003ம் திகதி அன்று மூதூருக்கு பயணம் செய்ய முடியாது நிறுத்திவைக்கப்பட்ட வாகனங்கள் உத்தரவாதமளிக்கப்பட்ட 40க்கும் மேற்பட்ட இராணுவ வீரர்களின் தொடரணியுடன் அழைத்து வரப்பட்டபோது இடைவழியில் நல்லெண்ணம் கொண்ட சில தமிழ் மக்களால் மல்லிகைத் தீவு சந்தியில் கலகக்காரர்கள் கூடியிருக்கின்றனர். ஆகையால் முஸ்லிம்கள் பிரயாணத்தை மேற்கொள்ளாது திரும்பிச் செல்லுமாறு அறிவுறுத்தப்பட்டபோதும் இராணுவ வீரர்கள் இது தங்களது கட்டுப்பாட்டுப் பகுதி என்பதை முஸ்லிம்களுக்கு ஞாபகப் படுத்தி 100 வீதப் பாதுகாப்பு வழங்கும் கடமை எமக்கு உண்டு என்பதையும் மீண்டும் அறிவுறுத்தி பிரயாணத்தை தொடர வைத்தனர். வாகனத் தொடரணி மல்லிகைத்தீவை அடையும்போது சுமார் 20 பேர் கொண்ட கலகக்காரர்களால் முஸ்லிம்களின் வாகனங்கள் மறிக்கப்பட்டது. இந்நிலையில் இராணுவ அதிகாரி ஏனைய இராணுவ முகாம்களுடன் தொடர்பு கொண்டு மேலதிக இராணுவத்தினரை குறித்த இடத்திற்கு வரவழைத்துள்ளார். இந் நேரத்தில் இராணுவத்தினரின் எண்ணிக்கையை விட கலகக்காரர்களின் எண்ணிக்கை மிகச் சொற்பமாக இருந்தது. இந் நிலையில் அவ்விடத்திற்கு வந்த இராணுவ உயர் அதிகாரி இதற்கு மேல் உங்களுக்கு பாதுகாப்பளிக்க எங்களுக்கு முடியாது. ஆகவே, உடனடியாக வாகனங்களை திருப்பிச் செல்லுமாறு கட்டளையிட்டார். இச் சந்தர்ப்பத்தில் சிறிய வாகனங்கள் சிறு சேதத்துடன் திரும்பிச் சென்றன. லொறி திரும்ப முடியாத நிலையில் கலகக்காரர்களால் தீ வைத்து எரிக்கப்பட்டது.

இச் சம்பவத்தில் கலகக்காரர்களால் முஸ்லிம்கள் தாக்கப்பட்டபோது இராணுவத்தினர் எதுவித பாதுகாப்பும் வழங்காது நடக்கும் சம்பவங்களை வேடிக்கை பார்த்திருந்துவிட்டு லொறி எரிக்கப்பட்ட பின்பே ஆகாயத்தை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்து கூட்டத்தை கலைத்தனர். இந் நடவடிக்கை முன்கூட்டி எடுக்கப்பட்டிருக்குமாயின் இவ் விழப்புக்கள், சமூக மோதல்கள் தவிர்க்கப்பட்டிருக்கும். ஆனால் இவை திட்டமிடப்பட்ட நோக்குடன் முஸ்லிம்களின் அரசியல், பொருளாதார, சமூக நலன்களை கேள்விக்குள்ளாக்கும் வகையில் இரு பகுதியினராலும் மேற்கொள்ளப்பட்டதாகவே கொள்ளவேண்டியுள்ளது. “என அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் எமக்குத் தெரிவிக்கின்றன.

இவைகளை முன் நிறுத்தி பார்க்கும்போது நடைபெறும் சம்பவங்கள் - முஸ்லிம்களை பலியாக்குவதற்காக திட்டமிட்டு செய்யப்படுகிறதா என்கிற கேள்விகளை அங்குள்ள மக்கள் எழுப்புகின்றனர்.

குட்டக் குட்ட குனிபவனும் மடையன்; குனியக் குனிய குட்டுபவனும் மடையன் என்ற பழமொழிக்கொப்ப - அரசாங்கமும் புலிகளும் தொடர்ந்து முஸ்லிம்களின் பாதுகாப்பு விடயத்தில் விளையாடிக் கொண்டிருக்க முடியாது! அதே போல் முஸ்லிம்கள் தமது உரிமை, பாதுகாப்பு விடயத்தில் வேடிக்கையாக காலத்தை கடத்தவும் முடியாது!

தோழமையுடன்
பிரதம ஆசிரியர்.

## முஸ்லிம் தேச ஆவணக் காப்பகம்

முஸ்லிம் தேச ஆவணப்படுத்தலுக்கும், பாதிக்கப்பட்டவர்களின் நட்ட ஈட்டுக் கோரிக்கைக்குமான ஆவணக் காப்பகம் செயற்படத் தொடங்கி உள்ளது. 1983ம் ஆண்டுக்குப் பின்னர் அரச, தமிழ் இயக்கப் பயங்கரவாதத்தால் மௌத்தான, காணாமல் போன, அங்கவீனமுற்ற இலங்கை முஸ்லிம்களின் தகவல்களை ஆவணப்படுத்தவும், ஆவணக்காப்பகமையம் ஊடாக நட்ட ஈட்டுக் கோரிக்கையை வென்றெடுக்கவுமான செயற்திட்டம் ஒன்றிற்காக நமது மக்களிடமிருந்து தகவல்கள் சேகரிக்கப்படுகின்றன.

தற்போதைய தேசிய இனப் பிரச்சினைச் சூழ்நிலையில் முஸ்லிம்களின் இழப்பு எவ்வித பெறுமதியற்ற ஒன்றாகவும் கவனிப்பாரற்ற நிலையிலும் காணப்படுவதை நீங்கள் அறிந்திருப்பீர்கள். இதுவரையில் 1983ம் ஆண்டில் இருந்து “முஸ்லிம்கள்” என்பதற்காக 5000 க்கு மேற்பட்ட முஸ்லிம்கள் கொல்லப்பட்டிருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஆகவே எமது இழப்பை பெறுமதியுள்ளதாக மாற்றுவதற்கு எமது ‘இழப்பின் விபரத்தை ஆவணப்படுத்த வேண்டிய அவசியமுள்ளது. இந்த பெரும் சமூக வேலைத்திட்டத்தில் தங்களை இணைத்து கொள்வீர்கள் என்று நம்புகிறோம்.

எமது சகோதரர்களின் இழப்புக்களில் அக்கறையுள்ள சகல இயக்கங்களும், சமூக சக்திகளும் எமது கடந்த இதழ்களில் பிரசுரிக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பத்தை தயார் செய்து எமக்கு அனுப்பி வைக்குமாறு தங்களை சமூகத்தின் சார் பாக அழைக்கின்றோம்.

பாதிக்கப்பட்ட சகல மக்களினதும் குடும்பங்களுக்கு மாதிரி விண்ணப்பப்படிவம் கிடைப்பதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம். சமூக இயக்கங்கள் தனி மனித சக்திகள் இது தொடர்பாக எம்முடன் இணைந்து செயற்பட முன் வருமாறு வேண்டுகின்றோம்!

தகவல்களை அனுப்ப வேண்டிய முகவரி

முஸ்லிம் தேச
ஆவணக் காப்பகம்
181/1 மாளிகாகந்த வீதி, (வைற்பாக்)
கொழும்பு 10.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org